Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 24 ரூபா 18.00
දිනමුරසු වාරමලර் ஜூலை 28 - ஆக 03, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TA... ...முரசு 624



## வீட்டு வேலைகளில் வெந்து சாகிறோம்!

உண்மைச் சம்பவம்

## புலிகள் திறக்கப் போகும் புதிய பாதை எது?

அலசுவது - மதியூகி

## கறுப்பு ஜூலையும் கலையாத நினைவுகளும்

சிறப்புப் பார்வை

## மாதவனின் டடாய்! சினி விசிட்

## எண்களின் பலன்கள் எப்படி?

ஆரம்பம்

## வார விரதங்கள்

அ) தம்பதியர்க்குப் போஜனம் அளித்து இயன்றளவு தானம் செய்து, நவக்கிரகத்தை வலம் வந்து சந்திரனைத் தியானித்து, பச்சரிசி தானம் ( ஈய்து சிவ வழிபாடு செய்வது திங்கட்கிழமை விரதமாகும். இவ்விரதம் சோமவார விரதம் என்று பெயர்.

ஆ) அம்பாளையும் முருகனையும் வழிபடலாம். சிவப்பு அரளி, செம்பருத்தியால் பூஜிப்பது மேன்மை தரும். துவரை தானம் செய்யலாம். சுமங்கலிகளுக்கு மஞ்சள், குங்குமம், தாம்பூலம் கொடுக்கலாம். செவ்வாய்க்கிழமை விரதம் இது. அங்காரகாரகனை அவசியம் வழிபடுதல் வேண்டும்.

இ) புதன் கிழமை விரதம், கல்வி, ஞானம், தனம் பெருகும். புதக் கிரகத்தை வழிபடுவதுடன் ஸ்ரீமந் நாரயணனை வேண்டி அனுஷ்டிக்கப்படுவது இவ்விரதம். பச்சைப் பயறு கலந்த சர்க்கரைப் பொங்கலிட்டு நிவேதிக்கவும் அத்தோடு பழம், பொரி கடலையும் வைக்கலாம். சகஸ்ரநாமம் படிப்பது நன்று.

ஈ) வியாழக்கிழமை குருபகவானுக்குகந்த விரதம். இதைக் கடைப்பிடிப்போர்க்கு சகல காரியங்களும் சித்தியாகும். நலன்கள் பல பெருகும். குருவார விரதம். இதனால் குழந்தைச் செல்வம் உண்டாகும். திருமணத் தடை விலகும். தட்சிணாமூர்த்தி வழிபாடு மிக அவசியம்.

உ) வெள்ளிக்கிழமை விரதத்தால் சுக்ரனுக்குப் பிரீதியுண்டாகும். தொல்லைகள் நீங்கி நல்லது நடக்க இவ்விரத அனுஷ்டானம் அவசியம். இது முருகனுக்கும் அம்பாளுக்கும் உரியது. அவரவர் குல தெய்வ வழிபாடும் அன்றைய தினம் செய்ய வேண்டும்.

ஊ) சனி பகவானுக்கு மிக சிரேஷ்டமான நாள். சனி தோஷம் உள்ளவர்கள் இவ்விரதம் அனுஷ்டிக்கலாம். வெங்கடாஜலபதியை ஆராதிப்பதுடன் எள்ளெண்ணெய் விளக்கு ஏற்றி வழிபட நலம் கிடைக்கும்.

எ) சூரிய பகவானுக்கு பிரீதியான ஞாயிறு விரதம் அனுஷ்டிப்பதால் தேஜஸ்ஜொலிக்கும் சூரிய நமஸ்காரம் செய்து ஆதித்ய ஹிருதயம் படித்தல் நலம்.

-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர்- 06.

# ஆன்மீகம்



## தேவன் மகா இரக்கமுள்ளவர்

படைத்த கடவுள் எப்போதும் மனிதனைப் பாதுகாத்துப் பரலோகம் (சொர்க்கம்) சேர்க்கவே விரும்பினார் மனிதனோ பாசமுள்ள தேவனின் பண்பான கட்டளையைப் பணிந்து கொண்டு ஏற்காமல் மீறி நடந்தான். பரிதவித்தான். பதறிக்கொண்டே அவன் மெய் பாவத்தின் பிடியில் நிறைந்து அழிந்து போகிறான். இதனைக் கண்டு மனதுருகிய தேவன், இப்பூமிக்கு மனித ரூபத்தில் மீட்பராக, விடுதலை நாயகனாக இயேசுக் கிறிஸ்து என்னும் நாமத்தில் வந்தார். அவர் மனிதன் படும் சகல பாடுகளையும் தன்மேல் சுமந்து இரத்தம் சிந்தி, தன் ஜீவனைக் கொடுத்து அந்த மீறுதலினால் உண்டான பாவக் கயிற்றை சிலுவையில் அறுத்தெறிந்தார். சமாதானத்தைக் கொடுத்தார். உலகத்திலே வந்த எந்த மனிதனையும் பிரகாசிக்கச்செய்யும் மெய்யான ஒளியாக மூன்றாம் நாள் உயிருடன் எழுந்தார். சொர்க்கம் செல்லும் சரியான பாதையைக் காட்டினார். ஒவ்வொரு மனிதனையும் பார்த்து "என் பின்னே வாருங்கள்" என்று அழைத்தார். அவர் அழைப்பை ஏற்போம். அவர் மீண்டும் வருவார். அவர் பின் செல்வோம். அவர் வருகை மிக மிகச் சீக்கிரம்.

-பைபிள்

-சகோ. பன்னீர்செல்வம், யாழ்ப்பாணம்

## அல்லாஹ் மீதே நம்பிக்கை கொள்வோம்

"நிச்சயமாக நாம் மனிதனை மிக்க அழகிய அமைப்பிலே படைத்திருக்கின்றோம்" என்று அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

அல்குர்ஆன் - 95:4

அல்லாஹ் இவ்வாறு இறைமறையில் கூறுவது மனிதனின் ஆற்றலையும், மேன்மையையும், சிறப்பையும் பற்றித்தான்.

அல்லாஹ் மனிதனை சுதந்திரவானாகப் படைத்திருக்கிறான். அவன் சுதந்திரமானவனாகவே வாழப் பாடுபட வேண்டுமென சட்ட மேதை ஷாபியீ(ரஹ்) சொல்லுகிறார்கள்.

மனிதன் மேன்மையுடையவன். ஆற்றலுடையவன். அரிய சாதனைகளைச் சாதிக்கும் வல்லமையுடையவன். ஆகவே, நாம் இவற்றை எல்லாம் எமக்களித்த அல்லாஹ் ஒருவன் மீதே நம்பிக்கை கொள்ள வேண்டும்.

-எம்.சீ.கலீல், கல்முனை. - 05.

## கவிதைப் போட்டி இல.621



பரிசுக்குரிய கவிதை

### கொலை

ஓயாதவைகள்
ஓய்ந்து விட்டாலும்
கொலைக் கரங்கள்
ஓய்வதில்லை
அதுவும் சரிதான்
"கொண்டாரைக்
கொள்ளுமாம்
கொலை....." என்று
சும்மாவா
சொன்னார்கள்.

-அ.கா.மு.ரிஸ்வின், மூதூர் - 01.

### பாதகம்

துப்பாக்கியின்
எச்சிலில்
தன் அழுக்கைத்
துடைத்துக்கொண்டது
அரசியல்...!

-பெரியசாமி விக்னேஸ்வரன், ஹட்டன்.

### பட்டியல்

கொலைப்
பிரியரின்
கணக்கெடுப்புப்
பட்டியலில்
இன்னுமோர்
உயிரின்
சேர்ப்பு.

-எம்.ஏ.எம்.இன்ஷாப், கம்பளை.

### தற்காலம்

கயமை நிறைந்த
உள்ளங்கள்
புரியும்
காட்டுமிராண்டித்தனங்கள்
பட்டப்பகலில்
மர்மக் கொலை
இதுவே
இன்றைய கால
பரிதாப நிலை...!

-திருமலை நதார், ஜின்னாநகர்.

### சுடுகாட்டில் விடுதலையா?

மனிதம் தேடிய
பயணத்தில் வாழ்க்கைச்
சுடுகாட்டிலிருந்து
விடுதலை பெற்ற
முதல் ஜீவனோ?

-ஏ.எம்.றஜீஸாத், அட்டாளைச்சேனை - 16

### தண்டனை

எங்களை
எதிர்த்தால்.....
எதிரிக்கு
மட்டுமல்ல!
நண்பனுக்கும்
இதுதான்
தண்டனை!

-செல்லத்தம்பி பிரதீபன், இறக்காமம் - 07.

### உயிர் அறுவடை

ஜனநாய
கத்தின்
நடுவே
களையாக
முளைத்துப்
போன
தீவிரவாதம்
அறுவடை
செய்வது
இவர்கள்
போன்ற
அப்பாவி
மக்களின்
உயிர்களைத்
தான்!!!

-கமால்தீன்-அல்-ஆஸாத், ஏறாவூர் - 03.

## கவிதைப் போட்டி இல.624



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.08.2005

கவிதைப் போட்டி இல.624
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஜன(பிண) நாயகம்

"ஒத்துப்போகாதவர்களே!
ஒதுங்கி விடுங்கள்.
அன்றேல்
கொன்றொழிக்கப்
படுவீர்கள்"
-இதுவே இன்றைய
நம் தேசத்தின்
ஜனநாயகம்.

-அ.சந்தியாகோ, கண்டி.

### விதி

இடம் கொடுக்க
இதயமில்லை!
உயிர் எடுக்க
பயமுமில்லை!
சிறை இருக்கு
பயனுமில்லை!
இதைத் தடுக்க
யாருமில்லை!

-இரா.இராமகிருஷ்ணன், பொகவந்தலாவை.

### தீர்ப்பு

முன்பு
ஒருவனின்
உயிரைப்
போக்கியவன்
பின்பு - வேறு
ஒருவனால்
மாய்ந்து
கிடக்கிறான்.
தெய்வாதீனம்
தீர்ப்பு
சரி
நீதி.

-காமீம்.செய்னுலாப்தீன், கிண்ணியா - 05.

### சாட்சி

மாற்றுக் கருத்துக்களை
மதிக்கத் தெரியாத
மதிகெட்ட வேங்கையரின்
மனிதப் படுகொலைக்கு
மற்றுமொரு சாட்சி...?

-சங்கம ஹிஷாம், திருகோணமலை.

# உங்கள் பக்கம்

## இருள் சூழ்ந்த நிலையில் நஹ்மத்புரம் கிராமம்

புத்தளம், கற்பிட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட கொத்தாந் தீவு, றஹ்மத்புரம் கிராமம் சென்ற வருடம் தொடக்கம் இன்று வரை வீதி மின் விளக்குகளின்றி இருப்பதால் இக்கிராம மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். சென்ற வருடம் கற்பிட்டி பிரதேச சபையால் இக் கிராமத்திற்கு வீதி மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. அந்த மின் விளக்குகள் சில மாதங்களின் பின் தானாகவே செயலிழந்துள்ளன. இன்று வரை செயலிழந்தவை செயலிழந்த நிலையிலே காணப்படுகின்றன.

இதனால் இக் கிராமம் இருள் சூழ்ந்த நிலையில் காணப்படுகின்றது. இதனால் இரவு வேளையில் இக் கிராமத்திலுள்ள மக்கள் பிரயாணத்தை மேற்கொள்வதற்கு அஞ்சுகின்றனர். சென்ற வருடம் ஒன்பது மின் விளக்குகள் பொருத்தப்பட்டன. ஆனால் தற்போது மூன்று மின்விளக்குகள் மாத்திரமே இயங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

றஹ்மத்புரம் கிராமத்தில் சுமார் 75 குடும்பங்கள் இருக்கின்றன. இக் கிராம மக்கள் இரவு வேளைகளில் எவ்வித சிரமங்களுமின்றி இலகுவாகப் பிரயாணத்தை மேற்கொள்வதற்கு இவ் வீதி விளக்குகள் மிகவும் அத்தியாவசிய மானவையாக இருப்பதால் இக்கிராம மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு மின் விளக்குகளைப் பொருத்தித் தரசம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவண செய்யுமாறு பொது மக்கள் வேண்டுகின்றனர்.

-றஸீன் றஸ்மின், றஹ்மத்புரம்

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk



# வாசகர் சாலை

## முரசுக்கு மரியாதை

முரசே 'கண்ணுக்குள் நிலவாக' நான் உன்னைப் பார்த்த நாள் முதல் 'ப்ரியமுடன்'ள வாங்கிப் படிக்கின்றேன். 'துள்ளாத மனமும் துள்ளும்' படியாக வைக்கும் உன் ஆக்கங்கள் என்றும் இனிமை. உன் வருகை தினமும் 'உதயா' வாகும் சூரியனைப்போல தினமும் ஒளி வீசவும், பத்திரிகைகளில் நீ என்றும் 'கில்லி' ஆகவும், எப்போதும் இருக்க 'பூவே உனக்காக' அந்த 'விஷ்ணு' பகவானை வேண்டி உனக்காகக் காத்திருக்கின்றேன். 'நிலவே வா!'

-எல்.பிரகாஜினி, தம்பிலுவில் - 01.

## பயணம் தொடரட்டும்!

அன்பின் தினமுரசுக்கு!
வியாழன் தோறும் நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமை. அதிலும் அரசியல் தொடர்கள், சிறுகதைகள், சினிமாப் பகுதி என்பன சுவாரஸ்யமாக இருக்கின்றன. மென்மேலும் உனது வளர்ச்சி சிகரங்கள் தொட வேண்டும் என்று வாழ்த்துகிறோம். சிகரங்கள் நோக்கிய உனது பயணத்தில் சிறு கல்லாக இருப்பதில் எமக்கும் பெருமை. நன்றி.

-இனிய வாசகன், சிவபாலன், நிந்தவூர்.

## தயங்காதே முன்னேறு!!

தித்திக்கும் தினமுரசே!
அறிவுக்கு விருந்தான ஆக்கங்கள் பல சுமந்து வரும் உனக்கு முதற்கண் நன்றிகள். குறுக்கெழுத்துப் போட்டி, தகவல் பெட்டி, ஸ்போட்ஸ் போன்ற பகுதிகளில் பற்பல புதிய தகவல்களை வெளியிட்டு எம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறாய். அரசியல் பகுதியிலும் நயவஞ்சகர்களின் ஈனச் செயல்களை அம்பலப்படுத்துகிறாய். தடைகள் பல வந்த போதிலும் தயங்காமல் முன்னேற வாழ்த்துகிறோம்.

முரசின் அபிமான வாசகி, சிரோமி, நீர்கொழும்பு.

## சிக்கனம்?

வணக்கமுடன் முரசுக்கு!
எழுத்துக்களின் அளவில் ஏன் இந்தச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கின்றாய்? உன்னில் பல வித்தியாசமான ஆக்கங்கள் இடம்பெற்ற போதிலும் அவற்றை வாசிக்க முடியாமல் உள்ளோம். ஏனெனில் உன் எழுத்துக்கள் மிகவும் சிறியவையாக உள்ளன. இரவில் வாசிக்கவே முடியாத நிலை. எம்போன்ற வாசகர்களின் இக்கருத்தினைக் கவனத்தில் கொண்டு இனி வரும் வாரங்களில் வெளிவருவாய் என்று எதிர்பார்க்கிறோம்.
பிரியமுடன்.

-நடராஜன், கொழும்பு.


# பக்கச் சார்பாக இணைத்தலைமை நாடுகள் நடப்பதாக ஜனாதிபதி கடும் கண்டனம்

புலிகள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் சரிவரக் கடைப்பிடிப்பதற்குத் தேவையான அழுத்தத்தை டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை வகித்த நாடுகள் கொடுக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கேட்டுக் கொண்டார். அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கடந்த 25ஆம் திகதி கொழும்பில் சந்தித்துப் பேசியபோதே ஜனாதிபதி இக் கோரிக்கையை விடுத்தார். இணைத் தலைமை நாடுகள் கடந்த 19ஆம் திகதி விடுத்த அறிக்கை புலிகளுக்குப் பக்கச் சார்பாக இருப்பதாகவும் ஜனாதிபதி கண்டனம் தெரிவித்தார். கிழக்கில் நிலைமை மோசமடைவதற்குப் புலிகள் மாற்றுக் கருத்துக்கொண்ட அப்பாவிகளைக் குறிவைத்துக் கொல்வதும் பிள்ளைகளைக் கடத்துவதும்தான் காரணம். அத்துடன் இப்போது படையினர் மற்றும் பொலிஸாரையும் கொலை செய்யத் தொடங்கியுள்ளனர். துணைப் படைகளுக்கு அரசு உதவுவதாகக் கூறும் புலிகளின் கருத்தை இணைத் தலைமை வகிக்கும் நாடுகள் திருப்பிக் கூறுவதில் அர்த்தமில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கேற்ப துணைப்படையினரை நிராயுதபாணிகளாக்கும் வேலைகளை அரசாங்கம் திருப்திகரமாகச் செய்துள்ளதென்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். கிழக்கில் நிலைமை சீர்குலைந்து வருவதற்கு புலிகளே பிரதான காரணமென்றும் இதுகுறித்து சரியான மதிப்பீட்டை இணைத்தலைமை நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் புலிகள் அண்மைக் காலங்களில் மேற்கொண்ட மனித உரிமைகளுக்கெதிரான செயற்பாடுகள் பற்றி மனித உரிமைகான யாழ். பல்கலைக்கழகப் போதனாசிரியர்கள் சங்கம் அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றின் மூலம் அம்பலப்படுத்தியுள்ளது. நோர்வேயின் அழுத்தத்தின் பேரிலேயே பக்கச் சார்பான அறிக்கையில் ஏனைய இணைத் தலைமை நாடுகள் கைச்சாத்திட்டுள்ளனவென்றும் அதனாலேயே ஜனாதிபதி ஆத்திரமடைந்தாரென்றும் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். பல எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்து ஜனாதிபதி துணிச்சலுடன் சுனாமிப் பொதுக்கட்டமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். ஆனால் புலிகளோ தமிழ் மக்களின் நலன்கள் பற்றிக் கவலைப்படாமல் அதனை நிராகரித்துவிட்டு புதுப்புது நிபந்தனைகளை முன்வைக்கின்றனரென்றும் அரசியல் விமர்சகர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கிடையில் அடுத்த மாதப் பிற்பகுதியில் சீனாவுக்குச் செல்லவிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் இருதரப்பு விடயங்கள் தொடர்பாக பெய்ஜிங் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளாரென்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கையின் இறைமை, ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணுவதற்கு சீனா உதவியும் ஒத்தாசையும் வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவின் சக்திமிக்க நாடுகளான் இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகியவற்றின் உதவிகளைப் பெறுவதில் இலங்கை ஈட்டியுள்ள வெற்றி பாராட்டத்தக்கதென்றும் அவ் வட்டாரங்கள் கூறின.

# அரசாங்கம் உத்தரவு

அரசாங்க அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் தமது பிள்ளைகள் மற்றும் மிக நெருங்கிய உறவினர்கள் தேவையற்ற பிரச்சினைகளில் ஈடுபடாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அத்துடன் பாதுகாப்புக்கு வழங்கப்படும் அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவு உறுப்பினர்களையோ அல்லது பாதுகாப்புக்கென வழங்கப்படும் ஆயுதங்களையோ தேவையற்ற விதத்தில் பயன்படுத்தக்கூடாதென்றும் அரசாங்கம் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளது. அண்மையில் பிரதியமைச்சரொருவரின் மகன் கொழும்பு, தாஜ் சமுத்ரா, களியாட்ட விடுதியில் பிரச்சினைப்பட்டாரென்று வெளிவந்த செய்திகளையடுத்தே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.



சென்னை, திண்டுக்கல்லில் இந்துசமய பிரசாரகர்களுக்கான மேலதிகப் பயிற்சி பெற்றுத் திரும்பிய மலையக இளைஞர், யுவதிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது. இங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும்போது பிடிக்கப்பட்ட படம்.

# போர் மூளாது - அமெரிக்கத்தூதுவர்

சுனாமி மீள்கட்டுமானப் பணிகளை அமுல்படுத்துமாறும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் சரிவரக் கடைப்பிடிக்குமாறும் உதவி வழங்கும் சமூகம் அண்மையில் பாரிய அழுத்தம் மேற்கொண்டிருப்பதால், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் மீண்டும் யுத்தம் வெடிக்கக் கூடிய அறிகுறி எதுவுமில்லையென்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லான்ஸ்ரெட் தெரிவித்தார். சுனாமிப் பொதுக்கட்டமைப்பு யோசனையை முன்வைத்தது இலங்கை அரசும் புலிகளும்தான். ஆனால், மீள்கட்டுமானப் பணியின் அவசியத்தையும் இருதரப்பும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையையும் கவனத்தில் கொண்டே உதவி வழங்கும் நாடுகள் அதற்கு ஆதரவளித்தன. சட்டக் கட்டுப்பாடுகள் இருப்பதால் சுனாமி மீள்கட்டுமானப் பணிகளுக்கு அமெரிக்கா உதவி வழங்க முடியாது. வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் இருதரப்புத் திட்டங்களுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எவ்விதத் திட்டத்தையும் அமெரிக்கா மேற்கொள்ளாது என்றும் அவர் கூறினார்.

# ஜேர்மனியில் தமிழர்களின் கூட்டத்தைக் குழப்ப முயற்சி

ஜேர்மனி, ஸ்டுகார்ட் நகரில் கடந்த 17ஆம் திகதி தான் உரையாற்றிய கூட்டத்தைக் குழப்ப புலி இயக்கத்தவர்கள் முனைந்ததாகவும் ஆனால் அது நிறைவேறவில்லை என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி.ஆனந்தசங்கரி தெரிவித்தார். இலங்கைத் தமிழர்களுக்கென நாளாந்தம் ஒரு மணித்தியாலம் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வந்த லண்டனிலுள்ள தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு (ரி.பி.சி.) வழங்கப்பட்டு வந்த வசதிகள், புலிகளின் அழுத்தம் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

# மலையகம், வடக்கு, கிழக்கென்று பாரபட்சம் காட்டப்படுவதில்லை

## – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

இலங்கையில், இந்து மதத்தைப் பாதுகாத்து, இந்துக்கள் இந்துக்களாக வாழக் கூடியதொரு காத்திரமானதும், நன்மையானதுமான சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபடுவதற்கான சிறப்புப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டுள்ள நீங்கள், இதனை ஒரு தொழில் வாய்ப்பாக மாத்திரம் கருதிவிடாமல் சமூகப் பணியாகக் கருதி செயற்பட வேண்டுமென்று சென்னை, திண்டுக்கலில் இந்துப் பிரசாரகர்களுக்கான மேலதிகப் பயிற்சிகளைப் பெற்று நாடு திரும்பியுள்ள மலையக இளைஞர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தின் போது கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சரும், மற்றும் கல்வி வாழ்க்கைத் தொழிற்பயிற் சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். இது தொடர்பான வைபவம் அண்மையில் அமைச்சில் இடம் பெற்றது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இந்துமதப் பிரசாரகர்களுக்கான செயற் திட்டத்தில் மலையக இளைஞர், யுவதிகள் உள்வாங்கப் படவில்லை என்றொரு கருத்து ஆங்காங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அரசி யல் காரணங்களுக்காகவா அல்லது உள்நோக்கங்களுக்காகவா இவ்வாறான கருத்து முன்வைக்கப் படுகிறதாவென எனக்குத் தெரியவில்லை. இக்குற்றச்சாட்டில் உண்மையான, நியாயமான காரணங்கள் எதுவுமில்லை. இந்த அமைச்சின் பொறுப்புக் கள் வடக்கு-கிழக்குக்கு மாத்திரம் உரித் தல்ல; அது தேசிய ரீதியிலானது. நாடு தழுவியுள்ள சமயம் சார்ந்த விடயங்களில் பாகுபாடுகள் கிடையாது. குறிப்பாக மலையகப் பகுதிகளில் சமயம் சார்ந்த தெளிவின்மையை போக்குவதற்கு மலையக இளைஞர்கள் முன்வந்துள்ளமை மகிழ்ச்சியை அளிக்கிறது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சி. அதே நேரம் வாய்ப்பு, ஆர்வம், முயற்சி மற்றும் வேலைத் திட்டங்கள் காணப்படும் இடங்களில் நிச்சயமாக இச் செயற்திட்டத்தை முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் கூறினார். இவ்வைபவத்தில் இந்துசமய விவகாரங்களுக்கான ஆலோசகர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், அமைச்சின் செயலாளர் கே.மகானந்தன் உட்பட அமைச்சு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ‘இரும்புத் திரை’க்கு அப்பால் சொல்ஹெய்மால் கூடச் செல்ல முடியவில்லை

## -லண்டனில் ஆனந்தசங்கரி

“கிளிநொச்சிக்குப் பல தடவைகள் நீங்கள் விஜயம் செய்துள்ளீர்கள். எப்போதாவது ‘இரும்புத் திரை’க்கு அப்பால் சென்று அங்குள்ள சிறைக்கூடங்களையும், சித்திரவதை முகாம்களையும் பார்த்திருக்கிறீர்களா? பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் இம் முகாம்களில் பெரும் சித்திரவதைகளை அனுபவிக்கின்றனர்” என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி லண்டனில் இலங்கைத் தமிழர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார். லண்டன் தொடர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மரணமடைந்த தனது பெறாமகள் சனுஜா பார்த்தசங்கரியின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள அவர் லண்டனுக்கு வருகை தந்திருந்தார். அவர் மேலும் கூறியதாவது:

:- சுனாமிப் பேரழிவின் போது பாணந்துறை முதல் தென்பகுதியின் உட்கிராமங்கள் வரை என்னால் பயணம் செய்ய முடிந்தது. ஆனால் எனது முன்னைய தொகுதியான கிளிநொச்சிக்கு விஜயம்செய்ய முடியவில்லை. நான் நாடு பிரிக்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கிறேன். ஐக்கிய இலங்கையையே பெரும்பாலான தமிழர்கள் விரும்புகிறார்கள். இந்தியப் பாணியிலான அதிகாரப் பகிர்வே இலங்கையில் மேற்கொள்ளப்பட வேண்டும். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பலர் வரவேற்றனர். ஆனால், அது பெரும் முட்டாள்தனமான காரியம். இதனால்தான் அரசியல் வேலையென்ற போர்வையில் புலிகள் யாழ்ப்பாணத்தைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். சுனாமிப் பொதுக் கட்டமைப்புத் தேவையில்லையென்று நான் வலியுறுத்தினேன். அப்படி பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்துவதானால், புலிகள் கொலைகள், ஆட்கடத்தல்கள், சிறு பிள்ளைகளைப் படையில் சேர்த்தல் போன்ற விடயங்களைக் கைவிடுவதாகவும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஜனநாயகத்தை உறுதிசெய்ய வேண்டுமென்றும் உத்தரவாதமளிக்க வேண்டுமென்றும் கூறினேன். அரசாங்கம் இதனை வலியுறுத்தியிருந்தால், சகல உதவி வழங்கும் நாடுகளும் இதனை ஏற்றுக் கொண்டிருக்கும் என்றும் சங்கரி கூறினார்.

# கடற்படைப் படகின் மீது சரமாரியான வேட்டுகள்

திருமலை, கொட்டியாறுப் பகுதியில் சென்று கொண்டிருந்த கடற்படைப் படகின் மீது புலிகள் முப்பது, நாற்பது தடவைகள் வேட்டுகளைத் தீர்த்தனரென்று திருகோணமலைக் கடற்படை அதிகாரிகள், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்துள்ளனர். கடந்த 26ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றதாகப் புகாரில் தெரிவிக் கப்பட்டுள்ளது. விசாரணை செய்வதாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

# கலாபூஷண விருதுக்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் வழங்கப்பட்டுவரும் ‘கலாபூஷணம்’ விருதுக்கென தகைமைமிக்க தமிழ் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஏற்கனவே விண்ணப்பங்கள் பல கிடைத்துள்ளபோதிலும், நாடளாவிய ரீதியில் பரந்துபட்ட வகையில் விருதுக்கான தமிழ் கலைஞர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்துசமய அலுவல்கள் அமைச்சரும் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் எண்ணத்துக்கமைய, விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் காலவரையறை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், ஊடகத்துறை போன்ற பல்வேறு துறை சார்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைஞர்கள் இவ்விருதுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்படிவங்கள் மாவட்ட செயலகங்களின் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபரின் ஊடாக, அவரது உறுதிப்படுத்தலுடன் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பதாக, பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248 1/1, காலி வீதி, கொழும்பு - 04 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# லண்டனில் புலிகளின் கிரிக்கெட் விழாவுக்குத் தடை

பிரிட்டிஷ் தமிழ்ச் சங்கம் லண்டனில் ஜுலை மாதம் 31ஆம் திகதி நடத்தவிருந்த கிரிக்கெட் விழாவுக்கு லண்டன் நகர பொலிஸார் தடை விதித்துள்ளனர். புலிகளின் முகவரமைப்பென நம்பப்படும் பிரிட்டிஷ் தமிழ்ச்சங்கம், வருடா வருடம் இவ் விழாவை நடத்தி வந்ததாகவும், இவ் விழாவின் மூலம் 5கோடியே 25இலட்சம் ரூபாவைத் திரட்ட முடியுமென்றும் அதன் தலைவரான ஏ.சி.சாந்தன் என்பவர் தெரிவித்தார். 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற இதுமாதிரியான கிரிக்கெட் விழாவின் போது தமிழ் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் காரணமாக 1 கோடியே 40 இலட்சம் ரூபா பெறுமதியான பொதுச் சொத்துக்கள் அடித்துச் சேதப்படுத்தப்பட்டிருந்தன. பிரிட்டனில் தடைச்செய்யப்பட்ட புலிகளின் முகவர் அமைப்பே இவ்விழாவுக்கு பொறுப்பென்பதாலும் பிரிட்டிஷ் உளவுத் துறையினர் இதனைத் தடை செய்துள்ளனர். இதே வேளை லண்டனில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்பு சம்பவங்களும் இத்தடை உத்தரவுக்கு காரணமென்று கூறப்படுகிறது. கில் போர்ட் புருக் கவுன்சில் மைதானத்திலேயே இவ் விழா நடைபெற இருந்தது குறிப்பிடத்தக்கது ஏற்கனவே ஐக்கிய தமிழ் ஸ்தாபனம் என்ற பெயரில் இயங்கி வந்த இவ்வமைப்பு தடை செய்யப்பட்டதையடுத்தே பிரிட்டிஷ் தமிழ் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. புலிகளுக்கும் இவ் விழாவிற்கு வருகை தரும் தமிழ் இளைஞர்களுக்கும் வடக்கில் உள்ள தொடர்புமே இத்தடைக்கு காரணமாகும். இதே வேளை லண்டனில் சட்ட விரோத நடவடிக்கைகள் பற்றியும் பிரிட்டிஷ் அரசு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்துக் குருமார் ஒன்றியம் மகஜர்

தமது தேவைகள், வேலைத்திட்டங்கள் கோரிக்கைகள் குறித்து இந்துகுருமார் ஒன்றிய நிர்வாகிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான நடராஜா மதனராஜா ஊடாக யாழ். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைமைப் பணிமனையில் வைத்தே ஒன்றிய நிர்வாகிகள் மகஜரை கடந்த 25ஆம் திகதி மாலை கையளித்தனர்.



சர்வதேச இந்துக்குருமார் ஒன்றிய நிர்வாகிகளுடன் மதனராஜா, அவர்களும் யாழ்.மாவட்ட இந்து கலாசார இணைப்பதிகாரி நாகராஜாவும் காணப்படுகின்றனர்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# முரசம்

## சாணேறி - முழம் சறுக்குகிறது!

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

1983ஆம் ஆண்டு ஜூலைப் படுகொலைகள் நடைபெற்று இருபத்திரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டபோதும், அந்தக் கோரச் சம்பவத்தின் வடுவும், வலியும் கொஞ்சமும் குறைந்ததாகத் தெரியவில்லை. அதுவொரு தற்செயல் சம்பவமாக இருந்திருந்தால், ஒருவேளை ஜீரணித்துக்கொண்டிருக்க முடிந்திருக்கும். மாறாக, அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் ஜனாதிபதியாகயிருந்த இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் தமிழ் மக்களுக்கு எதிராகத் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனச்சங்காரம் என்பதால் கடைசித் தமிழன் மடிந்து போகும் வரை மறக்கப் போவதில்லை.

தமிழ் இனத்தின் பெயரால் படுகொலையாகிப் போனவர்கள் அனைவரையும் மரியாதையோடு நினைவு கூர்வது அவசியமாகும். அன்றைய நாள் நினைவுகளோடு சமகால நடப்புகளை இணைத்துப் பார்க்கின்றபோது அன்று பலிகொள்ளப்பட்ட தமிழினம் இன்றும் பலியெடுக்கப்படுகிறது. அன்று பேரினவாதத்தால்; இன்று சொந்த இனத்தால் என்பதுதான் துரதிர்ஷ்டவசமானதாகும்.

இந்தச் சிறு சாட்சியம் போதும், விடுதலைப் போராட்டம் விதி வசத்தில் அடிபட்டுப் போய் சகோதரப் படுகொலையெனும் சாக்கடைக்குள் வீழுந்து விட்டுள்ளது என்பதை உணர்த்துவதற்கு.

"நக்கிறதுக்கு செக்கென்ன, சிவலிங்கமென்ன?" என்பது போல் சகோதரப் படுகொலைகளுக்கு யுத்தமென்ன, சமாதானமென்ன? எல்லாம் ஒன்றுதான் என்றாகிவிட்டது. இதில் துர்ப்பாக்கியம், கொலைப்பட்டியல் நீண்டு கொண்டு செல்வதுதான். இவ்வாறான கொலைகளின் போக்கு தற்போது நிலவும் யுத்தமுமில்லாத சமாதானமுமில்லாத மந்தமான நிலையை நிஜமான யுத்தத்துக்குள் தள்ளி விடுமோ என்ற பயப்பீதியை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. தலைமை வெறியினால் பலியெடுக்கப்பட்ட அப்பாவி ஆத்மாக்களின் சாபமோ தெரியவில்லை. எது நடந்துவிடக்கூடாது என்று நாமெல்லாம் அஞ்சுகிறோமோ, அதையே நடத்திக்காட்டும் முயற்சிகள் மிக அதிகமாகவே நடைபெற்று வருகின்றன. மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் இழுத்துப் பிடிப்பார்களா? முகம் குப்புற வீழுந்து மூக்குடைபடுவார்களா? பொறுத்திருந்து அவதானிப்போம்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இன வக்கிரத்துக்குக் காணிக்கையாகும் மத விக்கிரகங்கள்

**நரன்**

புத்ததாசா கோபத்தால் சுடுதண்ணியாகக் கொதித்துக் கொண்டிருந்தான். நேற்று இராத்திரி நடந்த சம்பவம் அவனைச் சூடேற்றிக் கொண்டிருந்தது.

"சீ எவ்வளவு பெருத்த அவமானம். கெளதமன் காரியாலயத்திலுள்ள எல்லாருக்குமே துப்புரவில்லாத ஆட்களென்று எங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருப்பான். உனக்கு வீட்டைத் துப்புரவாக வைத்திருக்கத் தெரியவில்லையே" - மனைவி சோமாவதியைப் பார்த்துப் பொரிந்து தள்ளினான்.

"நான் என்ன செய்ய? நான்தான் வீடெல்லாம் எயர் பிரெஸ்ஸர் அடித்திருந்தேன். எங்கேயோ இருந்து வந்த அந்தப் பெரிய இலையான் போயும் போயும் கெளதமனின் சாப்பாட்டுக் கோப்பைக்குள்ளா போய் விழவேண்டும்? அந்தாள் சாப்பாட்டை அப்படியே விட்டிட்டு கையைக் கழுவிட்டு எழும்பிப் போயிட்டுது. எவ்வளவு அவமானம்?" சோமாவதி அழாக் குறையாகக் கூறினாள்.

நடந்தது இதுதான். புத்ததாசா, கெளதமனை விருந்துக்கென வீட்டுக்கு அழைத்திருந்தான். சூடேற்றும் பானங்கள் பரிமாறப்பட்ட பின்னர் புத்ததாசா, அவனது இரு பிள்ளைகளான பிரசன்னா, சாணக ஆகியோருடன் கெளதமனும் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினான். சோமாவதி உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள். திடீரென்று எங்கிருந்தோ வந்த பெரிய இலையானொன்று கெளதமனின் சாப்பாட்டுக் கோப்பைக்குள் போய் அமர்ந்துவிட்டது. சீயென்று அருவருப்போடு அவன் சாப்பாட்டு மேசையை விட்டு எழுந்து விட்டான். புத்ததாசா இதற்காக கெளதமனிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டான்.

"மச்சான், மன்னித்துக்கொள். எங்கட வீட்டைச் சுற்றியிருக்கிற மதிலுக்கு இடதுபுறமாகக் குப்பை பக்கியொன்று இருக்கிறது. இந்த இடத்தில் குடியிருக்கிற எல்லாரும் அங்கைதான் குப்பையைக் கொண்டு வந்து கொட்டுவாங்கள். இரண்டு நாளைக்கு முனிசிப்பலிலிருந்து வந்து குப்பை அள்ளவில்லையெண்டால் இருக்க முடியாது. ஒரே நாத்தம். குப்பையில் வந்திருக்கிற இலையான்களும் எங்க வீட்டுக்குள்ள வருது. என்ன செய்யலாம்? ஒண்டுமே செய்ய முடியேல்லை" - அழாக்குறையாகச் சொன்னான் புத்ததாசா.

"ஏன் மச்சான் உன்ர பிரண்ட் பந்துசேன தனியார் ரி.வி.யில தான் வேலை செய்யிறான். அவனிட்ட சொன்னா இத ரி.வி.யில காட்டி மாநகரசபை சுகாதாரப் பகுதியைக் கிழிகிழியெண்டு கிழிப்பான்தானே. அதோட குப்பைகளை ஒவ்வொரு நாளும் அள்ளுவாங்கள். அல்லாட்டி இந்த இடத்தைவிட்டு வேறெங்கேயாவது குப்பை பக்கியைக் கட்டுவான்கள் தானே."

"மச்சான் அந்தத் தனியார் ரி.வி.யில இருந்து வந்து படம் பிடிச்சாங்க. ரி.வி.யிலயும் காட்னாங்க. பொறுப்பான அதிகாரிகளே இது உங்கள் கவனத்துக்கு. குப்பைகள் அகற்றப்படும்வரை நாங்கள் அவதானிப்புடன் இருப்போம் என்றும் ரி.வி.யில முழங்கித் தள்ளினாங்கள். ரி.வி.யில எங்கட வீட்டையும் பக்கத்துக் குப்பையையும் காட்டினதுதான் மிச்சம். ஒன்றுமே நடக்கேல்ல" - சொல்லும்போது பலத்த பெருமூச்சு விட்டான் புத்ததாசா. தொடர்ந்தான் புத்ததாசா. "மச்சான் மாநகரசபை அதிகாரிகளைக் கண்டு பேசினனான். மேயருக்கும் உதவி மேயருக்கும் கூட முறைப்பாட்டுக் கடிதங்கள் அனுப்பினன். இங்கிலீஸ் பேப்பரில் கூட எழுதிப் போட்டன். பிரயோசனமில்லை" மீண்டும் அலுத்துக் கொண்டான் புத்ததாசா.

கெளதமன் கெக்கலி கொட்டிச் சிரித்தான்.

"நான் உனக்கு ஒரு யோசனை சொல்லித்தாரன். அதன்படி நட. இந்தக் குப்பைகளை அகற்ற உனக்குக் கடவுளின் ஆசீர்வாதம் கிட்டும். எட மடையா! அரசியல், சமூக, சமய, பொருளாதார பலங்களில் ஏதாவது இருந்தால்தான் இந்தச் சமூக அமைப்பில் எதையும் சாதிக்கலாம், வெறுமனே புகார் சொல்றதாலயோ, பெட்டிசன் அடிக்கிறதாலயோ உன்னால் ஒன்றும் செய்யேலாது. நாளைக்கே போய் இந்தச் சனசமூக நிலையக்காரங்களைச் சந்தி. எமது குறிச்சியில் இருக்கிற விடயங்கள் பற்றிப் பேச வேணும். ஒரு கூட்டத்தைக் கூட்டுவோம் எண்டு சொல்லு. இனி உன்ர கெட்டித்தனம்" என்றான் கெளதமன். அப்போதுதான் புத்ததாசாவின் மூளையில் மின்னல் வெட்டியது. ஞானம் பிறந்தது. ஊரிலுள்ள பிரமுகர்கள் ஐம்பது, அறுபது பேர் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளுக்குப் பின்னர் புத்ததாசா எழுந்து பேசினான்.

"எமது ஊரில் வரவர ஒழுக்கமும் சீலமும் கெட்டுக் கொண்டே வருகிறது. இளைஞர்கள் மட்டுமல்ல, மாணவர் கள்கூடப் போதைப் பொருள் பாவிக்கிறார்கள். மதுபானம் அருந்திவிட்டு வீதிகளிலும் வீடுகளிலும் குழப்பம் செய்கிறார்கள். பிள்ளைகள் பெற்றோர்களை மதிப்பதேயில்லை. எமது ஊரில் ஒரு தம்ம பாடசாலை கூட இல்லை. வணங்குவதற்கு பன்சல இல்லை. நாங்கள் அரை மைலுக்கு அப்பாலிருக்கும் விகாரைக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. முதலில் தம்ம பாடசாலையை ஆரம்பிப்பது பற்றியும் பிறகு வசதியான ஓரிடத்தில் வணங்குவதற்கு வசதியாக புத்தர் சிலை அமைப்பது பற்றியும் ஆலோசிக்க வேண்டும் என்றான்.

புத்ததாசாவின் பேச்சுக்கு ஏகமனதான வரவேற்பு. ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார்?

புத்ததாசா இறுதி அஸ்திரத்தை வீசிவிட்டுத் தொடர்ந்தான். முதலில் தம்ம பாடசாலையைப் பற்றி யோசிப்போம். எனது நண்பன் சிறிசேனாவின் வீட்டுக்குப் பின்புறம் வசதியான இடமிருக்கிறது. அதில் ஒரு கொட்டில் அமைத்துக் கொள்வதற்கு அவர் அனுமதி தரத் தயாராக இருக்கிறார். கதிரை, மேசை மற்றும் உபகரணங்கள் வாங்கவும் போதிக்கும் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கவும் காசு தேவை. அதற்கென மூவாயிரம் ரூபாவை நான் இப்போதே தரத் தயாராக இருக்கிறேன். நீங்கள் தம்ம பாடசாலைகளுக்கான நிதி சேகரிப்பை ஆரம்பியுங்கள் என்று கூறி மூவாயிரம் ரூபாவை முதன் முதலில் போட்டு நிதியத்தை ஆரம்பித்து வைத்தான். வேறு சிலரும் பின்னர் காசு தருவதாகக் கூறித் தமது பெயர்களைப் பதிவு செய்து கொண்டார்கள். புத்ததாசா நாசூக்காக விட்ட அஸ்திரம் சரியான இடத்தில் தைத்திருக்கிறது. அவன் தொடர்ந்தான். "ஒரு சிறு புத்தர் சிலையை யாவது வைத்து வணங்குவதற்கு ஒரு சிறு வணக்கஸ்தலம் அமைத்துக்கொள்ள வேண்டும். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் எனது வீட்டு முற்றத்தின் முற்பகுதியில் வடக்குப் புறமாக நானே ஒரு சிறு புத்தர் விக்கிரகமொன்றினை வைத்து அதனை நிர்மாணிக்கிறேன்" என்றான்.

அவனது இரண்டாவது யோசனைக்கும் ஏனமனதான ஆதரவு. பின்னால் பேசியவர்களெல்லாம் புத்ததாசாவின் காருண்யத்தையும் சீலத்தையும் வெகுவாகப் புகழ்ந்து பேசினார்கள். மறுநாளே வேலை ஆரம்பமாகியது. குப்பைகள் கொட்டப்படும் இடத்துக்கு வடக்குப் புற மதிலில் சுமார் இரண்டரை அடி தூரம் இடிக்கப்பட்டு அவனது காணிக்குள்ளேயே புத்தர் சிலை அமைக்கப்பட்டது. அவன் மின் விளக்குகளையும் பொருத்தி விட்டான்.

"சீ, புத்தர் சிலைக்குப் பக்கத்தில் குப்பையா? குப்பை பக்கியை இங்கிருந்து வேறிடத்துக்கு மாற்ற வேண்டும்."

> **கடவுள் சிலைகளைக் கூடக் கண்ணியப்படுத்த விரும்பாத கயவர்களின் தீய நோக்குகளை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். புத்தர் சிலைக்குக் குண்டு வீசப்பட்டிருந்தால் அது பாரிய பிரச்சினைகளை, இன மோதல்களைத் தூண்டியிருக்கும். எனவே அவற்றைத் தவிர்ப்பதற்கு அரசு ஆவன செய்தாக வேண்டும். ஆண்டவர்களின் பெயராலுமா இந்த நாட்டில் மனித இரத்தம் ஓட வேண்டும்? சிங்கள பௌத்த நாட்டில் புத்தர் சிலையை அமைக்கவுமா உரிமையில்லையென்று கேட்கும் கயவர்கள், பிரச்சினைகளை உருவாக்க வேண்டுமென்றால் மலசல கூடங்களுக்குப் பக்கத்திலும் ஆண்டவர்களை அழைத்து வந்து இருத்திவிடுவார்கள்.**

அவனிடமே பலர் அங்கலாய்த்துக் கொண்டனர். அரை மைலுக்கு அப்பாலிருக்கும் விகாரையின் அதிபதியைத் தேடிச் சென்றான் புத்ததாசா. அவரது சிபாரிசுக் கடிதத்துடன் மாநகரசபைக்கும் புத்தசாசன அமைச்சுக்கும் கடிதங்கள் பறந்தன. மறு வாரமே அதிகாரிகள் வந்து பார்த்தார்கள். குப்பை பக்கி இடிக்கப்பட்டது. "இங்கே குப்பைகளைக் கொட்ட வேண்டாம் - மாநகர சபை" என்ற வாசகம் பொருந்திய தகர அட்டை அவனது வீட்டுச் சுவரிலேயே அறையப்பட்டது. அப்பாடா ஆண்டவரின் கருணையால் குப்பை பக்கி, அகற்றப்பட்டுவிட்டது என்றாலும் யோசனை சொல்லித் தந்த கெளதமன் புத்திசாலிதான் - அவன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான். இனி வீட்டு முற்றத்தில் எழுந்தருளியிருக்கும் புத்தர் சிலையை அகற்ற வேண்டியதுதான். அதுவொன்றும் பெரிய வேலையில்லை. ஒரு ஐந்து மாதங்கள் போன பின்னர் இரவோடிரவாக புத்தர் சிலையைப் பெயர்த்துக் கொண்டு போய் ஹாசீம் நானாவின் வீட்டுக்கு முன்னால் போட்டு விட வேண்டியது தான். வீட்டிலிருந்து புத்தர் சிலையையும் அகற்றினதாகவும் இருக்கும். ஹாசீம் நானாவைப் பழிவாங்கியதாகவும் இருக்கும் - அவன் சரியாகவே கணக்குப் போட்டுக் கொண்டான்.

*(யாவும் கற்பனையல்ல)*

நான் என்ன தமிழ்ச்செல்வனின் பாணியில் கதைய விடுகிறேனென்று யோசிக்கிறீர்களா?

ஒன்றுமில்லை. திருமலை புத்தர் சிலைப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியாத இந்த அரசாங்கமா இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போகிறதென்று தமிழ்ச்செல்வன் கூறியதாக வெளிவந்த செய்தியைப் பார்த்தபோது புத்தர் சிலையை வைத்துக் கதை விட்டாலென்ன என்று நினைத்தேன். எழுதிவிட்டேன்.

இது வெறும் கற்பனையல்ல. இதுவே உண்மை. பல இடங்களில் இப்படி நடந்திருக்கிறது. நீர்கொழும்பு, வென்னப்புவ போன்ற பகுதிகளில் சென்று பாருங்கள். சந்திக்குச் சந்தி ஆண்டவர் சிலைகளைக் காண முடியும். திருமலை புத்தர் சிலை விவகாரத்தில் அரசாங்கம் சிங்களப் பேரினவாதிகளுக்குச் சார்பாக நடந்து கொண்டுள்ளதாகவும் எனவே இந்த அரசை நம்பிச் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதில் அர்த்தமில்லையென்றும் தமிழ் மக்களின் கோரிக்கையின் பேரில் விரைவில் யுத்தத்துக்கே தயாராவோமென்றும் தமிழ்ச்செல்வன் சூளுரைக்கின்றார்.

திருமலை பஸ் நிலையத்துக்கு முன்பாக நகரசபைக் காணியில் புத்தர் சிலை நிறுவப்பட்டதன் நோக்கமே ஓர் இனக் கலவரத்தைத் தூண்டுவதுதான். ஆட்டோ சாரதிகள் சிலரும் தீய நோக்குக் கொண்ட சில பிக்குமார்களும் சேர்ந்தே இரவோடிரவாக இந்தப் புத்தர் சிலையை இரு மதுபான விற்பனை நிலையங்களுக்கு அண்மித்ததாக நிறுவினார்கள். இவர்களுக்கு எந்தவித தீய நோக்கங்களும் இல்லையென்றால் இரவோடிரவாகக் கள்ளத்தனமாக புத்தர் சிலையை அமைக்க வேண்டிய தேவை கிடையாது. இதைப் போன்றே ஹர்த்தால், கடையடைப்புக்குத் தூண்டி விட்டவர்களுக்கும் அவற்றை நடத்தியவர்களுக்கும் எந்தவித நல்ல நோக்கமும் கிடையாது. மலினப்படுத்தப்பட்ட இன, மத உணர்வுகளை உசுப்பிவிடுவதே அவர்களின் நோக்கமாகும். இந்த விவகாரம் முதலில் திருமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இப் புத்தர் சிலை உட்பட சகல சட்ட விரோத அமைப்புகளும் அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்று அவரளித்த தீர்ப்பு மிகச் சரியானதும் நியாயமானதுமாகும். இதற்கு இடைக்காலத் தடையுத்தரவு விதித்த சட்ட மாஅதிபர் கமலசபேசன், இப் புத்தர் சிலையை அப்புறப்படுத்தக் கோரி நீதிமன்றில் மனுவொன்றினைத் தாக்கல் செய்ததோடு இதனை அப்புறப்படுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் கோரிக்கை விடுத்தார்.

ஆனால் திருமலையைச் சேர்ந்த பௌத்த பிக்கு ஒருவர் இப் புத்தர் சிலை அப்புறப்படுத்தப்படக் கூடாதென்று அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்ததும், சட்ட மாஅதிபர் திணைக்களம் பின்வாங்கிக் கொண்டதேன்? ஜோசப்பாரும், சுரேஷும், சு.ப.வும் சிங்களப் பேரினவாத அரசாங்கம் புத்தர் சிலையைப் பாதுகாக்க முனைகிறதென்று கதையளக்கினம்.

நீதிமன்றங்கள், ஆஸ்பத்திரிகள், பொது இடங்கள், வீதிகள் ஏன் மூலை முடுக்குகளிலும் கூட முஸ்லிம்களைத் தவிர சகல சமயத்தவர்களாலும் சமய விக்கிரகங்கள், வணக்க ஸ்தலங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்த பௌத்த துறவியும் உள் நோக்கோடுதான் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். முஸ்லிம்கள் சிலை வணக்கம் செய்வதில்லையென்பதால் அவர்கள் விக்கிரகங்கள் நிறுவுவதில்லை.

கடவுள் சிலைகளைக் கூடக் கண்ணியப்படுத்த விரும்பாத கயவர்களின் தீய நோக்குகளை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். புத்தர் சிலைக்குக் குண்டு வீசப்பட்டிருந்தால் அது பாரிய பிரச்சினைகளை, இன மோதல்களை தூண்டியிருக்கும். எனவே அவற்றைத் தவிர்ப்பதற்கு அரசு ஆவன செய்தாக வேண்டும். ஆண்டவர்களின் பெயராலுமா இந்த நாட்டில் மனித இரத்தம் ஓட வேண்டும்?

சிங்கள பௌத்த நாட்டில் புத்தர் சிலையை அமைக்கவுமா உரிமையில்லையென்று கேட்கும் கயவர்கள், பிரச்சினைகளை உருவாக்க வேண்டுமென்றால் மலசல கூடங்களுக்குப் பக்கத்திலும் ஆண்டவர்களை அழைத்து வந்து இருத்தி விடுவார்கள்.

சந்நியாசத்தைத் துறந்துவிடும் சகல சமய சந்நியாசிகள், அரசியல் சந்தர்ப்பவாதிகள், இனவெறியர்கள், மனித இரத்தத்தில் நீச்சலடிக்க முனையும் புத்திஜீவிகள் ஆகியோரின் கபடத்தனங்களுக்குப் பலியாகாமல் இருக்க மக்கள் முனைப்போடு செயற்பட வேண்டும். ■

---

# ஊரிலிருந்து....



**நா**டு முழுவதும் கறுப்பு ஜூலையை நினைவு கூருகின்றது. 200 இற்கு மேற்பட்ட அப்பாவிச் சனங்கள் காடையர்களால் கொல்லப்பட்டதும் வெலிக்கடை படுகொலையும் ஞாபகத்திற்கு வந்து தொண்டைக்குழியை அழுத்துது. 13 ஆமி செத்ததிற்கு 53 கைதிகள், பேரினவாத அரச ஆசியுடன் வந்த காடையர்களினால் கோரமாகக் கொலை செய்யப்பட்டினம். ஆனா நேற்று நல்லூரடியால போகேக்கை தற்செயலா 'கந்தன் கருணை' இல்லம் கண்ணில பட்டது கிட்டுவின்ர ஒற்றைக்கால் போனதற்காக அன்றைய புலித் தளபதி அருணாவினால சொந்த தமிழ் சகோதரங்கள் கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்டினம். இதை யார் நினைவு கூருகின்றது? அல்லது எந்தக் கணக்கில சேர்க்கின்றது. நல்லூரிலிருந்து கேட்டுப்போட்டன். நீங்களே தீர்மானியுங்கோ.

# புலிகள் திறக்கப்போகும் புதிய பாதை எது?

**போ**க்குவரத்து குறித்துப் புலிகள் வழங்கிய காலக்கெடுவுக்கு அரசாங்கம் வழங்கிய பதில், புலிகளைத் திருப்திப்படுத்தவில்லையென்பதை கிழக்கிலிருந்த தமது அரசியல் பணிமனைகளை மூடியதிலிருந்தும் அதையே ஒரு காரணமாகக் காட்டி சுனாமி பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டுக்குப் பின்னடித்து வருவதிலிருந்தும் உணர்ந்து கொள்ளமுடியும்.

பலம் வாய்ந்த நிலையில் புலிகளின் படையணிகள் தலைவரின் கட்டளைக்காகக் காத்து நிற்பதாகவும், எந்த நேரமானாலும் நாலாம் கட்ட ஈழப் போர் ஆரம்பிக்கப்படலாம் என்றும் பெரியளவில் புலிகள் பரப்பிய வதந்திகளை அவதானித்தபோது, போக்குவரத்துத் தொடர்பான காலக்கெடுவும் அரசியல் பணிமனைகள் வாபஸ் பெறப்பட்டதும் போர் வெடிக்கப்போகிறது என்ற மாயையை ஏற்படுத்தியது. ஆனால், அந்தப் பரபரப்பும் புஷ்வாணமாகிய நிலையில் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முயற்சிக்கும் முடிவுக்கும் விட்டு விட்டனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைப் பொறுத்தவரை அரச தரப்போடு மூன்றாவது தடவையாகவும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் தற்போதைய நெருக்கடி மிக்க சூழ்நிலையில் போர் ஒன்றைத் தவிர்ப்பதற்காக மேலும் சில விட்டுக்கொடுப்புகளுக்கும், இணக்கப்பாடுகளுக்கும் உடன்படும் என்ற எதிர்பார்ப்புப் புலிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் உண்டு.

புலிகளைப் பொறுத்தவரை போர் மூளுவதைப் பற்றியோ, நாடு சின்னாபின்னமாவதைப் பற்றியோ எவ்வித அக்கறையையும் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே விட்டுக்கொடுப்பை அரசாங்கம் செய்தாலொழிய, தம்மிடம் அந்தக் கதைக்கே இடமில்லை என்று வீடாப்பிடியாக இருக்கின்றனர். அதுமட்டுமில்லாமல், அவசர அவசரமாகப் படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளனர். இதில் அநேகமாகப் பதினெட்டு வயதுக்குக் குறைவான சிறுவர், சிறுமியர் உள்ளடக்கப்பட்டிருப்பதாக ஐ.நா.சிறுவர் அமைப்பு புள்ளி விபரத்தோடு தெரிவித்து தனது கவலையையும் வெளிப்படுத்தியுள்ளது. சிறுவர் கடத்தலைப் பொறுத்தவரை, சிறுவர்களைப் பிடித்துச் செல்லும்போது அது அம்பலத்துக்கு வந்துவிடக்கூடியது என்றால், அந்தச் சிறுவர்களை தாம் விடுவிப்பது போல் காட்டிக்கொள்ளும் புலிகள், விடுவிக்கும் சிறுவர்களை விடவும் பிடித்துச் செல்வதே அதிகமென யுனிசெப் விடுத்திருக்கும் அறிக்கையும் கவலையும் தெளிவுபடுத்தியுள்ளது.

அடுத்தபடியாகப் புலிகள் மேற்கொண்டு வரும் துணைப் படைகள் மற்றும் ஆயுதக் குழுக்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள். புலிகள் கூறும் துணைப் படைகள் யார், அவர்கள் எங்கே இயங்குகிறார்கள் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டுக் கூறவில்லை. அதற்குக் காரணம் புலிகளைப் பொறுத்தவரை புலிகள் தவிர்ந்த அனைத்து தமிழ் அமைப்புகளும் துணைப் படைகள் அல்லது ஆயுதக் குழுக்கள் என்றே கருதுகின்றனர். இது ஒருவகையில் அப்பட்டமான ஜனநாயக விரோதமாகும்.

காரணம் புலிகளின் போர் அழிவுக்கான பாதையை நிராகரித்து ஜனநாயகம், மாற்றுவழி முறை பற்றிப் பேசும் அல்லது செயற்படும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா அணி என்பவற்றைப் பொறுத்தவரை போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.02.2002ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டபோது, அதில் தமது இருப்பு, பாதுகாப்பு, செயற்பாடுகள் என்பவற்றுக்கு நேரடி அச்சுறுத்தல் அல்லது உத்தரவாதமற்ற நிலைமை காணப்பட்டபோதும் அதை ஏற்றுக்கொண்டன. அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிந்தோ அறியாமலோ அவசரப்பட்டுச் செய்து கொண்ட ஒப்பந்தம் சமாதானத்துக்கு வழிவகுக்குமாக இருந்தால் அதை வரவேற்கும் எண்ணத்தோடு தமது பாதுகாப்புக்காக அரசு வழங்கிய ஆயுதங்களைத் திருப்பி வழங்கினர். அன்றிலிருந்து இன்று வரை மேற்படி கட்சிகளின் உறுப்பினர்கள் புலிகளால் சுதந்திரமாக வேட்டையாடப்பட்டு வருகின்றனர். இருந்தபோதும் அந்தக் கட்சிகள் தாம் வழங்கிய ஆயுதங்களை மீளத் தரவேண்டுமெனக் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக அரச படைகளின் பாதுகாப்பையே கோரின. ஆனாலும் அரச படையையும், குறிவைக்கும் புலிகள் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், படைத் தரப்பையும் இனந் தெரியாதவர்கள் என்ற போர்வையில் கொலை செய்து வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க, ஆயுதக் குழுக்கள் என்று புலிகள் கூறுவதானது அநேகமாகக் கருணா அணியினரையே குறிப்பிடுகின்றனர். அப்படியாயின் கருணா அணியினரைத் தேடித் தேடி - அதாவது, நித்திரையில், உணவில் நஞ்சு வைத்து, நீதிமன்றத்துக்குள், சிறைச்சாலைக்குள் என்று - கொலை செய்தவர்கள் யார்? உலகத்துக்கே தெரிந்த இக் கொலைகளையும், கொலையாளிகளையும் புலிகளால் மறைக்கவோ, மறுக்கவோ முடியுமா? அந்தக் கொலைகளையெல்லாம் உள்ளியக்க முரண்பாடுகளெனவும் தமக்குள்ளே தீர்த்துக்கொள்வோமெனவும் கூறிய புலிகள், இன்றைக்கு அதே கருணா அணியினர் திருப்பித் தாக்கும்போது அதற்கு முகம் கொடுக்க முடியாமல் ஆயுதக் குழுவென்றும், இவர்களைப் படையினரே இயக்குகிறார்கள் என்றும், இவ்வாறான சம்பவங்கள் தமது அரசியல் மற்றும் செயற்பாடுகளுக்குத் தடையாக இருப்பதாகவும் கூறி, அதற்காக சமாதானத்துக்கான சூழலையே நிராகரித்து, மீண்டுமொரு யுத்தத்துக்குத் தயாரென்றும் கூறிவருகின்றனர். புலிகள் கொலை செய்கிறார்கள் அதற்குப் பதிலாக எவரும் கொலை செய்யலாம் என்று கூறிவிட முடியாது. அதற்காகக் கொலை செய்தாலும், ஆள் கடத்தினாலும், பொதுக் கட்டமைப்பை நிறுவினாலும், சமாதானத்தைக் கொண்டு வருவதானாலும், தாம்தான் செய்ய வேண்டும். எதிராளியோ, மாற்றுக் கருத்துக் கொண்டவர்களோ இருக்கவே கூடாது என்ற புலிகளின் போக்கு, தமிழ் மக்களுக்கு கௌரவமான உரிமையைப் பெற்றுத் தருமா என்பது கேள்விக்குறியாகும். எதிர்ப் போரை தவிர்த்த கருணா அணியினரைத் தேடியழித்து அவர்களை மீண்டும் ஆயுதக் குழுவாக்கிய தார்மீகப் பொறுப்பை புலிகளே ஏற்க வேண்டும். ஆகவே உள்ளியக்க முரண்பாடுகளை தமிழ் மக்களின் சமாதானத்துக்கான எதிர்பார்ப்பு மீது திணிக்காதீர்கள்.


> புலிகளுக்கு மாற்றுத்தரப்பினர்கள் கொலை செய்யப்படுகிறார்களே. அக் கொலைகளை யார் செய்கிறார்கள்? அது தவிரவும் புலிகள் மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் செய்த உருப்படியான மக்கள் பணி என்ன? அவர்களோடு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? போராட்டங்களில் ஏன் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துகின்றனர்? சிறுவர்களை ஏன் படையில் சேர்க்கின்றனர்? என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு போகின்றனர்.

அதேவேளை, தற்போதைய இலங்கையின் நிலைமையை இலங்கையில் வாழும் பராயமடைந்த சிறுவர்கள் முதல் சர்வதேச சமூகம் வரை மிகவும் தெளிவாக உணர்ந்தும் புரிந்துமுள்ளனர். நிலைமை இப்படி இருக்க, இலங்கையிலிருக்கும் சர்வதேச தூதுவர்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் நிலைமையை தெளிவுபடுத்தப் புறப்பட்டிருக்கும் புலிகளின் விசுவாச அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினை எந்த வகைக்குள் இணைத்துச் சிந்திப்பது? பொதுவாகவே தூதுவராலயங்கள் ஒரு நாட்டில் செயற்படுவதே ராஜதந்திர செயற்பாடுகளுக்கும் கூடவே இரகசிய தகவல் திரட்டுகளுக்குமே என்பது யாவருக்கும் தெரிந்த பரகசியம். இலங்கையின் அரசியல் போக்கு எந்தத் திசையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது? யுத்தநிறுத்தம் எந்த இலட்சணத்தில் பின்பற்றப்படுகிறது? மனித உரிமைகளுக்கு யார் யார் எப்படி மதிப்பளிக்கின்றனர்? யார் யாருக்கு யார் யார் வீணி வடிய வடிய வக்காலத்து வாங்கிப் பக்கவாத்தியம் பாடுகின்றனர்? என்பதையெல்லாம் அக்குவேறு ஆணிவேறாக அவர்கள் தெரிந்து வைத்துள்ளனர். அவர்களிடம் போய் நாட்டு நடப்புப் பற்றியும், நாளைக்கு நடக்கப்போவது பற்றியும் விளக்கமளிக்கும் சிறுபிள்ளைத்தனமான பணியைப் புலிகள் தமிழ் கூட்டமைப்பினரூடாக மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு சந்திக்கும் தூதுவர்கள் கூட்டமைப்பினரிடம் கேட்கும் கேள்விகள் இவர்களைத் திக்குமுக்காட வைக்கின்றன. அவையாவன : யாரைத் துணைப் படை என்கிறீர்களோ அப்படித்தான் வைத்தாலும் புலிகளுக்கு மாற்றுத்தரப்பினர்கள் கொலை செய்யப்படுகிறார்களே. அக் கொலைகளை யார் செய்கிறார்கள்? அது தவிரவும் புலிகள் மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் செய்த உருப்படியான மக்கள் பணி என்ன?

அலசுவது
**- மதியூகி -**

அவர்களோடு நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? போராட்டங்களில் ஏன் பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துகின்றனர்? சிறுவர்களை ஏன் படையில் சேர்க்கின்றனர்? என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு போகின்றனர். அவற்றையெல்லாம் வெளியிடாத கூட்டமைப்பினர் நாங்கள் இன்று இந்த நாட்டுக்காரர்களைச் சந்தித்து நாட்டு நடப்பை விவரித்துள்ளோம். இவற்றுக்குத் தீர்வு இல்லாவிட்டால் மீண்டுமொரு யுத்தம் வருமெண்டதைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம் என்கின்றனர். அப்படியாயின் இவர்களின் கூற்றுக்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை இதுவரை சொல்ல மறுக்கின்றனரே, ஏன்? அதுமட்டுமா, சர்வதேச உதவிகளைப் புலிகளுக்கு நேரடியாக வழங்க வேண்டுமெனவும் கேட்டுள்ளோம் என்கின்றனர். அதற்கு அந்த நாடுகள் இறைமையுள்ள அரசு, ஜனநாயக நடைமுறை, பயங்கரவாதச் செயற்பாடு பற்றியெல்லாம் பதில் கூறுகின்றனரே, அவைபற்றி ஏன் மூச்சு விடுவதில்லை?

## அதிரடி அய்யாத்துரை



**சுனாமியாலை** பாதிக்கப்பட்டவைக்கு இன்னும் நிவாரணம் கிடைக்கயில்லையெண்டு அனுதாபமாச் சொல்லித்திரியினமாம். அண்டை நாட்டில தஞ்சம் புகுந்திருக்கிற எங்கட சனம், பாவம் அந்தச் சனம் பார்ப்பாரில்லாம கிடக்கினம். உந்த லட்சணத்தில சில ஆயர்பாடிகள் தனியான படகு விடுங்கோ, அண்டை நாட்டில இருக்கிற அகதிகள் நாட்டுக்கு வரட்டும் எண்டு பெரிசா கோரிக்கை விடுகினம்.

உங்க இருக்கிற சனத்துக்கு நடக்கிற அநியாயத்த ஏன் எண்டு கேக்க முடியாத இவையெல்லாம் வெள்ளை அங்கிகளைப் போர்த்துக் கொண்டு வேடிக்கை பார்க்கினம். திரும்பி வாற அகதிகளை என்ன ஆலாத்தியே எடுக்கப் போகினம். இண்டைக்கோ நாளைக்கோ எண்டு யுத்தம், நாளை எண்ணிக் கொண்டிருக்கேக்க, அகதிகளெல்லாம் நாட்டுக்கு வாங்கோ எண்டிறார். ஆசிர்வதிக்க முடியாட்டிலும் அழித்தொழிப்புக்கு துணை போகாம இருங்கோ பிளீஸ் எண்டு அண்டை நாட்டில வாழிற எங்கட சனங்கள் சொல்லுதுகளாம்.

**தென்றலடிக்கிற** வானொலியிலை வீணை வாசிக்கிற நிகழ்ச்சியொண்டு ஒலிபரப்பாகுதெல்லோ. அந்த நிகழ்ச்சியிலை ரெண்டெழுத்தாரின்ர வண்டவாளங்களை தண்டவாளம் ஏத்தினமெண்டதாலை ரொம்பக் கடுப்பில இருக்கினமாம் ரெண்டெழுத்தார்.

உந்த வீணை நிகழ்ச்சியைப் பொதுவான ஜனங்கள் பொழுது போக்காகவும் கேக்கக்கூடாது எண்டு எவ்வளவோ சொல்லியும் சனம் கேக்குதுகள் எண்டது பழைய கதை. புதுக் கதை என்ன தெரியுமோ? தங்களைப் பத்தி என்னதான் சொல்லினமெண்டதைக் கேக்க ரெண்டெழுத்தார் தங்கட ஆக்களுக்குத் தெரியாமலே தனித்தனியா ஒளிச்சு மறைச்சுக் கேக்கினமாம். உப்பிடி நிகழ்ச்சி கேட்ட ரெண்டு பேர் தங்களுக்குள்ள விமர்சிக்க வெளிக்கிட்டு விவாதம் சூடாகி அடிபுடி பட்டிருக்கினம்.

வன்னியில இருந்து வந்தவருக்கு உலகப் போக்குத் தெரியல்லை எண்டு கொழும்பிலை இருக்கிற ரெண்டெழுத்தார் எல்லாம் தெரிஞ்ச மாதிரி சொல்லித் திரியிராராம்.

சும்மா ஒரு வீணையெண்டில்லாமல் இதயத்து வீணை எண்டதாலைதான் இத்தனை வசீகரமோ? அதுக்காக யாரும் அடிச்சுக் கொள்ளாதையுங்கோ. ஏன் எண்டால் வீணையின்ர நோக்கம் அதில்லை புரியுதோ....

**வடக்கில** இருந்து சனமெல்லாம் வன்னிக்குப் போகினமாமே? உண்மையோ எண்டு புலம் பெயர்ந்து போன நண்பரொருவர் கேட்டார். அப்படியோ எண்டிட்டு விசாரிச்சால், சனங்களை ரெண்டெழுத்தார் தான் வலுக்கட்டாயமா வன்னிக்கு வரச் சொல்லினமாம். அதுவும், தாங்கள் நடத்தின ஆர்ப்பாட்டங்களைப் படைத்தரப்பு வீடியோ பண்ணி வச்சிருக்குதாம். அதுகளைப் பாத்து படைத்தரப்பு வந்து சனத்தைப் பிடிக்குமெண்டுதான் பயங்காட்டினமாம். பாத்தியளே.... எப்புடித் தூண்டில் போடுகினமெண்டு. சில சனம் உதுக்கு எடுபட்டுப் போயிட்டினமாம். அது மட்டுமில்லாம ரெண்டெழுத்தார் திடீரெண்டு ஆர்ப்பாட்டத்துக்குக் கூப்பிட்டாலும் வாறதுக்கு சனமில்லையாம். முந்தி வந்ததுகளைத்தெல்லாம் வன்னிக்குப் பார்சல் பண்ணிட்டினமாம். வன்சப் போன டைமிலையும் உப்பிடித்தான் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடேக்க சனத்தையும் கிளப்பிக் கொண்டு போனவை. அப்ப போய் அடைபட்ட சனம் பாதை திறந்த பிறகுதான் மூச்சு விட்டதுகள் எண்டு வெளிக்கிடாத சனங்கள் சொல்லித் திரியினமாம். புலம் பெயர்ந்து இருக்கிறவைக்கு.... உந்த மெசேஜ் போதுமோ? இன்னும் கொஞ்சம் வேணுமோ?


**எதை** மறந்தாலும் அடையாள அட்டைகளைக் கொண்டுதான் வீட்டுப் படலையால்ல வெளிக்கிட்ட எங்கட சனம், கடந்த மூன்று வருசமா, அந்த ரென்சன் இல்லாம திருஞ்சிச்சினம். திரும்பவும் அடையாள அட்டைகளைத் தேடியெடுத்துக் கொண்டு திரியினம். இதிலை என்ன பிரச்சினை எண்டு தானே யோசிக்கிறியள் - இருக்கு... பிரச்சினை இருக்கு... படைத்தரப்புக்கு அடையாளங் காட்டிறதுக்காக உதவின அடையாள அட்டை, இப்ப உபத்திரவம் தரவும் செய்யுதுங்கோ.

யாழ்ப்பாணத்திலை இரவு பத்து மணிக்குப் பிறகு பயணம் செய்யிற பொடியளிட்டை வழி மறிக்கிற ரெண்டெழுத்துக்காரர் அடையாள அட்டையைக் கேட்டு வாங்கிப் போட்டு காலையில ஒபிசுக்கு வந்து வாங்குங்கோ எண்டினமாம். காலையில ஒபிசுக்குப் போனால், விசாரணையிருக்கு வன்னிக்கு வாங்கோ எண்டு சொல்லினமாம். அங்கை போறவைக்கு என்ன விசாரணை தெரியுமே? பயிற்சி எடுக்கிறதுதான். எப்புடி இருக்கு விசாரணை - ம்.... பயிற்சி கொடுக்க ஆக்கள் இருக்கினம். எடுக்கத்தான் ஆளில்லையாக்கும்....

**அரச** பரம்பரைக்குப் பேர் போன நாட்டில அண்மைக்காலமாக தொடரும் குண்டுத் தாக்குதல் சம்பவங்களாலை பயங்கரவாதப் பட்டியலிலை பெயர் எடுத்தவையெல்லாம் பதுங்கிப் போய் இருக்கினமாம். அதிலை எங்கட ஆலோசகர் அண்ணை கொஞ்சம் அதிகமாகவே நடுங்கிக் கொண்டிருக்கிறார் எண்டு அவரின்ர பிரசர் அதிகரிப்பைப் பற்றித் தெரிஞ்சவை பகிடியாகச் சொல்லிச் சிரிக்கினம்.

தாடி வச்ச அரபுக்காரரின்ர ஆக்கள் தானே குண்டு வச்சிச்சினம். அதுக்கு ஏன் ரெண்டெழுத்து ஆலோசகர் நடுங்க வேணும் எண்டால், தற்கொலைக் குண்டு வெடிப்புக்குப் பெயர் போனவை ரெண்டெழுத்தார் தானே எண்டதாலை, தொடர்பேதும் இருக்கலாமெண்டு ஒரு சந்தேகமும் இருக்குதாம். யார் கண்டது? பாம்பின் கால் பாம்பறியும் எண்டுவினம். பாலாண்ணை பயந்தே காட்டிக் கொடுத்துப் போடுவார் போலை இருக் கெண்டு பெடியள் சொல்லினம். அப்புடி யெண்டால் ஆலோசகர் இனி அடக்கி வாசிக்கத்தான் வேணும் போலை....

# தேசியத் தலைவரின் நீங்காத நினைவுகள்



உலகத் தலைவர்கள் கூடியிருந்த அன்னை இந்திராவின் புது டில்லி சபையில், அண்ணர் அமிர்தலிங்கம் ராஜநடை நடந்து வர.... இவர்தான் ஈழத் தமிழர்களின் தலைவர் என்று அன்னை இந்திரா உலகத் தலைவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்திய அந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன்!

அன்னை இந்திராவின் தயவோடும் அவரது ஆதரவோடும் உலக நாடுகளெங்கும் அலைந்து திரிந்து, உரிமை அற்றுக் கிடந்த தமிழ் பேசும் மக்களின் முகங்களுக்கு உலக நாடுகளில் முகவரி தேடித் தந்த அந்தத் தலைவனின் தியாக வரலாற்றினை நான் நினைத்துப் பார்க்கின்றேன்!

எம் இனிய மக்களே!

அண்ணர் அமிர்தலிங்கம் அவர்களது போராட்ட வழிமுறை என்பது சாத்வீகத்தை அடிப்படையாகக் கொண்டது!

ஆனால், அப்போது எங்களுடைய போராட்ட வரலாறு ஆயுதப் போராட்ட வரலாறு!

பாதைகள் வெவ்வேறானவை என்றாலும் திசை ஒன்றுதான்! இலக்கு ஒன்றுதான்!

இந்தியாவில் ஒரு சுதந்திரப் போராட்டம் நடந்தது! சுபாஸ் சந்திரபோஸ் ஆயுதப் போராட்டத்தை தனது வழி முறையாகத் தேர்ந்தெடுத்திருந்தார்! மகாத்மா காந்தி அகிசை முறையைத் தனது வழிமுறையாகக் கொண்டிருந்தார்! அங்கே சுபாஸ் சந்திரபோஸ், மகாத்மா காந்திக்கு எதிராகத் தனது துப்பாக்கியைத் திருப்பியிருக்கவில்லை!

எமது தேசத்தில் மட்டும் சாத்வீக ரீதியில் போராடிய ஒரு சரித்திர நாயகனை புலிகள் ஏன் சுட்டுக் கொன்றார்கள் என்று கேட்க விரும்புகின்றேன்!

மகாத்மா காந்தியும் உண்ணா விரதப் போராட்டங்களை நடத்தியிருந்தவர்தான்! அதற்காக சுபாஸ் சந்திரபோஸ் அணியினர் உண்ணாவிரதம் இருந்த காந்தி மீது சோற்றுப் பார்சலை வீசி எறிந்து அந்தப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தியிருக்கவில்லை!

ஆனால், எமது தேசத்தில் மட்டும் யாழ். வீரமாகாளி அம்மன் கோயிலில் உண்ணாவிரதம் இருந்த அண்ணர் அமிர்தலிங்கம் மீது, புலிகள் சோற்றுப் பார்சலை வீசி எறிந்து, அவரது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியது ஏன் என்று கேட்க விரும்புகின்றேன்!

அன்று தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை கொச்சைப்படுத்திய புலிகள், பின்னாளில் தமது போராளி திலீபனை உண்ணாவிரதம் இருக்கச் சொல்லி அவரைச் சாகடித்தது மட்டும் நியாய மானதுதானா என்று கேட்க விரும்புகின்றேன்!

நேசத்திற்குரிய எம் தேசத்து மக்களே!....



தேசியத் தலைவருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

புலிகள் தாங்கள் மட்டும் ஆள வேண்டும் என்ற வெறி பிடித்தவர்கள்! ஆகையால்தான் ஆளுமை மிக்க தலைவரான அண்ணர் அமிர்த லிங்கத்தை அழித்தொழித்தார்கள்!

அவர் உயிருடன் இருந்தால் தாங்கள் சர்வதேச நாடுகளில் அங்கீகாரம் பெறமுடியாமல் போய்விடும் என்ற அச்சத்தில் மட்டுமே அவரைக் கொன்றொழித்தார்கள்!

உலகத்தில் எங்குமே நடந்திருக்காத கொடுமை! பேசுவோம் என்று கிட்ட வந்த புலிகள், தேநீர் வாங்கிக் குடித்துவிட்டு நிராயுதபாணியாக இருந்த ஒரு தலைவரைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்!

வாருங்கள் என்று வரவேற்று தேநீர் பருகக் கொடுத்த எம் தேசத்துத் தமிழ்ப் பெண் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தின் தாலியை அறுத்தார்கள் புலிகள்!

எம் தேசத்து மக்களுக்காகத் தன் கணவனோடு இணைந்து களமிறங்கி நின்ற தமிழ்ப் பெண்மணியை விதவையாக்கிக் கொண்டது புலித்தலைமை!

“எனது கணவர் என்ன துரோகம் செய்தார்?.... அவருக்குப் பேரினவாதிகளால் மட்டும்தான் ஆபத்து வரலாம் என நான் எண்ணியிருந்தேன்!

ஆனால், எமக்காகப் போராடுவதாகக் கூறும் புலிகளே எனது கணவரைக் கொன்றொழித்தார்கள்.

**இதயவீணைக்காக**
**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**
**வழங்கியது**

எனது கணவரைக் கொன்றதால் அவர்களுக்குத் தமிழீழம் கிடைத்து விட்டதா?....”

இவ்வாறு புலம்பி அழுகின்றார் அவரது மனைவி திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்!

அழுவதற்குக் கூடச் சுதந்திரம் இல்லாத ஒரு தேசத்தில் மக்களாகிய நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்!

**(அடுத்த வாரமும் தொடரும்....)**


விளம்பரப் பகுதி

## மட்டக்களப்பு மாந்திரீகம்

**உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் ‘குட்டி’ அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.**

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.

**☎ 067-2250349**

## ஹோமியோபதி சிகிச்சை

**தமிழ் நாட்டின் பிரபல சிகிச்சை நிபுணரும், தமிழக அரசின் ஹோமியோபதி கவுன்சில் உறுப்பினருமான**

**DR. R. தியாகராஜன் DHMS, AMRSH (Lon)**


**நீரிழிவு, ஆஸ்மா, மூட்டுவாதம், தோல் வியாதிகள், ஆண்மைக் குறைவு போன்ற நாட்பட்ட வியாதிகளுக்கும் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கிறார்.**

காலம் : **25.07.2005** முதல் **30.07.2005** வரை
இடம் : ஹோட்டல் கிறீண்லண்ட்ஸ், பம்பலப்பிட்டி.
தொலைபேசி : **2585592, 2581986,**

**HOTLINE : 0777-602513**

## தமிழ் எழுத்துக்கள் பதிக்கப்பட்ட KEY BOARD விற்பனைக்குண்டு

**கல்யாணி, பாமினி, கலகம் பொன்டுடன்**
(Fonts) தமிழ் Key Board
**விற்பனைக்குண்டு. வெளிநாட்டவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.**



SPG PC COMPUTER
NO. 23, MAY FIELD ROAD, COLOMBO - 13.
Tele. Phone No :- 0777588405


## தேவை

**ஆணி தொழிற்சாலையில் வேலை செய்ய ஆட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.**

**நேரில் வரவும்:**
No. 10, Industrial Estate,
Pallaygala, Kandy ,
T.P. 0812420274.







## நிரூபித்துக் கொண்டு இருக்கும் மலையாள மாந்திரீக சக்தி

விரும்பிய காதல், விரும்பியோர் சம்மதத்துடன் நிறைவேற, பிரிந்த காதல் ஒன்று சேர, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடனும் நிறைவேற, திருமணம் தோஷம் நிவர்த்தி செய்துகொள்ள, வாஸ்த்து முறைப்படி வீட்டுக் காவல் செய்ய, ஓடிப் போனவர்கள் தேடி வர, மனப் பயம் நீங்க, தாழ்வு மனப்பான்மைக்கும், கணவன் மனைவி, ஸ்திரி புருஷர் உச்சரிக்கப்பட்ட ஆண்கள் காம வசிய லேகியம் பெற, மூல ரோகத்தில் அவதிப்படுபவர்களுக்கு 1008 உறு செய்யப்பட்ட லேகியத்தால் குணம் பெற, ஒற்றைத் தலைவலி நீங்க, தலை முடி உதிர்வதை நிறுத்தி நீண்டு வளர, முடி கறுக்க அபூர்வ நீராவி ஔஷத தைலம் பெற, வீடு மனை வதிவிட சிக்கல் தீர, எதிரிகள் அஞ்ச, எதிரிகளை முறியடிக்க, ஸ்ரீ லக்ஷ்மி வீட்டுக்கு வாசம் செய்ய, குறிப்பிட்ட வியாபாரத்தில், குறிப்பிட்ட இலாபம் பெற, மது போதையில் இருந்து விடுபட, குழந்தை பேறு கிட்ட, ஆஸ்துமா நோய் ஆயுள் வரை இல்லாமல் இருக்க, இன்னும் உங்கள் குறை நிறைகளுக்குத் தீராத மானிட கரும தோஷங்களுக்கு 48நாள் எமது ஸ்ரீ துர்க்கை அம்மனின் மண்டலாபிசேக பூஜைக்குப் பின் வெற்றி கண்டவர்கள் எத்தனை எத்தனை பேர். அன்றன்று வந்து குவியும் சன்மானங்களையும், நெய்வேத்திகளையும், வந்தால் வந்திருக்கும் வாடிக்கையாளரிடமே உண்மையைக் கண்டறியலாம். குறிப்பாக நாம் மட்டுமே! இத்துறையில் வாங்கும் பணத்திற்கு Guarantee Card கொடுக்கின்றோம். நாம் மட்டுமே இத் துறைக்கு வருமான வரி செலுத்துபவர்கள்! இது எமது உண்மைச் சேவையை எடுத்துக் காட்டுகிறது. வெளி நாட்டவர்களுக்கு விசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவின் மூலம் கடல் கடந்து செயல்படக்கூடிய வகையில் தியானித்து அனுப்புவதால், கைகண்ட பலனை அடைகிறார்கள். சாதிக்க முடியாத காரியங்களை எனது மலையாள மாந்திரீக சக்தியால் நிரூபித்துக் காட்டிய எனக்குக் கிடைத்த சான்றிதழ்களை தாராளமாக நேரில் பார்க்கலாம்.

**நுவரெலியாவிலும், கொழும்பிலும் மட்டுமே எமது துர்க்கா தேவி ஆலயம் உண்டு. வேறு கிளைகள் இல்லை.**

நுவரெலியா கிளை:
மலையாள மாந்திரீக உச்சாடன பீடம்.
ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
No.33, கண்டி வீதி,
நுவரெலியா.
T/No. 052 22508 - 23093 Fax: 235097.

“உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி”
**பேராசிரியர் டாக்டர். பீ.கே. சாமி** (J.D.G.A.N.) J.P.
Malayala Manthirika Uchchadana Peedam,
Sri Durka Devi Aalayam, 162, Kotahena Road, Colombo - 13.
T/No. 2342463/2342464/2470615 Fax: 2344831
4613133/4613124/2431137.
E-Mail - drpksamy@sltnet.lk Web - www.drpksamy .com, www.gangatharan.com


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **“Manager Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**

## சிறுகதை கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.
**- ஆசிரியர்**

## இன்னொருவர் பார்வையில்



**லண்டன், ஈராக், அமெரிக்கா, இலங்கை ஆகியவற்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மையமாக வைத்து ஓர் ஒப்பு நோக்கில் 'வாஷிங்டன் போஸ்ற்' அலுவலக எழுத்தாளர்களான டான் எகென், ஸ்கொற் வில்சன் ஆகியோர் இணைந்து எழுதிய ஆய்வுக் கட்டுரை இது. லண்டன் குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட இக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது. மரணத்தில் மகிமை தேடுவதற்காக மூளைச் சலவை செய்யப்பட்ட அப்பாவிகள் அல்லது மனநோயாளிகளென தற்கொலைக் குண்டுதாரிகள் வர்ணிக்கப்படுகின்றார்கள்.**

# லண்டன், கொழும்பு, பாக்தாத், நியூயோர்க் தற்கொலைத் தாக்குதல்கள் - ஓர் ஆய்வு

**சில** தசாப்தங்களுக்கு முன்னர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவேயில்லை. இப்போது உலகின் மிகப் பொதுவான பயங்கரவாத வழிமுறையாக இது மிகத் துரிதமாக வளர்ச்சி பெற்றுள்ளது. 1980களில் இலங்கையின் சிவில் யுத்தத்திலிருந்து மேற்குலகுக்கு இடம் பெயர்ந்த இந்தத் தற்கொலைத் தாக்குதல்கள் பாலஸ்தீன 'இன்திபதா' வினால் அண்மைய வருடங்களில் மேற் கொள்ளப்பட்டு வந்தன. அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து இது ஈராக்குக்கும் பரவியுள்ளது.

இன்று அமெரிக்கா உட்பட மேற்குல கிலுள்ள அரசாங்கங்கள், லண்டனில் ஜூலை மாதம் 7ஆம் திகதி நடத்தப்பட்ட சுரங்கப் பாதை தாக்குதல்களையடுத்து இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க முடியாமல் தவிக்கின்றன. மேற்கு ஐரோப்பாவில் முதல் தடவையாக நடத்தப் பட்ட வெற்றிகரமான தற்கொலைத் தாக்கு தலாக லண்டன் தாக்குதல் கருதப்படு கிறது. உலகில் நடத்தப்பட்ட தற் கொலைத் தாக்குதல்களில் முக்கால் வாசித் தாக்குதல்கள் அமெரிக்காவில் 2001ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தற் கொலைத் தாக்குதல்களுக்குப் பின்ன ரேயே நடத்தப்பட்டதாக "ராண்ட் குறூப்" என்ற அமைப்பு நடத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

2003ஆம் ஆண்டு ஈராக் மீது அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்புக்குப் பின்னர் ஈராக்கில் நடத்தப்பட்ட சுமார் 400 தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இந்த நாட்டையே உலுப்பியுள்ளன. கடந்த மே மாதம் மட்டும் ஈராக்கில் 90 தற் கொலைத் தாக்குதல்கள் நடத்தப்பட் டுள்ளன.

இவ்வாறான தற்கொலைத் தாக்குதல் களைத் தடுத்து நிறுத்துவது கஷ்டமான தென்பதை, 55 பேரைப் பலியெடுத்த லண்டன் தாக்குதல்கள் நிரூபிப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர். "பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங் களைக் கொண்டு நடத்தப்படும் தாக்குதல்களைத் தவிர, தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் போல் பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடியது வேறெதுவு மில்லை" என்று புரூஸ் ஹொப்மன் என்ற பயங்கரவாதம் தொடர்பான ஆய்வு நிபுணரொருவர் தெரிவிக்கிறார். 'ராண்ட்' எனப்படும் வாஷிங்டனில் அலுவலகத் தைக் கொண்டுள்ள ஆய்வு நிறுவனத்தின் தலைவர் இவராவார். தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தடுப்பது மிகவும் கஷ்டமான காரியமென்றும் அவர் கூறுகிறார். தற்கொலைக்கெதிராக ஆழ மாக வேரூன்றியுள்ள கலாசார மற்றும் சமய ரீதியான தடைகளை மீறி நடத்தப்படும் இத்தகைய தாக்குதல்கள் பயங்கரத்தை ஏற்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றனவென்றும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி மரணிப்பவர்களை மகத்தானவர்களென்றும் மாவீரர் களென்றும் பயங்கரவாதத் தலைவர்கள் புகழ் பாடுகின்றார்கள் என்கிறார் டானியல் பெஞ்சமின் என்ற ஆய்வாளர். இவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளின் டன் பதவியிலிருந்தபோது பயங்கரவாத எதிர்ப்பு நிபுணராக பணிபுரிந்தவராவார். 1996ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு எதிராக அல்குவைதா இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கூறிய வார்த்தைகளை அவர் சுட்டிக்காட்டுகிறார். "நீங்கள் உயிரை நேசிப்பது போல் இந்த இளைஞர்கள் மரணத்தை நேசிக்கிறார் கள்" என்று பின்லேடன் கூறியிருந்தார்.

### தற்கொலைத் தாக்குதல்களின் வரலாறு

"தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படுவது ஒன்றும் புதிய விடயமல்ல. இரண்டாவது உலக மகாயுத்த காலத்தின் போது ஜப்பானிய 'காமிகாஸ்' விமான ஓட்டிகள் அமெரிக்கக் கப்பல்கள் மீது தமது விமானங்களை மோதவைத்து ஆகக்கூடிய சேதங்களை ஏற்படுத்த முயற்சி செய்திருக்கிறார்கள். நூற்றுக் கணக்கான வருடங்களாக இராணுவ அல்லது அரசியல் தலைவர்கள் மீது நடத்தப்பட்டு வந்த தாக்குதல்கள் ஏதோ ஒரு வகையில் தற்கொலைப் பாணியி லேயே நடத்தப்பட்டுள்ளன. ஏனெனில் அவை மிக நெருங்கிய மட்டங்களில் நடத்தப்படுவதோடு இலக்கு வைக்கப் படுபவரை விரைவாகக் கொல்வதுடன் அவருக்கு மரணமும் நிச்சயமென்பதை உறுதி செய்கிறது" என்கிறார் வோல்டர் லகுவார் என்ற நிபுணர். இவர் பயங்கர வாத வரலாறு பற்றிய விடயங்களில் நிபுணத்துவம் பெற்றவராவார். 1983ஆம் ஆண்டு பெய்ரூட்டிலுள்ள அமெரிக்கக் கடற்படை முகாம்மீது ஹிஸ்புல்லா தற்கொலைக் குண்டுதாரியொருவர் ட்ரக் வண்டியொன்றினை ஓட்டிச் சென்று நடத்திய தாக்குதலில் 241 படைவீரர்கள் கொல்லப்பட்டனர். இது தற்கொலைத் தாக்குதல் வரலாற்றில் மிக முக்கியமான தாகும்.

### ஸ்ரீலங்கா

மத்திய கிழக்குக்கு வெளியே நவீன பாணியிலான தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இலங்கையில்தான் முதன் முதலாக பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றன. புலிகள் இயக்கம் நாட்டின் தமிழ் சிறுபான்மைச் சமூகத்தில் இருந்து உருவாகிய ஓர் இன அமைப்பாகும். 1980களின் பிற்பகுதியிலிருந்து 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்தமொன்று ஏற்படும் வரை பல தற்கொலைக் குண்டுத் தாக்கு தல்களை இந்த இயக்கம் நடத்தியுள்ளது. சிங்களப் பெரும்பான்மையினர் ஆதிக்கம் செலுத்தும் இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையிலான மோதல் 1983ஆம் ஆண்டு ஆரம்பமானது. 65,000க்கு மேற்பட்ட உயிர்களை இது பலி கொண்டுள்ளது.

புலிகள் இயக்கத்திற்குள் இந்து சமயத்தவர்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் அது வெளிப்பார்வையில் இன ரீதியான மற்றும் தேசியவாதத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது. இவர்களின் நடவடிக்கைகளில் மதம் முக்கியத்துவம் பெறுவதில்லை. புலிகளின் ஆரம்பகால வலிமை மிக்க தற்கொலைத் தாக்குதல் கள், சிறந்த ஆளணியினரையும் உப கரணங்களையும் கொண்ட சக்திமிக்க எதிரிக்கெதிராக இராணுவக் கள நிலையை மட்டப்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டன. இவை திட்ட மிடப்பட்ட யதார்த்தத் தாக்குதலைப் பிரதி பலிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இத்தகைய தாக்குதல்களை நடத்து வதற்காக கரும்புலிகளென்று அழைக்கப் படும் சக்திமிக்க அணியைப் புலிகள் உருவாக்கினர். இவர்களுக்குத் துரிதமான பயிற்சி அளிக்கப்படுவதோடு, தற் கொலைத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் இயக்கத் தலைவர் பிரபாகர னோடு முதல் நாள் இரவு விருந்துபசார மும் உண்கின்றனர். புலிகள் இராணுவ நிலைகள் மீது மட்டுமல்ல, அரசியல், பொருளாதார நிலைகள் மீதும் தாக்கு தலை நடத்துவதால் பல நூற்றுக் கணக்கான அப்பாவிக் குடிமக்களும் கொல்லப்படுகின்றனர்.

1981 ஆம் ஆண்டு முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைப் புலி இயக்கத் தற்கொலைக் குண்டுதாரி யொருவர் கொன்றார். இரு ஆண்டுகளின் பின்னர் தற்கொலைக் குண்டுதாரி யொருவர் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவையும் மேலும் 23 பேரையும் கொழும்பில் கொன்றார். புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் கொழும்பி லுள்ள மத்திய வங்கித் தலைமையகம்,

**'வெற்றி பெறுவதற்காக மரணிப்பது' என்ற தனது நூலில் ரொபர்ட் ஏ பாப்பே என்ற சிக்காக்கோ பல்கலைக் கழக அரசியல், விஞ்ஞானத்துறை பேராசிரியர், புலிகளே தற்கொலைத் தாக்குதல்களில் முன்னணி ஊக்கிகள் என்று வர்ணிக்கிறார். 1980ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை உலகெங்கும் நடத்தப்பட்ட 315 தற்கொலைத் தாக்குதல்களில் 76 தாக்குதல்களை மட்டும் புலிகள் நடத்தியுள்ளனர் என்று பாப்பே கூறுகின்றார்.**

கண்டி தலதா மாளிகை, சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதும் பாரிய குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். 'வெற்றி பெறுவதற்காக மரணிப்பது' என்ற தனது நூலில் ரொபர்ட் ஏ பாப்பே என்ற சிக்காக்கோ பல்கலைக் கழக அரசியல், விஞ்ஞானத்துறை பேராசிரியர், புலிகளே தற்கொலைத் தாக்குதல்களில் முன்னணி ஊக்கிகள் என்று வர்ணிக்கிறார். 1980ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை உலகெங்கும் நடத்தப்பட்ட 315 தற்கொலைத் தாக்குதல்களில் 76 தாக்குதல்களை மட்டும் புலிகள் நடத்தியுள்ளனர் என்று பாப்பே கூறு கின்றார். இக் கால கட்டத்தில் இஸ்லாமிய தடுப்பியக்கம் அல்லது ஹமாஸ் இயக்கம் 54 தாக்குதல்களையும், இஸ்லாமிய ஜிஹாத் இயக்கம் 27 தற்கொலைத் தாக்குதல்களையும் நடத்தியுள்ளதாக அவர் கூறுகிறார்.

பொதுமக்கள் வாழும் பகுதிகளில் நடத்தப்படும் தற்கொலைத் தாக்குதல்கள், குறிப்பாக மோதல்கள் இடம் பெறும் வடக்குக் கிழக்கிற்கு வெளியே நடத்தப் படும் தாக்குதல்கள் யுத்தத்தின் பயங்கரத்தை வெளிப்பகுதி மக்கள் மத்தியில் கொண்டு வந்துள்ளது என்கிறார் கொழும்பிலுள்ள தேசிய சமாதானச் சபையின் முக்கியஸ்தரான ஜெஹான் பெரேரா.

'பயங்கரவாதத்தின் ஒரு வரலாறு' என்ற நூலுட்பட பல்வேறு நூல்களின் ஆசிரியரான லகுவார் என்பவர் இக் கூற்றினை நிராகரிக்கிறார். இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக இரத்தம் சிந்தி யுத்தம் நடத்தப்பட்ட போதிலும், புலி இயக்கம் தமது பிரதான இலக்கான அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்தை அடையவில்லை என்கிறார் லகுவார். "தற்கொலைத் தாக்குதல் முற்றுமுழுதாக சமயம் சார்ந்த விடயமல்ல. அது பைத்தி யக்காரத்தனம்" என்கிறார் லகுவார். "இப்போது நாம் இந்தப் பைத்தியக்காரத் தனம் முக்கியமாக இஸ்லாத்துடன் இணைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்" என்கிறார் லகுவார்.

### ஈராக்கே தற்போதைய மையம்

புலிகள் தற்கொலைத் தாக்குதலைக் கைவிட்டிருந்தாலும்கூட ஏனையவர்கள் தமது கைகளில் அதனை ஏற்றுள்ளனர். ரஷ்யாவில் செச்னிய முஸ்லிம் அடிப்படை வாதிகள் ஆகக் குறைந்தது 19 தற் கொலைத் தாக்குதல்களையாவது நடத்தி யுள்ளனரென்று பேராசிரியர் பாப்பேயின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. கடந்த வருடம் நூற்றுக்கணக்கானோர்களைப் பலியெடுத்த பாடசாலை மீதான தாக் குதல், மாஸ்கோ ரயில் நிலையத்தின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், இரு விமானங்கள் வீழ்த்தப்பட்டமையும் இதில் அடங்கும்.

அல்குவைதா இருபது தடவைகளுக்கு மேலாகத் தற்கொலைத் தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்தியுள்ளது. 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்கா மீதும் அதன் சகபாடிகள் மீதும் நடத்தப்பட்ட இத் தாக்குதல்களில் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி விமானங்களைக் கடத்தி நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்கு தல்களும் அடங்கும். இத் தாக்குதல்களில் கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் கொல்லப் பட்டனர்.

ஆனால், தற்கொலைப் பயங்கரவாதத் தின் உலக மையமாக இப்பொழுது ஈராக் திகழ்கிறது. 2003ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் சதாம் ஹுசைனின் சர்வாதிகார ஆட்சி வீழ்ச்சியடைந்தவுடனேயே, அமெரிக் காவின் தலைமையிலான துருப்புக்களின் மீது ஆங்காங்கே மறைந்திருந்து தாக்குதல்களும் வீதியோரக் குண்டு வெடிப்புக்களும் பரவலாக இடம் பெற்றன. "இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும், தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கும் இடையிலான தொடர்பு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது" என்று கூறும் பாப்பே, இதற்கு உதாரணமாக ஈராக்கிலும் வேறு நாடுகளிலும் இடம்பெறும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை எடுத்துக் காட்டுகின்றார். "அராபிய குடாவிலிருந்து அமெரிக்காவையும், ஏனைய நாடுகளையும் வெளியேற்று வதற்காக நடத்தப்படும் பிரதான தந்திரோபாயத் தாக்குதல்களே இவை" என்கிறார் பாப்பே. "லண்டன் தாக்குதல் கள், அல்குவைதா நடத்தும் தந்திரோ பாயத் தாக்குதல்களின் சர்வ சாதாரண மான அடுத்த கட்ட நடிவடிக்கையே இது" என்றும் கூறுகிறார் பாப்பே. ஏனையவர்கள் இந்தக் கருத்தை நிராகரிக்கின்றனர். தந்திரோபாயக் காரணங்களுக்காகவே தற்கொலைத் தாக்குதல்களை பயங் கரவாதத் தலைவர்கள் தேர்ந்தெடுக் கிறார்கள் என்பது தவறானது. குண்டுத் தாக்குதல் நடத்துபவர்களும் அவர்களது குடும்பத்தினரும் சமய நம்பிக்கைகளின் காரணத்தினால் இவற்றை நடத்த உந்தப் படுகின்றனர் என்கிறார்கள் இவர்கள். தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத் தும் 35 குழுக்களில் 31 குழுக்கள் இஸ்லா மிய மதம் சார்ந்தவை என்கிறார் சிக் காகோ பல்கலைக்கழக அரசியல் விஞ் ஞானத்துறை பேராசிரியர் புரூஸ் ஹொப்மன்.

"வெறுமனே அரசியல் சார்ந்ததென்று தற்கொலைத் தாக்குதல்களைக் காட்ட முனைவதானது, மதத்தின் தாக்கத்தைத் தவறாகப் புரிந்து கொள்வதாகும். மத்திய கிழக்கிலிருந்து அமெரிக்காவை வெளியேற்ற வேண்டுமென்று ஒசாமா பின்லேடனும் அவரது ஆதரவாளர்களும் கோருவதற்கு சமயமே காரணம்" என்கிறார் பெஞ்சமின் என்ற ஆய்வாளர்.

*நன்றி: 'வாஷிங்டன் போஸ்ற்'*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அன்று மாலை எனக்கு திரு.கே.வி.மகாதேவன் அவர்களோடு கம்போசிங்படம், 'அரச கட்டளை'. அது சரித்திரப் படம் என்பதால, காலையில் விஸ்வநாதனிடம் காட்டிய அதே பல்லவியை மகாதேவன் அவர்களிடம் கொடுத்து இசையமைக்க வேண்டினேன்.

மாமா அவர்கள் -



மகாதேவன் அவர்களை அப்படித்தான் அழைப்பார்கள். மிகச் சிறப்பாக அந்தப் பாடலுக்கு இசையமைத்தார்.

'அரச கட்டளை' படத்தை பாரகன் டாக்கீஸில் பார்த்துவிட்டு வந்து நள்ளிரவில் எனக்கு டெலிபோன் செய்தார் திரு.எம்.எஸ்.வி.

"வாலியண்ணே, நான் சொன்ன மாதிரியே அந்தப் பாட்டு சரித்திரக் கதைக்கு எவ்வளவு பொருத்தமா இருந்தது பாத்தீங்களா?... மாமா ரொம்ப அற்புதமா ட்யூன் பண்ணியிருக்காரு...." என்று மனந்திறந்து பேசினார் விஸ்வநாதன்.

அதுதான் விஸ்வநாதன். இன்னொரு இசையமைப்பாளராயினும், அவர்தம் பணி அவர் சிந்தையைக் கவருமாயின் வாய் விட்டு சிரக்கம்பம் செய்து ஆரவாரமாகப் பாராட்டுவார்.

'காம்போதி' ராகத்தில் 'மெழுகுத்திரி' என்று ஒரு பாடலை திரு.பூவை செங்குட்டுவன் எழுதியது. அமரர் திரு. எம்பி.ஸ்ரீனிவாசன் அற்புதமாக இசையமைத்திருந்தார். அவர் வீடு தேடிச் சென்று பாராட்டினார் விஸ்வநாத அண்ணன்.

'அரச கட்டளை' படத்தில் இடம் பெற்ற பாட்டு என்னவென்று சொல்லவில்லையே!

இதுதான் அது:

*'புத்தம் புதிய புத்தகமே! - உனைப்*
*புரட்டிப் பார்க்கும் புலவன் நான்;*
*பொதிகை வளர்ந்த செந்தமிழே! உனைப்*
*பாட்டில் வடிக்கும் கவிஞன் நான்.*

இவ்வளவு நெருக்கமாக, என்னைத் தன் உடன்பிறவாச் சகோதரனாக ஏற்று அன்பு பாராட்டி, என்னை ஆளாக்கியவர் விஸ்வநாதன் அவர்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் என்னிடம் மிகுந்த மனத்தாங்கல் கொண்டு ஒரு வாரம் என்னைப் பார்ப்பதையும், என்னுடன் பேசுவதையும் தவித்து வந்தார்.

### கல்யாணத்தின் கதை

விஷயம் வேறொன்றுமல்ல விஸ்வநாத அண்ணன் அவர்களுக்கு அழைப்பு வைக்காமலும், அறிவிக்காமலும் நான் விவாஹம் செய்து கொண்டு விட்டேன். 'கவிஞர் வாலியின் காதல் திருமணம்' என்று அனைத்து நாளேடுகளிலும் கொட்டை எழுத்துக்களில் வெளியிடப் பெற்றதன் மூலமே, என் திருமணச் செய்தியை அவர் அறிய நேர்ந்தது.


'மயிர் ஊடாடா நட்பும் பொருள் ஊடாடக் கெடும்' என்பது பழஞ்சொல், பொருள் ஊடாட நேரினும் கூடக் கெடாத நட்பை, நான் அலட்சியப்படுத்தி விட்டேன் என்று அண்ணன் விஸ்வநாதனுக்கு அளப்பரிய வருத்தம்.

உண்மையைச் சொல்லப் போனால், என் உடன் பிறந்த சகோதரர், சகோதரிகளுக்குக் கூட நான் என் திருமண விஷயத்தைத் தெரிவிக்கவில்லை; அழைப்பிதழும் அச்சிடவில்லை. அவ்வளவு ஏன்? திருமணத்தன்று ஓர் புகைப்படம் கூட எடுக்கப் படவில்லை.


காரணம், கல்யாணம் என் தனிப்பட்ட விஷயம் என்ற கருத்தை நான் கொண்டிருந்தது தான்.

விஸ்வநாத அண்ணனைப் போல் திரு.எம்.ஜி.ஆர். அவர்களும் என் திருமணச் செய்தியைத் தினஏடுகளில் பார்த்து திகைப்புற்றார்.

(தொடரும்.......)



---




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....

ஆர்னே சிறையிலிருந்து தன் மனைவிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூட ரஷ்யர்களை தான் ஏமாற்றியதாகவும் தன்னுடைய நாட்டிற்கு ஒரு போதும் துரோகம் நினைத்ததில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

### கொள்கைக்காக உளவு பார்த்தவர்

சில சமயங்களில் கொள்கைகளில் தீவிர பற்றுக் கொண்டவர்கள் அதற்கு விசுவாசமாக இருப்பதாக எண்ணிக்கொண்டு தேசவிரோத காரியங்களில் ஈடுபடுவதும் உண்டு. கிம் ஃபில்பி இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. அவர் ஆங்கிலேயர். கம்யூனிஸ சித்தாந்தத்தில் அழுத்தமான நம்பிக்கை உடையவர்.

கிம் ஃபில்பி, பர்ஜஸ், மேக்கிலியன் ஆகிய மூவரும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். அந்தக் காலத்தில் (1929) அந்தப் பல்கலைக் கழகத்தில் படித்த சில மாணவர்கள் கம்யூனிஸ சித்தாந்தத்தில் அழுத்தமான ஈடுபாடு கொண்டு தீவிர பிரசாரம் செய்து வந்தார்கள். பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறிய பிறகு இவர்கள் அந்த அளவுக்குத் தீவிரமாக இருப்பதில்லை.

கிம் ஃபில்பி ரொம்பவும் கெட்டிக்காரர். புத்திக் கூர்மையுடையவர். எதையும் சிறப்பாகச் செய்கின்றவர். ஆகவே அவர் கம்யூனிஸ சித்தாந்தத்தில் ஒரு காலத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார் என்று தெரிந்தும் இராணுவ உளவு இலாகாவில் முக்கிய பொறுப்பு ஒன்றுக்கு அவரை நியமித்தார்கள்.

பிரிட்டிஷ் அமெரிக்க இராணுவ நடவடிக்கை இணைப்பு நிர்வாகத்தில் அதிகாரியாக அவர் பணியாற்றினார்.

அவருடைய பல்கலைக்கழக நண்பர்களான பர்ஜஸ், மேக்கிலியன் ஆகிய இருவரும் பிரிட்டிஷ் வெளியுறவு இலாகாவின் முக்கிய அதிகாரிகளாகச் செயல்பட்டு வந்தார்கள்.

இருபதாண்டுகள் கிம் ஃபில்பி தனது பதவியைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் - அமெரிக்க இராணுவ நடவடிக்கைகள் பற்றிய பல ரகசியத் தகவல்களையும் ரஷ்யாவுக்குக் கொடுத்து வந்திருக்கிறார். இந்தத் தகவல்களைப் பயன்படுத்திக் கொண்டு ரஷ்யர்கள், பிரிட்டனும் அமெரிக்காவும் மேற்கொண்ட பல நடவடிக்கைகளை வெற்றி பெறாமல் தடுத்தார்கள்.

இத்தனைக்கும் ஃபில்பி பிரிட்டனுக்கும் அதன் நேச நாடான அமெரிக்காவுக்கும் சாதகமான காரியங்களில் ஈடுபட்டிருப்பதைப் போலவே அனைவரையும் நம்ப வைத்தார். குடிக்கின்ற பழக்கம் உடையவர் அவர். நல்ல போதையிலிருக்கும் போது கூட, அவர் வாய் தவறி வார்த்தைகளை வெளியிட்டதில்லை. வியன்னா, மேட்ரிட், லண்டன், இஸ்தான்புல், வாஷிங்டன் என்று பல இடங்களிலும் தனது தொடர்பு மனிதரைக் கொண்டு தன்னுடைய உளவு வேலைகளை வெற்றிகரமாகச் செய்து வந்தார்.

அவருடைய நடவடிக்கைகள் எதுவும் CIA உளவாளிகளுக்கோ அல்லது பிரிட்டிஷ் உளவாளிகளுக்கோ தெரியாமல் போயிற்று என்பது அவருடைய திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1945இல் தற்செயலாக நடந்த ஒரு சம்பவம் ஃபில்பியின் நடவடிக்கைகளைக் காட்டிக் கொடுத்தது.

1945இல் ஓல்கா என்கிற ரஷ்யத் தூதரக அதிகாரி, இஸ்தான்புலில் உள்ள பிரிட்டிஷ் கான்சல் அலுவலகத்தில் புகலிடம் கேட்டார். அவர் தன்னை ஒரு KGB அதிகாரி என்று அறிவித்துக் கொண்டார்.

(தொடரும்.......)


(நன்றி : நர்மதா)

---

தற்போதைய மனித குலத்துக்கே மாபெரும் சவாலாக விளங்குகின்ற எச்.ஐ.வி. கிருமிகளின் தோற்றம் பற்றிய சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வது ஒரு பிரச்சினையாகவே இருந்து வருகிறது. இது தொடர்பில் ஆய்வுகளின் பிரகாரம், ஓரளவுக்கேனும் ஏற்றுக்கொள் ளத்தக்க ஓர் எண்ணக் கரு யாதெனில், ஆபிரிக்க பச்சை நிறக் குரங்குகளில் இருந்து இக் கிருமிகள் மனிதர்களுக்குள் பாய்ச்சப்படுகின்றது என்பதாகும். இந்தக் கருத்து உண்மை எனில், மேலும் பல காட்டு மிருகங் களிடத்தேயும் இக் கிருமிகள் காணப்படக் கூடும் என்பதை யும். இவை மனிதர்களுக்குள் ஊடுருவி நாம் கண்டறி



# மாமிசங்களை உண்பதிலும் 'எய்ட்ஸ்' கிருமிகள் தொற்றுகின்றன



யாத மேலும் பல நோய்கள் ஏற்படக் கூடும் என்பதையுமே இது எடுத்துக்காட்டுகின்றது.

மனித வர்க்கத்துக்கே பெரும் பிரச்சினையாகவுள்ள இந்த விடயம் தொடர்பாக அண்மையில் நிவ்யோர்க், கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாகக் காட்டு மிருகங்களை வேட்டையாடி உணவாக உட்கொள்ளும்போது எச்.ஐ.வி. கிருமிகள் மனிதர்களுக்குள் பாய்ச்சப்படக் கூடிய அபாயங்கள் வெகுவாகத் தென்படுவதாக இதன் போது அறியப்பட்டுள்ளது.

மிருகங்களை உணவாகக் கொள்ளும்போது அம் மிருகங்களுக்குள் காணப்படுகின்ற நோய்கள் மனிதர்களுக்குள் நுழைகின்றன.

எவ்வகையிலான மிருகங்கள் எந்தளவில் வேட்டைக்கு இரையாகும் என்பதைக் கூற இயலாது. அதாவது இன்ன, இன்ன மிருகங்களைத்தான் என்று குறிப்பாக வேட்டையாடுவது கிடையாது என்பதாலும், பல்வேறு மிருக வகைகள் வேட்டையாடப்படுவதாலும் எச்.ஐ.வி. கிருமிகளின் தொற்றுதல் குறித்து புள்ளி விபரமிட்டு ஒழுங்காகக் கூற இயலாது என்கிறார் மேற்படி ஆய்வில் கலந்து கொண்ட டேவிட் வில்க்கீ என்பவர்.

குறிப்பாக தென்னாபிரிக்க நாடுகளில் பல்வேறுபட்ட மிருகங்கள் வேட்டையாடப்பட்டு வருகின்றன. இவற்றில் திறந்த சந்தைக்கு விற்பனைக்காக வருபவை நூற்றுக்கு 40 வீதமாகும். ஏனையவை அன்றாட நுகர்வுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

இதேநேரம் ஆபிரிக்காவில் கெமரூன் பகுதியில் எச்.ஐ.வி. நோய்க் கிருமிகள் கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இவர்கள் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், இக்கிருமிகள் எவ்வாறு நுழைந்துள்ளன என்பது குறித்து இனங்கண்டுகொள்வதில் பெரும் சிரமங்கள் தோன்றி யுள்ளன.

இதே நேரம் இவ்வகை மிருகங்களிடையே எச்.ஐ.வி. கிருமிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதாவது எச்.ஐ.வி. கிருமிகளின் பரிணாமம்தான் எச்.ஐ.வி. கிருமிகளாகும் என்றொரு கருத்து நிலவி வருகின்றது. இந்த வகையிலான மிருகங்கள் ஆபிரிக்க நாட்டு மக்களின் அறுசுவை உணவாக உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதே நேரம் மிருகங்களை விவசாய நடவடிக் கைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்வதாலும், வளர்த்து வருவதாலும் இதுவரைகாலமும் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையில் இல்லாததொரு நெருக்கம் ஏற்படுகின்றது. இது கூட கிருமிகள் பரிமாற்றத்துக்கு ஒரு சிறந்த வழியாகவே காணப்படு கின்றது.

இலங்கையில் கூட மிருகங்களை வேட் டையாடுவதில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். மிருக வளர்ப்பு களிலும், செல்லப் பிராணிகளை வளர்ப்பதிலும் ஈடுபாடு கொண்டுள்ளனர். எனவே, அவற்றின் மூலமான கிருமிகளின் பரிமாற்றம் தொடர்பில் நாம் மிகவும் அவதானமாக இருப்பது அவசியமாகும்.


இதே நேரம் சீன நாட்டுப் பேராசிரியர் ஒருவர் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக புதியதொரு மருந்தினைக் கண்டுபிடித்திருப்பதாகவும் ஆய்வுத்தகவல் கள் கூறுகின்றன.

கிழக்கு சீனப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான, தொழில்நுட்பப் பிரிவின் பேராசிரியர் மேனங் யூத் என்பவர் தனது ஐந்தாண்டு கால ஆய்வுகளின் முடிவில் இந்த மருந்தினைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்த மருந்தினை மேலும் விருத்தி செய்து எய்ட்ஸ் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கு - உபயோ கிப்பதற்கு - சீன அரசின் உதவிகளும் கிடைக்க வேண் டும் என்பது பேராசிரியர் யூத்தின் கருத்தாகும்.

இந்த மருந்தினை ஆராய்ந்து கண்டுபிடிக்கும் செயற்பாடுகள் அனைத்தும் கணனியின் மூலமே மேற் கொள்ளப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.


பேராசிரியர் குறிப்பிடும் வகையில், செயற்கையான என்ஸைம்மினை முன்னேற்றகரமாக்கியதன் மூலம் இந்த மருந்து கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த என்ஸைம் 'இன்' என இனங்காட்டப்பட்டுள்ளது. அதாவது 'இன்' என்ன



ஸைம்மின் செயற்பாடு காரணமாக மனித ஷெல் களுக்குள் எச்.ஐ.வி. கிருமிகள் உட்செல்வதானது தடை செய்யப்படுகின்றது.

இதே நேரம் உள்வாங்கப்பட்டிருக்கும் எயிட்ஸ் கிருமிகளை செயற்பாடிழக்கச் செய்யவும் உதவுகின்றன.

இதுவரை காலமும் நடைபெற்றுள்ள கண்டுபிடிப்பு களின் பிரகாரம் எச்.ஐ.வி. கிருமிகளுடன் போராடக் கூடிய ரிஷல் மட்டங்களை அதிகரிக்கும் நடவடிக் கைகளே இனங்காணப்பட்டுள்ளன. எச்.ஐ.வி. கிருமிகள் உள்நுழைந்து வளர்ச்சி பெறக்கூடிய நிலையைத் தடைசெய்வதற்கு இந்த மருந்து வகையினால் இயலாது போயுள்ளது. இதனடிப்படையில் பார்க்கும்போது இப்புதிய கண்டுபிடிப்பானது எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்து வகைகளில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது எனலாம்.



-பாரூக்

# "வீட்டு வேலைகளில் வெந்து சாகிறோம்"

## (உண்மைச் சம்பவம்)



கொழும்பில் வாழுகின்ற அனேக பணம் படைத்தவர்களின் வீடுகளில் ஆகக் குறைந்தது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் வேலை யாட்களாக இருக்கிறார்கள். இதில் மலையகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாகவே வேலையில் அமர்த்தப் படுகின்றனர். இதற்குப் பிரதான காரணம், குறைந்த சம்பளத்தில் வேலை செய்யக் கூடியவர்களாகவும், எஜமானர்களால் அவர்களுக்கு எதிராகப் புரியப்படும் அநியாயங்களை எதிர்த்து வாதிடக் கூடியவர்களாக இல்லாதிருத்தலும், இதற்கும் மேலாகப் பெற்றோர்களாலேயே வலுக்கட்டாயமாக வேலையில் அமர்த்தப் படுவதுமாகும்.

இவ்வாறு தனது பதின்மூன்றாவது வயதிலே பணத்திற்காகப் பெற்றோரினாலேயே கொழும்பில் வீட்டுவேலைக்கு அமர்த்தப்பட்ட வட்டகொட எனும் ஊரைச் சேர்ந்த குமாரி என்பவர் அனுபவித்த உண்மைச் சம்பவம் இது.

முதன் முதலில் குமாரி வீட்டு வேலைக்காக தனது 13ஆவது வயதில் தமிழ் வீட்டில் இணைந்துள்ளார். அங்கேயே அவரது 14ஆவது வயதில் பூப்பெய்தியும் உள்ளார். அதன் பின்னர் 2 ஆண்டுகள் கழிந்த நிலையில் வீட்டு எஜமான் தன்னை நடத்திய விதம் பிடிக்காமல் போனதால் அங்கிருந்து விடுபட்டு, கொழும்பு கோட்டையில் பிரபல வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளரான சிங்கள நபரொருவரின் வீட்டில் வேலையில் சேர்ந்துள்ளார். ஏற்கனவே மூன்று பேர் வேலை செய்த அவ் வீட்டில் தனியாளாக வேலை செய்து சமாளித்துக் கொள்வதில் குமாரி பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளார். இது பற்றி எப்போதாவது ஊரில் இருந்து தன்னைப் பார்க்க வரும் தகப்பனாரிடம் தான் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்.

ஆனால், அவரது தந்தையான கிருஷ்ண பிள்ளை, குமாரியின் மன உளைச்சலையோ, வேதனையையோ புரிந்து கொள்ளவில்லை. மாறாக, குமாரியின் உழைப்பின் சம்பளப் பணத்தை பெற்றுச் செல்வதிலேயே குறியாக இருந்தார். போதாக்குறைக்கு வீட்டு எஜமானர்களோடு சேர்ந்துகொண்டு சில சமயங்களில் குமாரியைத் தாக்கிய சம்பவங்களும் உண்டு. பணத்திற்காகத்தான் தன்னைப் பார்க்க வருகிறார் தந்தை என்ற வேதனையை விடவும் எஜமானர்களோடு சேர்ந்து கொண்டு தன்னைத் தாக்குகின்ற போது இச் சமூகத்தில் இருந்து மிகவும் தனிமைப் படுத்தப்பட்டு விட்டதான உணர்வே குமாரியை கூனிக்குறுகச் செய்தது. இந்த இயலாமையால் கொழும்பில் வேலை செய்யும் தனது மாமாவின் உதவியோடு வேறொரு வீட்டிற்குச் செல்ல விரும்பினாலும், அது அவ்வளவு விரைவில் சரிவராததால் வட்டகொடையில் உள்ள தனது வீட்டிற்கே செல்ல நேரிட்டது. சுமார் நான்கு வருடங்களாக வீட்டுக்காக உழைத்து பல்வேறு துன்ப துயரங்களைச் சுமந்து வீட்டுக்கு வந்த குமாரியை வீட்டார் வரவேற்காவிட்டாலும் அன்பு காட்டக்கூட எவரும் இருக்கவில்லை. மிச்சமாக இருந்தது உறவுகளின் வெறுமையும், ஏமாற்றமும்தான். கூடவே அதிர்ச்சிச் செய்தி ஒன்றும் காத்திருந்தது. குமாரியின் இரண்டு தங்கைகளுமே கொழும்பில் வேலைக்குச் சென்றிருப்பதாக தாயாரால் கூறப்பட்டது. 8 வயதான கடைசித் தம்பி மட்டும் தூரத்து உறவைப் போல் குமாரியைப் பார்த்தபோது கதறி அழுதே விட்டாள்.

அடுத்த நாளே குமாரி கொழும்பு திரும்பி மாமாவின் துணையோடு வேலை தேடி அலைந்தாள். முன்பிருந்த வீட்டின் சாரதியின் உதவியோடு முஸ்லிம் வீடொன்றில் வேலைக்குச் சேர்ந்து வருடங்கள் பல உருண்டோடி விட்டன. குமாரிக்கு இப்போது வயது 23 ஆகிறது. அவ்ள் வேலை செய்த இடத்தைத் தெரிந்து கொண்ட குமாரியின் அப்பா அடிக்கடி வந்து குமாரியைப் பார்ப்பதை விடவும், பணம் வாங்கிச் செல்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு வாங்கிச் சென்ற பணத்தில் குமாரியின் எதிர்காலத்திற்காக பணமாகவோ, நகையாகவோ எதையும் மீதப்படுத்தவில்லை. இவ்வாறுதான் ஏனைய இரு தங்கைகளின் உழைப்பையும் சூறையாடிக் கொண்டிருந்தார் கிருஷ்ணபிள்ளை. குமாரியின் வயது, இளமை, தனிமை என்பவற்றைத் தவறாகப் பயன்படுத்த முனைந்த நண்பர்கள், உதவியாளர்கள், தெரிந்தவர்கள் ஆகியோரின் வலைக்குள் சிக்காமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியே குமாரிக்கு பெரும் சவாலாக இருந்தது. நாளுக்கு நாள் பிரச்சினைகள் குமாரியைத் துரத்தியபோது நிம்மதியாக வேலைபார்க்க முடியாத சூழல் உருவானது. கடைசியாக வேலை செய்த வீட்டு எஜமானி, சாரதி ஆகியோரின் துன்புறுத்தல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் கஷ்டமான வேளைகளிலெல்லாம் ஓடி வந்து சிறைமீட்கும் மாமாவின் துணையோடு வீட்டை விட்டு வெளியேறினாள்.

வீட்டுக்குப் போக முடியாமல், மாமாவுக்குப் பாரமாகவும் இருக்க விரும்பாமல் விரக்தியின் விளிம்பில் இருந்த குமாரியை நாம் சந்திக்க நேர்ந்தபோது, கடந்த ஒன்பது ஆண்டுகளாக அனுபவித்த விடயங்களைக் கூறிக் கதறி அழுத காட்சி வேதனை மிகுந்ததாகும். இது ஒரேயொரு குமாரி பற்றியது அல்ல. உண்மையிலேயே வெளி உலகிற்குத் தெரியாமல் ஊரான் வீட்டுச் சமையலறையில் கருகிப் போகும் ஓராயிரம் குமாரிகளின் ஒரு வெளிப்பாடு மட்டும்தான் இது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய பல கேள்விகளையும் எழுப்பி அதற்கான பதில்களையும் நாமே தேடிக் கொள்வோம். இந்தக் கேள்விகளும் பதில்களும் பாதிக்கப்படுகின்ற குமாரிகளை மீட்கவும் புதிய குமாரிகளை உருவாக்காமலும் இருக்க உதவினால் நன்மைக்குரியதே.

### பெற்றோர்களுக்கு...


திட்டமிட்ட குடும்ப அமைப்பும், திருப்தி தராத வருமானமும் வறுமையை மேளதாளத்தோடு வீட்டு வாசலுக்கு அழைத்து வருவதைத் தடுத்து விட முடியாது. ஆனால் குடும்பச் சுமையுடன் வறுமைச் சுமையையும் சுமக்க முடியாமல் கணவன், மனைவி இருவரும் தொழிலுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த நிர்ப்பந்தம் தமது பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்கு அனுப்புகின்ற கட்டாயத்தை ஏற்படுத்துகின்றது. இந்த வறுமைக்கெதிரான போராட்டத்தில் நியாயம் இருந்தாலும் தாய், தந்தையரைப் பிரிந்து அடிமைப்பட்டு வாழும் பிள்ளைகளின் உழைப்பும் பெற்றோரின் உழைப்பும் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையாயின், பட்ட துன்பங்களுக்கு என்ன நியாயம் இருக்க முடியும். பெற்றோர் சிந்திக்க வேண்டும். பராயம் அடைவதற்கு முன்பாகவே தனிமைப்படுத்தப்படும் சிறுவர், சிறுமியர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஓராயிரம் உள்ளன. அதையும் தாண்டி தப்பிப் பிழைக்கும் ஒருவனோ, ஒருத்தியோ பெற்றவர்களாகிய உங்களின் விருப்பத்திற்குரியவராக இல்லாமல் விரக்தியின் உருவங்களாகவே மாறிப் போவார்கள். அதற்குக் காரணம் இளமையில் தனிமை, பெற்றோரின் பாசமின்மை, சமூக நெறிமுறை பற்றிய அக்கறையின்மை, தமது அறியாமை மீது புரியப்படும் வன்முறை, ஏமாற்றுத்தனம், துஷ்பிரயோகம் என்பனவாகும்.

அது தவிர பெண்பிள்ளைகளாயின் மேற்சொன்ன அத்தனை வஞ்சகங்களுக்கு மிடையே தப்பிப் பிழைப்பதே பெரும்பாடு. அப்படித்தான் தப்பிப் பிழைத்தாலும் வாழ்க்கைத் துணையை ஏற்படுத்திக் கொள்வதில் உருவாகின்ற புதிய சிக்கல்கள், அவளின் கற்பு மீதே கேள்விக் கணைகளையும், சந்தேக அம்புகளையும் தொடுத்துத் துளைக்கும். இந்தப் பரிதாபத்திற்குள்ளிருந்து தன்னை நிரூபித்துக் கொள்வது எத்தனை கொடூரம் என்பதை யாரால் புரிந்து கொள்ள முடியும்?

இதனூடாக சந்தேகமே நிகழ்கால சந்தோஷத்தைக் கெடுப்பதோடு வாழ்நாள் பூராவும் துன்பப்படுத்தும். இதற்குப் பயந்து எத்தனையோ குமாரிகள் மணமேடையை கனவுகளோடு கைவிட்டு விடுகிறார்கள். இல்லையாயின் நரகத்திற்குள் வாழ சம்மதிக்கிறார்கள். இந்த இருண்ட சமூகத்தின் விடியல் எப்போது என்பதே பெறுமதி மிக்க கேள்வியாக உள்ளது. (சிறுவர், சிறுமியரை வேலைக்கு அமர்த்துபவர்களினதும் தரகர்களினதும் அணுகுமுறைத் தவறுகளையும், அதற்கான சட்டப் பரிகாரங்களையும் அடுத்த வாரம் பார்ப்போம்.)

(குறிப்பிட்ட பெயர்கள் கற்பனையாகும்)

*சந்திப்பு: மதி*
*படஉதவி: சிவா*




அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது. எண்ணியவாறு எத்தினையாம் திகதி எத்தினை மணிக்கு நிறைவேறும். என்பதை திட்டவட்டமாக தெரிந்து கொள்ள, மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை. வெளிநாட்டவர்கள் FAX மூலம் விபரம் அனுப்பலாம்.

FAX No : 0094 112344832.

ஜோதிடத் திலகம்,
பேராசிரியர் டாக்டர் P.K. சாமி J.D.G.A.N (J.P.)
162. கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13.
தொ.பேசி : 2342463, 2342464, 2470615.


# சனிப் பெயர்ச்சி பலன்கள்

தினமுரசின் அபிமான வாசகர்களே! உங்களுக்காக சனிப் பெயர்ச்சியின் பின்னரான பலாபலன்களை விரிவாக கணித்துத் தந்துள்ளார் உலக மாந்திரீக சித்தர் பேராசிரியர் டாக்டர் பி.கே.சாமி ஐயா அவர்கள். அறிந்து அனுகூலமடையுங்கள். இதோ அவரது ஆசியும், அருளும்.

**இந்தப் பகுதியில் சனிப் பெயர்ச்சியையும் குரு மாற்றத்தையும் கலந்து எழுதியுள்ளேன். பொதுவாக ராசி வாரியாக கொடுத்து இருந்தாலும் தீய பலன் உள்ளவர்கள் பயப்பட அவசியம் இல்லை. காரணம் உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ராசி நேயருக்கு இந்த சனிப் பெயர்ச்சி நன்மையாக இருந்தால், நீங்களும் தீய பலனில் இருந்து விலக வாய்ப்பு இருக்கின்றது. நல்ல திசைகளும் துணைக் கிரகங்களின் பார்வைகளும் நன்மையாக இருந்தால் தீய பலன் வருவதற்கு வாய்ப்பு இல்லை.**

**ஓம் சத் மத் யத் மத்**

## கர்க்கடகம்



**கடக ராசி - ஜென்மச் சனி**

சனி பகவான் 24.06.2005 முதல் ராசி மாறி உங்களது ஜென்ம ராசியில் சஞ்சரிக்கிறார். இது ஏழரைச் சனியின் மையப் பகுதியாகும். இப்போதும் அவர் நன்மை செய்யப் போவதில்லை. இதனால் தேவையற்ற பொருள் விரயம் உண்டாகும். அதனால் கையிருப்பு கரைந்து போகும். அடுத்தவர்களுக்காகச் சில பிரச்சினைகளில் தலையிட்டு அதனால் உங்களுக்குப் பொருள் இழப்பும் கௌரவக் குறைவும் ஏற்படும்.

நிம்மதி குறைந்து உறக்கம் கெட்டுப் போகும். உடல் பலவீனமான நிலையில் இருக்கும். சொந்த பந்தங்கள் உங்கள் மீது காரணமில்லாமல் விரோதம் கொள்வார்கள்.

மனதில் இனம் புரியாத குழப்பமும் கவலையும் தோன்றும். குழப்பத்தோடு செய்யக் கூடிய காரியங்கள் மாறுபட்டோ தவறாகவோ போய் விடலாம். அதனால் செய்த காரியங்களையே மீண்டும் ஒரு முறை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அதனால் பல இழப்புகளையும் மனச் சஞ்சலத்தையும் அடைய வேண்டி வரும்.

தெய்வ நம்பிக்கை குறையும். உங்களது இரக்க சுபாவத்தை அடுத்தவர்கள் தவறாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். பொதுச் சேவையில் ஆர்வம் குறையும். மன அமைதி குறைந்து கோபமும் பதற்றமும் ஏற்படும். தொழில் ரீதியான சில இடையூறுகள் ஏற்படும். திட்டமிட்ட காரியங்களில் தடை தாமதங்கள் உருவாகும். உடல் ஆரோக்கியத்தில் குறைபாடு தோன்றும். சமுதாயத்தில் உங்களுக்கிருக்கும் மதிப்பு மரியாதைகளுக்கு குறைவு ஏற்படும். தேவையற்ற பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டி வரும். ஒரு சிலர் செய்யாத குற்றங்களுக்குத் தண்டனை அனுபவிக்க நேரும். இயல்பாகப் பேசுகிற பேச்சுக்கூட வாக்குவாதங்களாக மாறி வம்பு வழக்குகளில் போய் முடியும். எனவே நா காப்பது அவசியம்.

இனி அவர் பார்வைகள் மூலம் என்ன பலன்களை அளிப்பார் என்று பார்ப்போம்.

சனி பகவான் மூன்றாம் பார்வையாக உங்கள் ராசிக்கு மூன்றாமிடத்தைப் பார்க்கின்றார். இதனால் உடன்பிறந்த சகோதரங்கள் உங்கள் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கமாட்டார்கள். பூர்வீகச் சொத்துக்களில் பாகப்பிரிவினை ஏற்படவும் இடமுண்டு. சொந்த பந்தங்களே விரோதம் கொள்வார்கள்.

பிரயாணத்தின் மூலம் சிலபல இடையூறுகள் ஏற்பட இடமுண்டு. தொழில் வியாபார ரீதியான ஒப்பந்தங்கள் கை நழுவிப் போகவும் இடமுண்டு. மனத்தில் தெம்பும் தைரியமும் குறைந்து சோம்பல் அதிகரிக்கும். நண்பர்கள் தக்க சமயத்தில் உதவிக்கு வர மாட்டார்கள்.

ஏழாம் பார்வையாக சனி பகவான் ஏழாமிடத்தைப் பார்ப்பதால் திருமணமாகாத இளம் வயதினர்க்குத் திருமணத் தடை ஏற்படும். தொழில், வியாபார ரீதியாகக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வெளியிடங்களில் தங்க நேரிடும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். அவரது உடல் நலமும் பாதிப்படையலாம்.

சனி பகவான் பத்தாம் பார்வையாக உங்கள் ராசிக்குப் பத்தாமிடத்தைப் பார்க்கிறார். இதனால் விவசாயம், தொழில், வியாபாரம், உத்தியோகம் முதலிய எல்லாவற்றிலும் எல்லோருக்கும் பிரச்சினைகளும் தொல்லைகளும் தோன்ற ஆரம்பிக்கும். ஜீவனாதாரம் நல்லபடியாக இயங்காமல் வேதனை தரும். உத்தியோகஸ்தர்கள் பதவி இழப்பிற்கு ஆளாக நேரிடலாம்.

அடுத்து குரு பகவானைப் பார்ப்போம். குரு பகவான் வருட ஆரம்பம் முதல் 19.9.2005 வரை மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். மூன்றாமிடம் குருவின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல. இதனால் பிரச்சினைகளைச் சரியானபடி தீர்க்க முடியாமல் மனம் ஊசலாடும். மனோதிடம் குறைந்து பயம் தோன்றும். உடன் பிறந்தவர்கள் கருத்து வேற்றுமை கொள்வார்கள்.

குழப்பமான சூழ்நிலை உருவாகும். பணியாட்கள் கீழ்ப் படிந்து நடக்காமல் சில பல பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள். தொழில், வியாபாரம், உத்தியோகம் சிறப்பாக இருக்காது.

இனி குருவின் பார்வை பலன்களைப் பார்ப்போம்.

குரு பகவான் ஐந்தாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஏழாமிடத்தைப் பார்ப்பதால் மனைவியின் உடல் நலம் பாதிப்படையும். அவருடன் கருத்து வேறுபாடு ஏற்படவும் இடமுண்டு. அவர் வகையான வருமானம் தடைபடும். கூட்டுத் தொழிலில் இலாபம் கிடைக்காது. கூட்டாளிகள் தேவையற்ற சிலபல பிரச்சினைகளை ஏற்படுத்துவார்கள்.

குரு பகவான் ஏழாம் பார்வையாக உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடத்தைப் பார்ப்பதால், மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் தேர்வுகளில் மதிப்பெண் குறைந்து போக வாய்ப்புண்டு. தெய்வீகத் திருப்பணிகளில் ஆர்வம் குறையும். தகப்பனாரின் உடல்நலம் பாதிப்படையும்.

குரு பகவான் ஒன்பதாம் பார்வையாக உங்கள் ராசிக்கு பதினோராமிடத்தைப் பார்ப்பதால் திட்டமிட்ட காரியங்கள் உடனே நடக்காமல் அனுமாருக்கு வால் நீண்டதுபோல நீண்டு கொண்டே போகும். செய் தொழில், வியாபாரங்களில் எதிர்பார்த்த இலாபம் கிட்டாது.

இத்தகைய இன்னல்களைக் கொடுத்து வந்த குரு பகவான் 19.9.2005 முதல் ராசி மாறி உங்கள் ராசிக்கு நான்காமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். நான்காமிடமும் குருவின் சஞ்சாரத்திற்கு உகந்த இடமல்ல. சனி, குரு இருவருமே சரியில்லை என்றால் எங்கள் நிலை என்னாவது என்றுதானே கேட்கிறீர்கள். பயப்பட வேண்டாம். மாத கிரகங்கள் நிச்சயம் கை கொடுக்கும். பல கேஸ்களில் இது நடந்தும் இருக்கிறது. எனவே அவைகளை நம்பலாம். கவலையை விட்டுத் தள்ளுங்கள். எடுத்த காரியங்களை உடனே முடிக்க முடியாமல் வீண் அலைச்சல் தோன்றும். உடல் நலம் பாதிப்படையும். தொழில், வியாபாரம் ஆகியவை மந்தமடையும். செய்ய வேண்டிய வேலைகளை ஒத்திப் போட நேரிடும்.

*(அடுத்த வாரம் சிங்க ராசியைப் பற்றி பார்க்கலாம்...)*



விண்ணும் மண்ணும் தனியாளும் - எங்கள்
வீரை சக்தி நிளதருளே - என்றன்.
கண்ணுங் கருத்தும் எனக்கொண்டு - அன்பு
கசிந்து கசிந்து கசிந்துருகி - நான்.

- சுப்பிரமணிய பாரதியார்



# ஊரைத் திருத்திய பிள்ளைகள்

சோளவரம் இயற்கை எழில்மிக்க அழகிய கிராமமாகக் காட்சியளித்தது.

அந்தக் கிராமத்து மக்கள் எல்லோரும் அருகில் இருக்கும் நகரங்களில் சென்று ஏதாவது கூலி வேலையினைச் செய்து வாழ்க்கையைக் கழித்து வந்தார்கள்.



மாலை வேளையில் அந்தக் கிராமத்து ஆண்கள் எல்லோரும் கிராம எல்லையில் சீட்டாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

அதனைப் பார்த்த கிராமத்துப் பெண்கள் எல்லோரும் வருத்தமடைந்தார்கள். தங்கள் கணவர்களை சீட்டாட விடாமல் தடுத்தனர்.

ஆனால், அவர்களோ தங்கள் மனைவிமாரின் பேச்சைக் கேட்காமல் சீட்டாடுவதைத் தொடர்ந்து செய்து வந்தனர்.

தங்கள் கணவர்கள் வேலை செய்து சம்பாதித்த பணத்தையெல்லாம் சீட்டாடித் தொலைக்கின்றார்களே! என்று மிகவும் கவலையடைந்தனர் அந்தக் கிராமப் பெண்கள்.

அந்தக் கிராமத்துச் சிறுவர்கள் எல்லோரும் ஒன்று கூடி நற்பணி மன்றம் ஒன்றை அமைத்திருந்தனர். அந்த நற்பணி மன்றத்தின் மூலமாக ஊர் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தனர்.

ஒருநாள் சிறுவர்கள் எல்லோரும் ஊரில் இருக்கின்ற கோயில் மண்டபத்தில் ஒன்று கூடினார்கள்.

"நண்பர்களே! நம் தந்தையார்கள் எல்லாம் சீட்டாடுவதால் அம்மாமார்கள் எல்லாம் பெரும் கவலையடைகிறார்கள்! தினமும் வீட்டில் சண்டைதான் நடக்கிறது. அதனால் நம்முடைய படிப்பெல்லாம் பாழாகிறது. நாம் இதற்கெல்லாம் சேர்த்து ஒரு முடிவு கட்ட வேண்டும். இனிமேல் இந்தக் கிராமத்தில் யாரும் சீட்டாடக் கூடாது. அந்த வகையில் நாம் ஏதாவது செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தச் சீட்டாட்டத்தை ஒழித்து ஊரில் அமைதியினைத் தேட முடியும்" என்றான் ஒரு சிறுவன்.

"ஆமாம்! நீ சொல்வது சரிதான். சீட்டாட்டத்தை ஒழிக்க நாம் என்ன செய்ய முடியும்? நாம் செய்கின்ற வேலையானது நல்ல விதமாக அமையவேண்டும்" என்றனர் மற்றச் சிறுவர்கள்.

சிறுவர்கள் எல்லோரும் நீண்ட நேரமாக யோசனை செய்தார்கள்.

உடனே ஒரு சிறுவன், "நண்பர்களே! நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து நகரில் இருக்கின்ற காவல் நிலையத்திற்குச் செல்வோம்! அங்கே நமது நற்பணி மன்றத்தின் சார்பில் காவல் அதிகாரிக்கு மனு ஒன்றைக் கொடுப்போம். அந்த மனுவில் நம் கிராமத்தில் நடைபெறுகின்ற சீட்டாட்டத்தை ஒழித்து, சூதாட்டமே இனி ஊரில் நடைபெறாமல் இருக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வோம்" என்றான்.

"நண்பனே! நீ கூறிய யோசனை நன்றாகத்தான் இருக்கிறது! ஆனால் காவல் அதிகாரியிடம் இந்த மனுவை நாம் கொடுக்கும் போது, அவர் காவலர்களை அனுப்பி வைத்து நம் தந்தையார்களை எல்லாம் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று நன்றாக அடித்து விடுவார். நம் தந்தையார்கள் எல்லாம் காவல் நிலையத்தில் துன்பப்படுவதை நம் அம்மாக்கள் கண்டால் எல்லாம் அழுது புலம்புவார்களே! அதனால் நாம் வேறு ஏதாவது யோசனையைக் கையாண்டு இதற்கொரு முடிவினை ஏற்படுத்துவோம்" என்றான் இன்னொரு சிறுவன்.

அப்போது ஒருசிறுவன் "நண்பர்களே! என் மனதில் ஒரு யோசனை தோன்றுகிறது. அதன்படி நடந்தால் யாருக்கும் பாதிப்பில்லாமல் நம் அம்மாமார்களுக்கு எந்தத் துன்பத்தையும் கொடுக்காமல் மிகவும் எளிதாகக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்!" என்று கூறினான்.

"அது என்ன யோசனை என்று கூறு!" என்று ஆவலோடு கேட்டனர் மற்ற சிறுவர்கள்.

அதனைக் கேட்ட அந்தச் சிறுவன் "நண்பர்களே! பக்கத்துக் கிராமத்தில் நாடகம் நடத்தும் ஆட்கள் வந்திருக்கின்றார்கள்.

**பாப்பா முரசு சிறுகதை**

அவர்களில் இருவர் காவல்காரர்கள் வேடத்தில் நடிக்கின்றார்களாம். பொலிஸ் ஆடையுடன் அவர்கள் நாடக ஒத்திகைப் பார்த்துக் கொண்டிருந்ததை நான் கண்டேன். இப்போதே நாம் அவர்களைச் சந்தித்து, நமது கிராமத்தின் நிலையினை எடுத்துக் கூறுவோம்! அவர்கள் பொலிஸ்காரர்கள் போன்று வேடமணிந்து வந்து சீட்டாட்டத்தைக் கலைத்து, எச்சரிக்கை செய்தால் அதன் பின்னர் யாருமே ஊரில் சீட்டாடமாட்டார்கள்" என்றான்.

"நண்பனே! நல்ல யோசனையைத்தான் நீயும் கூறினாய்! நாம் இப்போதே சென்று அந்த நாடகக்காரர்களைப் பார்ப்போம்! அவர்களிடம் நமக்குக் கிடைக்க வேண்டிய உதவிகளைக் கேட்டுப் பெறுவோம்!" என்றனர் மற்ற சிறுவர்கள்.

உடனே எல்லாச் சிறுவர்களும் ஒன்று கூடியபடி அடுத்த ஊரில் தங்கி இருக்கின்ற நாடகக் குழுவினரைப் பார்க்கச் சென்றார்கள்.

நாடகக் குழுவினர் சிறுவர்களை இன்முகத்துடன் வரவேற்றார்கள்.

சிறுவர்கள் தாங்கள் வந்த நோக்கத்தினை அவர்களிடம் தெரிவித்தார்கள்.

நாடகக் குழுவினர்கள் அனைவருமே சிறுவர்களை வியப்புடன் பார்த்தார்கள்.

நாடகக் குழுத்தலைவர் சிறுவர்களைப் பாராட்டினார்.

"சிறுவர்களே! உங்கள் தந்தையர்கள் திருந்தவேண்டி நீங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு உங்களை நான் பாராட்டுகின்றேன். எனது குழுவில் காவல்காரர் வேடம் போட்டு நடிக்கும் இரண்டு நடிகர்களையும் உங்களோடு அனுப்பி வைக்கிறேன். அவர்கள் கனகச்சிதமாக நடித்து உங்கள் தேவையினை நிறைவேற்றுவார்கள்" என்று கூறினார்.

உடனே இரண்டு நாடக நடிகர்களும் சிறுவர்களோடு அக்கிராமத்திற்குப் புறப்பட்டனர்.

கிராமத்திற்குள் நுழைந்ததும் சிறுவர்கள் சீட்டாட்டம் நடைபெறும் இடத்தினை அவர்களுக்குக் காட்டிக் கொடுத்தனர்.

அந்த இடத்தைப் பார்த்த நாடக நடிகர்கள் ஓர் மறைவிடத்தில் போய் நின்றுகொண்டு காவலர்களுக்கான உடையை அணிந்து கொண்டனர்.

பின்னர் கையில் லத்தியுடன் சீட்டாடும் இடத்திற்குப் புகுந்து சீட்டாடுபவர்களைச் சுற்றி வளைத்துப் பிடித்துக்கொண்டனர்.

இதனைக் கண்டதும் சீட்டாடியவர்கள் எல்லோரும் பயத்தால் நடுங்கினர்.

"ஐயா! எங்களை ஒன்றும் செய்துவிடாதீர்கள். இனிமேல் நாங்கள் ஒருநாளும் சீட்டு ஆடமாட்டோம்!" என்றனர்.

"இல்லை நீங்கள் இப்படிச் சொல்லிக் கொண்டேதான் இருப்பீர்கள். பின்னர் மறுபடியும் சீட்டாடுவீர்கள். அதனால் உங்கள் எல்லோரையும் சிறையில் அடைத்தால்தான் திருந்துவீர்கள்" என்றனர் நாடகக் காவலர்கள்.

"ஐயா! நாங்கள் பிள்ளைக்குட்டிக்காரர்கள். நாங்கள் காவல் நிலையம் செல்ல நேரிட்டால் எங்கள் குடும்பத்தில் யாருமே எங்களை மதிக்க மாட்டார்கள். அதனால் தயவு செய்து நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்! இனிமேல் நாங்கள் ஒருபோதும் சீட்டாட மாட்டோம் என்று உறுதியுடன் கூறுகிறோம்!" என்றனர் அங்கு சீட்டாடியவர்கள்.

"உடனே நாடகக் காவலர்கள் இதோ பாருங்கள்! இந்த ஒருமுறை மட்டும் உங்களை மன்னித்து விட்டு விடுகிறோம். இனிமேல் ஒருபோதும் நாங்கள் உங்களை மன்னிக்க மாட்டோம். இனிமேல் எக்காரணம் கொண்டும் சீட்டாட மாட்டோம் என்று உத்தரவாதம் கொடுங்கள்! அதோடு வேறு போதைப் பொருள்களுக்கும் நீங்கள் அடிமையாகக் கூடாது!" என்றனர்.

சீட்டாடியவர்களும் "நாங்கள் இனிமேல் எந்தத் தவறும் செய்யமாட்டோம் என்று உத்தரவாதம் கொடுத்தனர்.

காவலர்களும் முழு திருப்தியுடன் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டனர்.

அதன் பின்னர் அந்தக் கிராமத்தில் யாருமே சீட்டாடவில்லை. அதோடு வேறு எந்த விதமான போதைப் பழக்கத்திற்கும் அடிமையாகாமல் இருந்தனர்.

அதனைக் கண்டு சிறுவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தார்கள். தங்கள் திட்டம் நிறைவேற உறுதுணையாக இருந்த நாடகக் காவலர்களுக்கு சிறுவர்கள் தங்கள் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டனர்.

# அதிசய உலகம்

## பிரிட்டிஷ் யுவதிக்கு யமனாக மாறிய தலைமுடி



பிரிட்டனைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தனது தலைமுடியைத் தொடர்ந்து உண்டு வந்ததனால் ஏற்பட்ட பாதிப்பினால் மரணமடைந்துள்ளார்.

நாச்செல் ஹெய் என்ற 17 வயதுப் பெண், பல வருடங்களாகத் தனது தலைமுடியை மென்று தின்று வந்துள்ளார். இதனால் அவரது வயிற்றில் ஒரு றக்பி பந்தளவு முடி திரண்டு காணப்பட்டது. அவரை சத்திரசிகிச்சைக்கு உட்படுத்திய டாக்டர்கள், வயிற்றில் சிக்குண்டிருந்த முடித்திரளை படம் பிடித்து அவரது தாயாருக்குக் காண்பித்தபோது தன்னால் அதனை நம்ப முடியவில்லை எனத் தாயார் தெரிவித்துள்ளார்.

டாக்டர்கள் நாச்செல்லின் வயிற்றில் உள்ள முடித்திரளை அகற்றி அவரைக் காப்பாற்ற முயன்றபோதும், அவரது வயிற்றினுள் இரத்தக் கசிவு ஏற்பட்டதால் அவர் மரணமானார். இப்பெண் சிகையலங்காரத் தொழிலில் பயிற்சி பெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆத்திசூடி

## கோதாட்டு ஒழி

நீ பயனற்றதும், குற்றமுள்ளதும், துன்பத்தைத் தருகின்ற விளையாட்டுகளில் ஈடுபடாதே, ஈடுபட்டு இருந்தால் அதனைக் கைவிட்டு விடு.

-ஔவையார்

எஸ் நிரஞ்சலா, கண்டி.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## உலகின் பெரியன

01. மிகப் பெரிய கண்டம் - ஆசியா (1 கோடியே 85 இலட்சம் சதுர மைல் பரப்பு).

02. மிகப் பெரிய பாலைவனம் - சகாரா (10 இலட்சம் சதுர மைல் பரப்பு).

03. மிகப் பெரிய தேவாலயம் - உரோமாபுரியில் உள்ள சென் பீற்றஸ் தேவாலயம்.

04. மிக ஆழமான கடல் - பிலிப்பைன்ஸுக்கு அருகில் உள்ள மிண்டான்யோ (சுமார் 5 மைல் ஆழமுடையது.).

05. மிக நீண்ட நதி - மிசூரிமிசிசிப்பி (வட அமெரிக்கா).

06 மிகப் பெரிய இராச்சியம் - ரஷ்யா (சுமார் 8 இலட்சம் சதுரமைல், பிரிக்கப்பட்டுவிட்டது.)


07. மிக உயர்ந்த கோபுரம் - பிரான்ஸ்பில் கோபுரம் (சுமார் 980 அடி உயரமுடையது)

08. மிகப் பெரிய நீர்வீழ்ச்சி - வெனிசுவெலா ( 5 அடி உயரமுடையது.)

09. மிகப் பெரிய தனிநாடு - பிரேஸில்.

10. உலகில் மிகவும் உயரமான இடத்திலுள்ள எரிமலை யாது?
- தென்னாபிரிக்காவில் அப்டிப் மலையில் உள்ள கொட்டபக்கி எரிமலை.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.08.2005

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 606**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 604


**பரிசுக்குரியவர்:**
**ம.துபாகரன்,**
**நீதிமன்ற வீதி, மல்லாகம்.**

**பாராட்டுக்குரியவர்கள் :**

| | |
|---|---|
| ரஞ்சன் வினோ, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. | பி .அனோஜன், தரம் 2, தூய தோமையர் கல்லூரி, பண்டாரவளை. |
| ர.நிரஞ்சனா, தரம் 10 E, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, செங்கலடி. | எல்.பி. கீர்த்தனா, கொ/நல்லாயன் அரசினர் தமிழ் மகளிர் வித்தியாலயம், கொழும்பு. |
| என்.எம். ஆயிஷா, 69, ஸ்டேஷன் வீதி, பொதுஹற | என். விஜயசங்கர், 170/1, சா.அன்றூஸ் வீதி, கொழும்பு 15. |
| என்.திவாகர், தரம் 2 B, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | என் .மாலதி, 275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். |
| ரி. ஜெசிகா (பாணு), 21, புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம். | ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |




# நகரும் தோட்டம்



சில கலைஞர்களின் கற்பனை வெளிப்பாடு மற்றோரைக் குஷிப்படுத்தும் வகையிலும் அமைகின்றது. உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வாகனத்தையே அருமையான தோட்டமாக மாற்றியமைத்தார் மாரித்த ரோமன் என்ற ஸ்பெயின் நாட்டு கலைஞர் ஒருவர். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பது எவ்வளவு உண்மை.

# இப்படியுமா?

பொதுவாகக் கழிப்பறைப் பக்கமே சாப்பாட்டு அறையை வைக்கமாட்டார்கள். ஆனால், தாய்வானில் ஓர் உணவு விடுதியின் நிலைமை தலை கீழாக மாறியுள்ளது. அவர்கள் கழிப்பறையையே சாப்பாட்டறையாக மாற்றியுள்ளனர். தாய்வான் 'கவோசியுன்ஸ்' இல் அமைந்துள்ள 'மார்டன்' உணவு விடுதியின் கதிரைகள், மேசைகள் என்பன கழிப்பறையைக் கருப்பொருளாகக் கொண்டு வடிவமைக்கப் பட்டுள்ளதோடு பீங்கான், கோப்பைகளையும் கழிப்பறை உபகரணங்களைப்போல் அமைத்துள்ளனர். அடக் கருமமே! காலம் கலிகாலம் என்பது சரியாய்ப் போச்சு......



# ஆமைத் தாத்தா



படத்தில் காணப்படும் இந்த ஆமைத் தாத்தாவுக்கு வயது அதிகமில்லை. வெறும் 255 வருடங்கள் மாத்திரமே.

இந்தத் தாத்தா இந்திய கொல்கத்தா நகரில் உள்ள ஓர் மிருகக் காட்சிச்சாலையில் வாசம் செய்கிறார். இவர் தனியார் ஒருவருக்குச் சொந்தமான காப்பகத்தில் 125 வருடங்கள் வாழ்ந்து, அதன் பின்னர் இங்கு வந்து 130 வருடங்களாகச் சீவியம் நடத்துகின்றார்.

உலகிலுள்ள மிக விசாலமான ஆமை இனத்தைச் சேர்ந்த இவர் புல், இலை குழைகள், பழ வகைகள் போன்றவற்றை உணவாக உட்கொள்கின்றார். பொதுவாக இவ்வகை ஆமை இனம் 200 வருடங்கள் உயிர் வாழக்கூடியது.

# கேக் குளியல்

பூக்கடைக்கும் விளம்பரம் செய்யுமளவுக்கு இப்போது மக்கள் விளம்பர மோகத்தால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இதுவும் அவ்வகையான பிரசார நடவடிக்கை ஒன்றின்போது பிடிக்கப்பட்ட படம். மணப்பெண்களைப் போல் அலங்கரித்துக் கொண்ட யுவதிகள், 15 அடி உயரமான கேக் ஒன்றினுள் இறங்கி, எதையோ தேடும் இந்நிகழ்வு இருவாரங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இதற்காகச் செய்த செலவு ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்.



# வீரர்கள் இல்லாத விளையாட்டு

கால்பந்து போட்டிகளின் போது அனேகமாக ஒரு பந்து மாத்திரமே மைதானத்தில் காணப்படும். ஆனால் அண்மையில் ஜெர்மன் பொருசியா "மோயென்சேன்ஸ் லாண்ட்பேச்" என்ற கால்பந்தாட்ட மைதானத்தில் 42,000 மஞ்சள் நிறப் பந்துகள் அலங்காரமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த காட்சியே இது. புதிய கின்னஸ் சாதனையாகவும் இது கருதப்படுகிறது. 2006ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கால் பந்துப் போட்டியை ஜெர்மனியில் நடத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் அவதானத்தை தம் பக்கம் திருப்பும் நோக்காகவே இச் சாதனையைச் செய்துள்ளனர்.





அர்ஜுன் - சிநேகா
சின்னா

# மாதவனின் லடாய்!

எனது சம்பள பாக்கியைத் தந்தால்தான் க்ளைமாக்ஸில் நடித்துக்கொடுப்பேன் என 'ப்ரியசகி' தயாரிப்பாளர் பி.எல்.தேனப்பனிடம் பஞ்சாயத்து பண்ணினார் மாதவன். சினிமா ரூல்ஸ் பிரகாரம் டப்பிங் பேச வரும்போது சம்பளப் பாக்கியைக் கொடுத்துவிடுகிறேன் என தேனப்பன் சொல்லியும், கேட்காமல் க்ளைமாக்ஸ் படப்பிடிப்புக்கு வராமல் டிமிக்கி கொடுத்தார் மாதவன். புரொடியூஸர் கவுன்சில் பஞ்சாயத்தும் ஆனது. இந்நிலையில் மாதவனுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க முடிவு பண்ணினார் தேனப்பன். உங்கள் சம்பள பெலன்ஸ் இருக்கிறது. வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என ஆபீஸிற்கு அழைத்தார். மாதவனும் போனார். மாதவனை அருகே உட்கார வைத்துக்கொண்டு ஒப்பன் மைக்கை ஆன் பண்ணிவிட்டு, ஒவ்வொரு விநியோகஸ்தராக போன் போட்ட தேனப்பன், மாதவனின் பட வியாபாரம் குறித்து பொதுவான கருத்து கேட்டார். கன்னாபின்னாவென திட்டி விமர்சனங்கள் வர...மிரண்டுபோன மாதவன், இனிமேல் என்ன கொடுக்கிறீங்களோ....கொடுங்க! எந்தப் பிரச்சினையும் பண்ணமாட்டேன் என சொல்லிவிட்டு எழுந்து வந்துவிட்டார். தன்னுடைய மார்க்கெட் வேல்யூ என்ன எனப் புரிந்துகொண்ட மாதவன், "அம்பதாயிரம் அட்வான்ஸ் கொடுத்தால் போதும். படத்தில் நடிக்க நான் ரெடி" என குமுதம் பேட்டியில் கூப்பாடு போட்டிருப்பதன் பின்னணி இதுதான்!

---

தனது நடிக மகன் ரவிகிருஷ்ணாவையும், இயக்குநர் மகன் ஜோதி கிருஷ்ணாவையும் இணைத்து ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறார் தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம். படத்தின் பெயர் கள்ளன். இதில் ரவிகிருஷ்ணாவுக்கு ஜோடியாக தமண்ணா, எலியானா ஆகியோர் அறிமுகமாகிறார்கள். இதற்கு இளமை துள்ள இசையமைக்கப் போகிறவர் யுவன்சங்கர் ராஜா.

---

நடிகர் ரிச்சர்ட் தன் நண்பர்களோடு சமீபத்தில் பாண்டிச்சேரி போயிருந்தார். மாஸ் ஹோட்டல் பாரில் குடித்துவிட்டு, நண்பர்களோடு அவர் பண்ணிய ரகளையால் அங்கே குடிக்க வந்திருந்த பலரும் எரிச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள். மெட்ராஸில் இப்படி குடிச்சிட்டு ரகளை பண்ணினா, பிடிச்சு உள்ளே போட்றாங் கன்னு, இங்கே வந்து ரகளை பண்ணிக்கிட்டு இருக்காங்க என புலம்பித் தள்ளிவிட்டார்கள் அங்கிருந்தவர்கள்.



நமீதா
ஆணை

# சுசீலாவோடு சில துளி மணிகள்

70 வயது ஆகிறது இன்னிசைக் குயில் பி.சுசீலாவிற்கு. அவரின் இனிமையான பாடல்கள் குறித்து 'மறக்க முடியுமா' என்ற பெயரில் யு.கே.முரளி ஒரு இன்னிசை நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார். அதுபற்றிய செய்தியாளர் சந்திப்பிற்கு வந்த பி.சுசீலாவிடம் பேசியபோது மிகச் சுவையாக பேட்டியளித்தார்.

உங்கள் குரலின் மகிமை?

அது தெய்வம் தந்தது.

எத்தனை மொழிகளில் பாடியிருக்கிறீர்கள்?

12 மொழிகளில்.

தமிழில்...?

சுமார் 12 ஆயிரம் பாடல்கள்.

நீங்கள் தெலுங்காக இருந்தும் தமிழில் இவ்வளவு சிறப்பாகப் பாடுகிறீர்களே...?

எம்.எஸ்.விஸ்வநாதன் எனக்கு வாய்ப்புத் தந்தபோது, எனக்கு சுத்தமாக தமிழே வராது. ஆனாலும் என் குரலின் இனிமைக்காக எனக்கு வாய்ப்புத் தந்தார். தொடர்ந்து என்னைப் பெரிய பாடகியுமாக்கினார். இது தமிழ் மண் கொடுத்த வாழ்வு. இப்போது நான் தமிழச்சி. தமிழ்தான் என் தாய்மொழி மாதிரி.

70 வயதிலும் குரல் இனிமையாக இருக்கிறது. இப்போது பாடுவதற்கு அழைத்தார்களா? சில வாய்ப்பு வந்தது. நான்தான் மறுத்துவிட்டேன். கடந்த வாரம் முருகன் தாலாட்டுப் பாடல் ஆல்பம் ஒன்றிற்கு பாடியிருக்கிறேன்.

ஒரு படத்தில் இரண்டு நாயகிகளுக்கு நீங்கள் ஒருவரே குரல் கொடுத்திருக்கிறீர்கள். அது எப்படி?

இரண்டு நாயகிகளுக்கும் நான் ஒருத்தியே என சொல்லிவிட முடியாது. பல நல்ல பாடல்களும் வருகிறது.

பாடல்களில் ஆபாசம் இருக்கிறதே?

பாடல்களையும் வித்தியாசப்படுத்தி காட்டிவிடுவார்.

இப்போதைய பாடல்கள் எப்படி?

மொத்தமாக நல்லாயில்லையே என சொல்லிவிட முடியாது. பல நல்ல பாடல்களும் வருகிறது.

பாடல்களில் ஆபாசம் இருக்கிறதே?

அப்போதும் இலைமறை காயாகச் சொல்லப்பட்டது.

ஆபாசப் பாடல்களை பெண் பாடகிகள் மறுக்கலாமே?

ஒரு பாடகி மறுத்தால் இன்னொரு பாடகி பாடுவதற்குத் தயாராகத்தான் இருக்கிறார். என்ன செய்ய முடியும்? ஆனால் ஆபாசப் பாடல்கள் கூடிய சீக்கிரம் மாறிவிடும்.

உங்களுக்கு பிடித்த பாடகி?

எஸ்.வரலட்சுமி, பானுமதி, இப்போது சொர்ணலதாவின் குரல் மிக அருமையாக இருக்கிறது.

இவ்வளவு அழகாக இருக்கிறீர்களே! உங்களுக்கு ஆரம்பகாலத்தில் நடிக்க வாய்ப்புகள் வந்திருக்குமே?

எம்.எஸ்.சுப்புலட்சுமி பண்ணின 'மீரா' படத்தை மீண்டும் பண்ண கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் முடிவு பண்ணி என்னை மீராவாக நடிக்கக் கேட்டார். எனக்கு நடிப்பில் விருப்பமில்லாததால் நான் மறுத்துவிட்டேன்.

அழகின் ரகசியம்?

அதுவா...நான் ரொம்ப கொஞ்சமா சாப்பிடுவேன். என்னோட அழகுக் குறிப்புகளை மற் றவர் மெயின் டெய் ன் பண்ணுவது ரொம்ப கஷ்டம்.

## சினேகா முகப்பில் ரேணுகா மேனன்

'பெப்ரவரி 14' கேசட் வெளியீட்டு விழாவிற்கு கெஸ்ட்டாக வந்தார் நயன்தாரா. அவரைப் பார்த்த பலருக்கும் இன்ப அதிர்ச்சி. அந்தளவிற்கு மிக மட்டமாக தன் முன்பகுதி வெளியே பிதுங்கித் தெரியும்படி ஆடை அணிந்துகொண்டு வந்திருந்தார். பொது இடங்களுக்கு எப்படி வரவேண்டும் என்பதை நயன்தாராவிற்கு யாராவது குமட்டில் இடித்துச் சொன்னால் தேவலை.



சூர்யா - அசின்
கஜினி

ஷில்பா ஷெட்டி விலை மாதுவாக நடித்து பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார். 'காமோஷ்' என்ற பெயரில் இந்தியில் தயாரான இந்தப் படம் தமிழிலும் டப்பிங்காகிறது. ஷில்பா தரிசனத்திற்கு ரெடியா?

---

பெண்நிலா படம் மூலம் அறிமுகமாகும் கவர்ச்சித் திலகம் அபெக்ஷா, ஷகிலா விட்ட இடத்தைப் பிடித்தே தீருவேன் என வரிந்து விலக்கிக்கொண்டு துணிப் புரட்சி செய்து வருகிறார்.



ஜெய் ஆகாஷ் -
காற்றுள்ள



'பம்பரக்கண்ணாலே' படத்தில் ஸ்ரீகாந்தும் ஆர்த்தி அகர்வாலும் ஜோடியாக நடித்து வருகிறார்கள். ஆர்த்தி அகர்வால் ஏற்கனவே 'வின்னர்' படத்தில் பிரசாந்த்தோடு நடிக்க சுந்தர்.சி.யால் கொண்டுவரப்பட்டவர்தான். ஆனால் அம்மணி பயங்கர கால்ஷீட் சொதப்பியதால் அவரைத் தூக்கிவிட்டு, கிரணை வைத்துப் பண்ணினார்கள். தெலுங்கில் படு பிஸியாக இருந்த ஆர்த்தி, தெலுங்கு ஹீரோ தருணை காதலித்தார். பின் தருண் தன்னை ஏமாற்றியதாகச் சொல்லி பினாயிலைக் குடித்து தற்கொலைக்கு முயன்றார். இப்போது தெலுங்குப் படங்களைக் குறைத்துக்கொண்டு தமிழ் பக்கம் தன் பார்வையைப் பதியவிட்டிருக்கிறார் தன் பம்பரக்கண்ணால்.

இந்தக் காதல் விவகாரம் குறித்து கேட்டுச் சொல்லுங்கள் என ஸ்ரீகாந்திடம் ஒரு பத்திரிகையாளர் கோரிக்கை வைக்க.... ஸ்ரீகாந்த்தும் தயங்கித் தயங்கி அம்மணியிடம் அதுபற்றிக் கேட்டாராம். எதப்பத்தி வேணும்னாலும் பேசுங்க. ஆனா, அதப்பத்தி பேசாதீங்க என ஒரே போடாய் போட்டுவிட்டாராம் ஆர்த்தி. இது நடந்த இடம் ஊட்டி.




# சினிவிசிட்

'நேசம் புதுசு' படத்தை இயக்கிய இரட்டை இயக்குநர்கள் வேல் - ஸ்ரீ கார்த்திக். இவர்கள் பிரிந்து, வேல் காமெடி நடிகராவிட்டார். கார்த்திக் இப்போது நவீன் கார்த்திக் என்ற பெயரில் 'என் காதலே' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

'கும்மாளம்' ரவிகணேஷ், விகாசினி, நாசர் ஆகியோர் நடிக்கிறார்கள். படம் பற்றி நவீன் கார்த்திக்கிடம் கேட்டோம்.

மகன் மேல் அதிக பாசம் வைத்த தந்தை கேரக்டரில் நாசர் நடிக்கிறார். தனக்கும் தன் மகனுக்கும் இடையில் யாருமே வரக்கூடாது. தான் தன் மகனை செல்லமாக அழைக்கும் பெயரைக்கூட அவனது நண்பர்கள் கூப்பிட்டால் அறைந்துவிடும் வழக்கம் கொண்டவர் நாசர். ஆனால் அவரையறியாமல் மகன் கதாநாயகியைச் சந்திக்கவும், அவர்கள் காதலர்களாகவும் ஆவதற்கு அவரே காரணமாகிறார்.

ஒரு காலகட்டத்தில் தனது மகன் தன்னை மதிக்காமல் போவதற்குக் காரணம் தேடும்போது தனது மகன் ஒரு பெண்ணைக் காதலிக்கும் விபரம் தெரிகிறது.

கதாநாயகியோ தன்னைத் தவிர தன் காதலனிடம் யாருக்கும் இடமில்லை எனச் சொல்லும் கேரக்டர். எனவே இந்தக் காதலைத் தொடரவிட்டால் தனது மகன் தன்னைவிட்டுப் பிரிந்துவிடுவான் எனக் கருதி அந்தக் காதலை உடைக்கப் பல வழிகளில் ஈடுபடுகிறார்.

காதல் பெரிசா, பாசம் பெரிசா என்ற கேள்விக்கு இந்தப் படம் பதில் சொல்லும் என்றார் இயக்குநர் நவீன் கார்த்திக்.

'மஜா' படத்திற்கென பத்திரிகையாளர் சந்திப்பு சென்னை கிரீன் பார்க் ஹோட்டலில் நடந்தது. அப்போது இந்த டைட்டில் குறித்து பத்திரிகையாளர்களுக்கும் விக்ரமுக்கும் இடையே கிட்டத்தட்ட அரை மணி நேரம் சூடான -சுவையான வாக்குவாதம்.

'மஜா' எனப் பெயர் வைத்திருக்கிறீர்களே ஏன்?

எல்லா அம்சமும் கலந்த ஒரு திருவிழா மாதிரியான படம்.

'மஜா' என்றால் என்ன அர்த்தம்?

அது ஜாலி மற்றும் சந்தோஷத்தைக் குறிக்கும் சொல்.

'மஜா' என்பது ஹிந்தி வார்த்தை என்றாலும், தமிழகத்தில் குறிப்பாகத் தென் மாவட்டங்களில் இதற்கு செக்ஸ் வைத்துக்கொள்வது என்று அர்த்தம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு ஏரியாவிலும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கலாம். நாங்கள் ஜாலி, சந்தோஷம், கலாட்டா இந்த மனநிலையை வைத்துத்தான் இந்த டைட்டிலை வைத்தோம்.

-இப்படி மஜா குறித்து விவாதம் நீண்டுகொண்டே போனது. அதன்பிறகு மற்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தொடங்கினார் விக்ரம்.




ஒரு சீரியஸான படம் பண்ணிவிட்டு அடுத்து ஒரு காமெடி படம் பண்ணுவது கமல் ஸ்டைல். அதேபோல் நீங்களும் அந்த ரூட்டில் பயணிக்கிறீர்களா?

அப்படியெல்லாம் இல்லை. கெட்-அப் எதுவும் இல்லாமல் ஜாலியாக ஒரு படம் பண்ணலாமே என்றுதான்.

படத்தில் என்ன விசேஷம்?

நான், வடிவேலு, மணிவண்ணன் மூவரும் சேர்ந்து படம் முழுக்க காமெடி பண்ணுகிறோம். கமல் சார் ஒருமுறை சொன்னார், நீ காமெடியில் கொஞ்சம் டிரைபண்ணேன் என்று. நான் வராது என்றேன். முயற்சி செய் என்றார். அந்த ஆசையில் இந்தப் படத்தில் முதல்முதலாக காமெடிக்கு முக்கியத்துவம் கொடுத்து நடிக்கிறேன்.

'மஜா' எப்போ மஜா?

வர்ற தீபாவளிக்கு.

இந்நிலையில் மஜா டைட்டில் மாற்றப்படும் என மஜா யூனிட்டிலிருந்து பத்திரிகையாளர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்டது. அதன்பிறகு ஏனோ தெரியவில்லை....மூன்று நாள் கழித்து..... படத்துக்கு டைட்டில் மஜாதான். மாற்றமில்லை எனச் சொல்லிவிட்டார்கள்.




'இன்று முதல்' படத்தைத் தயாரித்த கோலிவுட் கிரியேஷன்ஸ் முரளி ஸ்டுடியோ ஒன்றையும் நடத்தி வருகிறார். கோலிவுட் கிரியேஷன்ஸ் என்ற பெயரில் இயங்கும் அந்த ஸ்டுடியோ இதுவரை டி.வி.சீரியல்களுக்கு எடிட்டிங் டப்பிங் என எல்லா வேலைகளும் பண்ணிக்கொண்டிருந்தது. இப்போது லேட்டஸ்ட் அமெரிக்க வெளியீடான மேக் கம்பியூட்டரின் டைகர் வெர்சன் எனும் யூனிட்டைக் கொண்டுவந்து தனது ஸ்டுடியோவில் பொருத்தியிருக்கிறார். இந்தியாவிலேயே இப்படியொரு வசதியைக் கொண்ட முதல் ஸ்டுடியோ இதுதான். இதன்மூலம் குறைந்த செலவில் ஆங்கிலப் படங்களுக்கு நிகரான ஒளி, ஒலிப்பதிவைச் செய்யமுடியும் என்கிறார் முரளி.

அது சரி....'இன்று முதல்' என்றொரு நல்ல படம் தந்தீர்கள். அது கமர்ஷியலாக போகவில்லை. அதனால்தான் தொடர்ந்து படங்கள் பண்ணவில்லையா?

எங்களின் முதல் படமான 'இன்று முதல்' படத்தைப் பாராட்டாதவர்களே கிடையாது. நாங்கள் தொடர்ந்து படத் தயாரிப்பில் இறங்கத்தான் போகிறோம். அதற்கான வேலைகள் நடந்துகொண்டுதான் இருக்கிறது. தயாரிப்பு நுணுக்கங்களை, சினிமா உலகின் போக்குகளைக் கற்றுக்கொள்ளாமல் தயாரிப்பில் இறங்கித்தான் முதல் படம் தோல்வியைச் சந்தித்தது. அனுபவத்தைத் தெரிந்துகொள்வதற்காக இவ்வளவு நாள் காத்திருந்தேன். இனி தொடர்ந்து படங்களைத் தயாரிப்போம். எங்கள் நிறுவனத்தின் பெயர் ஒரு தரமான நிறுவனம் என மக்களிடம் பேசப்படும்.

அது நிஜம்.

திரைப்பட வரலாற்றிலேயே முற்றிலும் மாறுபட்ட கதையும், திரைக்கதையமைப்பும் காட்சியமைப்பும் கொண்ட படமாக வெளிவருகிறது 'பூச்சி' திரைப்படம்.

நாம் நமக்கே தெரியாமல் அன்றாடம் சந்திக்கும் நிகழ்ச்சிகளின் பிரதிபலிப்புதான் கதையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

ஒரு திரைப்படத்திற்குத் தேவையான அத்தனை அம்சங்களும் கொண்டதுதான் 'பூச்சி'. ஷகிலா போலிஸ் இன்ஸ்பெக்டராக காமெடியில் கலக்குகிறார். அவருடன் சேர்ந்து எம்.எஸ்.பாஸ்கர் லூட்டி அடிக்கிறார். இவர்களுடன் மலையாள சேச்சியாக அபிநயஸ்ரீ கவர்ச்சியில் வளைய வருகிறார்.

படத்திற்கு இசையை கண்மணிராஜா அமைக்க....பாடல்களை பஞ்சு அருணாசலம், செங்கதிர் வாணன் எழுதியிருக்கிறார்கள். பாடல்களை உன்னி கிருஷ்ணன், கார்த்திக், ஹரிஸ் ராகவேந்தர், மாணிக்க விநாயகம் உட்படப் பலர் பாடியிருக்கிறார்கள்.



300-க்கும் மேற்பட்ட விளம்பரப் படங்களை இயக்கியவர் ரேவதி. எஸ்.வர்மா! முதன் முதலாக சினிமாவுக்கு வருகிறார். ஜோதிகா-குஷ்பு-சரிதா இந்த மூவரைச் சுற்றி நிகழும் பெண்களுக்கான முக்கியத்துவம் உள்ள கதையோடு களமிறங்கும் ரேவதி. எஸ்.வர்மா, படத்திற்கு 'ஜூன்.ஆர்.'எனப் பெயர் வைத்துள்ளார்.

அது என்ன ஜூன்.ஆர்.தலைப்பே வித்தியாசமாக இருக்கிறதே? ரேவதியிடம் கேட்டோம். "ஜூன் என்பது ஜோதிகாவின் பெயர். இந்தப் பெயர் வைத்ததற்கான காரணம் இந்தக் கதையைப் பார்க்கும்போது புரியும்."

"அதுதான் என்ன காரணம்?"

"இப்போதைக்கு அது சஸ்பென்ஸ்."

"இது அவார்டு படமா?"

"வைஜெயந்தி ஐ.பி.எஸ். ஒரு கமர்ஷியல் படம்தான். ஆனால் விஜயசாந்திக்கு தேசிய விருது கிடைத்தது. அதுபோல் இந்தப் படமும் அவார்டுகளைப் பெறலாம். ஆனாலும் இது ஒரு கமர்ஷியல் படம்" என்று அடித்துச் சொல்கிறார்.

'காதல்' படத்தில் சந்தியாவின் தோழியாக வந்து, "உங்க போதைக்கு நாங்க ஊறுகாயா?" என வசனம் பேசி கலக்கிய சரண்யா, காதல் படத்திலேயே கதாநாயகியாக நடித்திருக்க வேண்டியவர். ரொம்ப சின்னப் பொண்ணாக இருக்கே என இயக்குநர் பாலாஜி சக்திவேல் நிராகரித்துவிட்டதால், தோழி வாய்ப்பு. இப்போ கொஞ்சம் பக்குவப்பட்டுவிட்டதால், 'ஒருவார்த்தை பேசு' படத்தில் கதாநாயகியாக ப்ரமோஷன் ஆகிவிட்டார்.

ரேணுகாமேனன்




## மௌனங்களுக்கான இடைவெளிகள்!

மனசினில் எச்சமிட்டிருக்கும்
யதார்த்தங்களில்
வலியின் வடுக்களுக்கு
ஒத்தடமிட்டுக்கொள்ளும்
இடைவேளை
இன்னும் கிடைக்கவில்லை காதலி.....



உன் உதட்டுவழி
மௌனங்களுக்குள்
சரித்திரங்கள் பல
சயனித்திருக்கலாம்

சம்மதங்களுக்கு பதில்
சங்கடங்களை
மனசெங்கிலும் தூவி
மர்மம் பேசிச்செல்லும்
புன்னகைகளும் - நீ எனக்காய்
விட்டுப்போன விலாசங்கள்

மனசில் நீ உள் நுழைந்த
திருகாணிச் சுவடுகளுக்குள்
அங்கிங்கென படிந்திருக்கும்
உன் நினைவுகளை
கிள்ளி எறிய எறிய
எரிச்சலூட்டி முளைப்பெடுக்கும்
நிமிஷங்களும் மனம்
நிராகரிக்க விரும்பாத இன்பங்கள்.

வறுமை விலைபேசிய
அடிமைகளாய் இருந்துவிட்டபோதிலும்
பசித்த பிச்சைக்காரனாய்
எச்சில் இலை சுருட்ட
உன் வீடுதேடி வருவேன்.

*–பெரியசாமி விக்னேஸ்வரன், ஹட்டன்.*

## வேதனையற்ற முகங்களை.....!

வேதனையற்ற
முகங்களைத் தேடுகிறேன்....
காணவில்லை
கவலையாக இருக்கிறது.

ஆர் முகத்தைப் பார்த்தாலும்
அழுகை நிறைந்ததாக....
அவலங்கள் கொண்டதாக....

ஓ....
என் வாழ்க்கையில் மட்டுமல்ல
எல்லோர் வாழ்க்கையிலும்
விதியும் போரும்
விளையாடித்தான்
இருக்கின்றன.....

சீதனக் கொடுமையினால்
சீரழியும் ஏழைக்
கன்னியரும்.....
'சீ...'வேண்டாம்
வாழ்க்கையென்று
வாழ்வின் விளிம்பில் நிற்கும்
காளையரும்.....

பிள்ளைகளை இழந்த
பெற்றோரும்
பெற்றோரை இழந்த
பிள்ளைகளும்.....
கணவனை இழந்த
மனைவியரும்
மனைவியரை இழந்த
கணவர்களும்.....

வயிறு கழுவ
வழியேதுமில்லாமல்
வாடுகின்ற ஏழைகளும்.....
வேதனையின் உருவமாகவே
வெந்துழலும் தோட்டத்
தொழிலாள மக்களும்......

பட்டம் பெற்று பலவருடங்கள்
கடந்த பின்னும்
பதவியொன்று கிடைக்காமல்
பட்டமரமாய் ஏங்கிநிற்கும் நம்
பட்டதாரிகளும்.....
'எட்டாக் கனிதானா..?'
சமாதானம் என்று கேட்டு
கொட்டாவி விட்டேங்கும்
நம்மினிய மக்களும்.....

நம் நாட்டில்
வேதனைகள் நிறைந்த
முகங்களைத் தவிர
வேறென்ன தான்
மலிந்து கிடக்கின்றன....?

நாளை கருவாகி உருவாகும்
நம் பிஞ்சுகளின்
முகங்களிலாவது
புன்னகைப் பூக்களைக் காண
முடியாதா....?
புதுத் தேசமாய் ஈழம்
உருவாகாதா...?

*–கன்னிமுத்து வெல்லபதியான், எருவில்.*

## நாட்டுக் கூத்தும், பின்வரும் காலங்களும்....!

உண்மை
என்னவென்றால் :
நாட்டுக் கூத்தின்
இப்போதைய
நிலையே
இதுதான்!
அண்ணாவிமார்களும்
புலமையும்
அழிந்து
நரிகளின் ஊளை
பாடலாகிப்
போனது.

பூமாலை,
தோரணம்,
மேடையென்று
பொறிவைத்து
வேட்டையாடி
முடிந்தாகிற்று
யானை வாய்க்கு
இரை
சோளப் பொரியாய்
ஆனபோது.....
நரியின் பசி
மிகுந்த
சிரத்தையுடன்
தணிந்து
போனது.....

அடுத்து
வெறிநிறைந்த
தாகத்தை போக்க
வெட்கம், சூடு,
சொறணையென
எல்லாம் துறந்து
ஐரோப்பா
குளியலாய்
களத்தில்
குதித்து
மூழ்கி உயிர்
தப்பியதே
பெரிய
விடயமென்று
நரி கரை
சேர்ந்திற்று.

வங்காள
விரிகுடாவை
குடித்தவானம்
தேசம் முழுக்க
வாந்தி
எடுத்தது போல்;
இப்போது
கடும் மழை
ஓய்ந்து
பேய்க் காற்று
அமைதியாயும்
போனது.
தூவாணம்
மட்டும்
வழமைபோல்
நுரைத்த
பெரும்
மண்ணில்
வடிகின்ற
சீழாய்
துர்நாற்ற
சேற்றை வாரி
இறைத்தபடி
தொடர்ந்து
கொண்டிருக்கும்
- இதனூடே
நரியின் கூத்து
குறிப்பிட்ட
காலங்களுக்கு
மிகுந்த
கொந்தளிப்பு
களுக்கு
நடுவில்
தொடரும் -
பின்

பூழையால்
விழிமடல்கள்
கட்டிப்போய்
கண்திறக்க
அவஸ்தைப்படும்
நாய்க்
குட்டியாய்
எந்தத்
தந்திரமும்
பலிக்காத
நிலையில்
திணறிக்
கொண்டிருக்கும்
நரி
ராஜாங்கம்!


இதில்
உண்மை
என்னவென்றால்;
நமது நாட்டுக்
கூத்தின்
எப்போதைய
நிலையும்
இதுதான்!

*–ரோஷான் ஏ.ஜிப்ரி, டோஹா - கட்டார்.*

## இனிக்கும் உறவு

அவள் பார்வைகளால்தான்
நான் பரவசமடைகின்றேன்.
என்னை
உரிமையோடும்,
உணர்வுகளோடும்
நேசிப்பவள்.
எனக்காய் அவள்
காத்திருப்பதும்,
தாமதமானால்
கடிந்து கொள்வதும்
நானாய் அவளும்
அவளாய் நானும்
கலந்திருப்பதால்தான்.
என் அத்தனை
சந்தோசங்களின்
ஆதி வடிவமாய்,
என் வெற்றிகளின்
ஏணியாய்,
என் விசும்பல்களில்
தோழியாய்,
என் கனவுகளின்
இரவாய் அவள்.....
இனிக்கிறது சகியே!
நீ என் மனைவியாய்
ஆனதால்.

*– ஷலீனா யூ.ஆப்தீன், பேராறு, கந்தளாய்.*



## காதலித்தது தவறா?

உன் மௌனம்
என்னில்
உன்னை இன்னும்
காதலிக்கச்
சொல்லித் தந்தது.
உன் சலனமற்ற
பார்வை
என்னை
வெறுக்கவில்லை
என்று சொல்லிக்
கொண்டிருந்தது.
உன் பதற்றமே
இல்லாத மனம்
என்னில் பாசம்
இருக்கிறது
என்று
பறைசாற்றியது
உன் கடிதமொன்று
என்
கையில்
சிக்கியபோது.
நிஜத்தில் நான்.
சிறகுகளோடு
பறக்கவே
தொடங்கியிருந்தேன்.
பிரித்துப் பார்த்த
பொழுது
காதல்
இருக்கவில்லை -
நீ
எழுதி வைத்த
காகிதத்தில்.
மாறாக
'திருந்திவிடு'
என்ற
அறிவுரைகள்....
நான் செய்த
தவறு என்ன?
உன்னைக்
காதலித்ததா...?

*– இரா. சுபாஷினி, ரஜரட்ட பல்கலைக்கழகம்.*

## அவகாசம் இருக்கிறது....

சிறகு விரிப்பதற்கு
இப்போதும்.....
அவகாசம்
இருக்கிறது.....

சுமை தூக்கியெறிந்து
கண்ணீர் துடைத்து
பறக்க......
இப்போதும்
அவகாசம்
இருக்கிறது.....

திசை, தடை,
அவநம்பிக்கை
அறிந்து
தெளிவுடன் எழுந்து
பறக்க
இப்போதும்.....
அவகாசம்
இருக்கிறது.....

ஒவ்வொரு
சிறகசைவிலும்
வலியிருப்பினும்.....
இலக்கின்
தொலைவு
சுருங்கி.....
வாழ்வின்
அருகில்
செல்கிறேன்
மிகவும் அருகில்.....

சிறகு விரிப்பதற்கு
இப்போதும்
அவகாசம்
இருக்கிறது.....

*– பாவகி, கொட்டகலை.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

நியூட்டன் இங்கிலாந்தின் பாராளுமன்ற உறுப்பினராக ஒரு சமயம் இருந்தபோது, பேசியதாகச் சொல்லப்படுவது இது: "அந்த ஜன்னல் கதவுகளைத் திறந்துவிடுங்கள். நல்ல காற்று வரட்டும்."

பாராளுமன்றச் சூழலையும், அங்கு ஒரே ஒரு முறை மட்டும் வாய் திறந்து அவர் இதைச் சொல்லியதையும் பார்க்கும்போது, அந்த வார்த்தைகளுக்கு ஒரு கவிதைத் தன்மை கிடைத்துவிடுவதைப் பார்க்கலாம்.

கவிதையின் தருணம் என்பது எப்போதும் நிகழ்வதற்குரியதுதான். அதை விளக்க விளக்க புதிய புதிய அர்த்தப் பட்டைகள் உரிந்து வந்தபடியே இருக்கின்றன.

இவ்வாரக் கவிதைகள் ஆறும் கவிதைகள் பற்றியே பேசுபவை. அதிலும் வெவ்வேறு சூழலில், வெவ்வேறு மொழிகளில் சொல்லப்பட்டிருப்பவை.

காலச்சுவடு மொழிபெயர்ப்புக் கவிதைகளின் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகள் இதோ :

### சொல் : செயல்


(1)

நான் பார்ப்பதற்கும்
சொல்வதற்கும்
இடையில்,
சொல்வதற்கும் மூடி
மறைப்பதற்கும்
இடையில்,
மூடி மறைப்பதற்கும் கனவு
காண்பதற்கும்
இடையில்,
கவிதை.
'ஆம்', 'இல்லை'
இவற்றின் இடையில் அது
நழுவுகிறது:
நான் சொல்வதை அது
மறைக்கிறது.
மறைப்பதைச் சொல்கிறது.
மறந்து விடுவதைக் கனவு
காண்கிறது.
இது ஒரு சொல் அல்ல :
ஒரு செயல்.
சொல்லாக இருக்கும் ஒரு
செயல்.
கவிதை சொல்லப்படுகிறது;
கேட்கப்படுகிறது - அது
நிஜம்.
'அது நிஜம்' என்று
சொன்ன உடனேயே
கரைந்தும் விடுகிறது.
அப்படித்தான் அது மேலும்
நிஜமாக இருக்கிறதா?

(2)

தொட்டு உணரமுடிந்த
கருத்து, தொட்டு
உணர முடியாத சொல்
இருப்பவற்றிற்கும்
இல்லாதவற்றிற்கும்
இடையே
கவிதை போய்
வந்துகொண்டிருந்தது.
பிரதிபலிப்புகளை அது
பின்னுகிறது;
பிரிக்கிறது.
கவிதை விதைக்கிறது.
காகிதத்தில் கண்களையும்
கண்களில் சொற்களையும்
கண்கள் பேசும் சொற்கள்
பார்க்கும்.
பார்வைகள் சிந்திக்கும்.
சிந்தனைகளைக்
கேட்போம்
நாம் சொல்பவற்றைப்
பார்ப்போம்
கருத்தின் உடலைத்
தொடுவோம்
கண்கள் மூடிக் கொள்ளும்
சொற்கள் திறந்து விரியும்.

*–ஆக்டேவியோ பாஸ் (மெக்ஸிகோ). தமிழில் : வெ.ஸ்ரீராம்.*



### சுமையை அகற்றுகிறார்கள்

உன்னிடம் வந்து
அவன் சொல்கிறான்:
உலகத்திற்கோ அல்லது
உலகத்தின் முடிவிற்கோ
நீ பொறுப்பாளன் அல்லன்
உன் தோள்களிலிருந்து
சுமையை அகற்றியாயிற்று
நீ குழந்தைகளையும்
பறவைகளையும் போல
போ, விளையாடு.
அவர்கள் விளையாடுகிறார்கள்
தற்காலக் கவிதை
மூச்சுவிடுவதற்கான போராட்டம்
என்பது
அவர்களுக்கு மறந்து
போகிறது.

*–டடியூஸ் ரோசெவிக் (போலந்து). தமிழில் : பசுவய்யா.*

### கட்டளை

ஒரு கவிதை
பதுங்கிக் கிடக்கிறது.

சந்தேகமின்றி நான்
அவ்வழி அலைகிறேன்

அது என்னைத்
தாக்குகிறது;
கிசுகிசுக்கிறது
சொற்களை.
என் காதினுள்ளே
கட்டளையிடுகிறது
எழுதும்படி.

என்னால் அதை உதற
முடிவதில்லை.
பொறுமையின்றி
நான் எழுதுகிறேன்.

காகிதம் பொறுமை
காக்கிறது.

*–ரோஸே அவுஸ்லாண்டர் (ஜெர்மன்). தமிழில் : ப்ரஸன்னா ராமஸ்வாமி.*

### கவிதைகள் பற்றி....

என் கவிதைகளைக்
கவிதைகள்
என்று யார் சொன்னது?
என் கவிதைகள்
கவிதைகள்
அல்ல.
என் கவிதைகள்
கவிதைகள் அல்ல
என்று
தெரிந்துவிட்டதனால்
நாம் இருவரும்
சேர்ந்து
பேசத் தொடங்கலாம்.

*கவிதைகள் பற்றி. –ரியோக்கன் (ஜென் கவிதை). தமிழில் :– யுவன் சந்திரசேகர்.*

### அதற்கு மேல் ஒன்றும் இல்லை


கவிதை என்பது
எல்லோரும் புறப்பட்ட பின்
அவர்களின் காலடியில் ஆளற்ற
காடு
சடசடக்கையில்
பழைய அடுப்பின் அரை இருளில்
உரையாடலுக்கு மேல் ஒன்றும்
இல்லை;

கவிதை
நாம் விரும்பிய வார்த்தைகளுக்கு
மேல்
ஒன்றும் இல்லை,
காலத்திற்கேற்ப இடம் மாறி
இனி ஒரு வெறும் கறை,
சொல்ல முடியாத ஒரு நம்பிக்கை
மட்டுமே
என்றாகிவிட்ட வார்த்தைகள்.


ஆனந்தத்திற்கு மேல்,
அரை இருளில் உரையாடலுக்கு
மேல்,
புறப்பட்டுச் சென்று
ஏற்கனவே மௌனமாகிவிட்ட
எல்லாவற்றிற்கும் மேல்
வேறு எதுவும் இல்லை
கவிதை.

*–எலிசியோ டியெகோ (கியூபா). தமிழில் : வெ.ஸ்ரீராம்*


## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : ஏ.ஆர். சார்ள்ஸ்.
வயது : 23
முகவரி : P.O.Box 5772, Catering Division, Bin Omran, Doha - Qatar.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.



பெயர் : ஆர். பிரதீப்.
வயது : 20
முகவரி : 3/2, வில்லுவா வீதி, சேனைக்குடியிருப்பு, புத்தளம்.
பொழுதுபோக்கு : பத்திரிகை.



பெயர் : ஆர். மகேஸ்குமார்.
வயது : 17
முகவரி : 84, பத்தினியம்மான் கோயில் வீதி, சேனைக்குடியிருப்பு, புத்தளம்.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், புத்தகம்.




பெயர் : சு.குமணன்.
வயது : 20
முகவரி : குவாறி றோட், கல்முனை – 2.
பொழுதுபோக்கு : கிரிக்கெட், கரப்பந்து.





# மாற்று சிறுநீரகம் தருபவர்கள் எப்படி இருக்க வேண்டும்?

**மா**ற்று சிறுநீரகம் தருகிறவர்கள் ஒன்று உயிரோடு இருக்கலாம் அல்லது விபத்தில் மூளை பெருமளவு சிதைந்து, இதயம் மட்டும் இயங்கும் நிலையில் உள்ளவர்களாக, அதாவது செத்தும் கொடுப்பவர்களாக (Cadeveric Donors) இருக்கலாம்.

சிறுநீரகம் தருபவர்களுக்கென்று சில விதிமுறைகள் உள்ளன.





அவைகளில் முக்கியமானவை:

1. அவரது சிறுநீரகங்கள் இரண்டும் சீராக இயங்க வேண்டும். ஒன்றை இழந்த பிறகும் மற்றொன்றை வைத்துக்கொண்டு அவரால் வாழ்க்கை நடத்த இயல வேண்டும்.

2. அவரது உடலில் தீவிர சிகிச்சை தேவைப்படுகின்ற சில நோய்கள், புற்றுநோய் மற்றும் தடைப்படுத்த முடியாத நீரிழிவு நோய் ஆகியவை இருக்கக் கூடாது.

3. முடிந்தவரை 40 வயதுக்குட்பட்ட நபராக இருக்க வேண்டும்.


4. அவரது இரத்தம் ஏ.பி.ஓ. வகைப்படி பெறுபவரின் வகையைச் சார்ந்த ஒன்றாகவே இருக்க வேண்டும்.

5. அவரது சிறுநீரகத்துக்குச் செல்லும் தமனி ஒன்று மட்டுமே இருக்க வேண்டும். பிறவியிலேயே ஆறாவது விரல் இருப்பது போல தமனிகள் மூன்று நான்கு கூடச் சிலருக்கு இருக்கலாம். அப்படி இருந்தால் அறுவைச் சிகிச்சை செய்வது கடினமாகிவிடும்.

6. திசு மாற்ற ஏற்புக் கணிப்பு (Tissue-typing) - இதனை HLA Typing என்று அழைக்கிறார்கள். இது ஒரு தனிப்பட்ட சோதனை முறை. HLA-A1B1C1 மற்றும் DR என்ற வகைகள் ஒன்றுக்கொன்று பொருந்துகின்றனவா என்று பார்த்து பிறகு சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.


# கணையப் புற்றுநோய் ஆபத்தைத் தடுக்கும் காய்கறிகள் - பழங்கள்

**கா**ய்கறிகள் மற்றும் பழங்களை அதிகமாகச் சாப்பிடுவதன் மூலம் புற்றுநோய்கள் வராமல் தடுக்க முடியும் என்று ஏற்கனவே பல்வேறு ஆய்வுகள்



வலியுறுத்தி உள்ளன. இந்நிலையில் இதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் ஒரு ஆய்வுத் தகவல் வெளியாகி உள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகமாக சாப்பிடுபவர்களுக்குக் கணையப் புற்றுநோய் வரும் வாய்ப்புக் குறைவாக இருப்பதாக அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்களைத் தொடாதவர்கள், மற்றும் அவ்வளவாகச் சாப்பிடாதவர்களுடன் ஒப்பிடும் போது காய்கறிகள் - பழங்களைச் சாப்பிடுபவர்களுக்கு கணையப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு பாதி அளவுக்குக் குறைவாக உள்ளதாக அதில் கூறப்பட்டு உள்ளது. காய்கறிகள் மற்றும் பழங்களில் பொதிந்து கிடக்கும் கரோட்டினாய்டுகள் மற்றும் சில நோய் எதிர்ப்புப் பொருட்கள்தான் இந்த அதிசயத்துக்குக் காரணம்.


பொதுவாக வளர்சிதை மாற்றம் காரணமாக நமது உடம்பில் சுதந்திரமாக அலையும் துகள்கள்தான் நல்ல செல்களைச் சிதைத்து புற்றுநோய்க் கட்டிகளாக மாற்றுகின்றன. இந்நிலையில் மேற்படி நோய் எதிர்ப்புப் பொருட்கள் சுதந்திரமாக அலையும் துகள்களை ஒன்று சேர விடாமல் தடுத்து நிறுத்துவதால் செல்களுக்கு ஏற்படும் பாதிப்பு ஆரம்பத்திலேயே தவிர்க்கப்பட்டு விடுகிறது. இதனால் புற்றுநோய் ஆபத்து குறைந்து விடுகிறது.



கணையப் புற்றுநோய் ஆபத்தில் இருந்து தப்ப ஆப்பிள், காலி பிளவர், ஆரஞ்சு மற்றும் முட்டைக் கோசு ஆகியவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்வது நலம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

# வேலைக்குப் போகாத பெண்களுக்கு........!

**பெ**ண்கள் வேலைக்குப் போவது சரியா? தவறா? என்ற விவாதம் இன்றும் நடந்து வருகிறது. இந்த இடத்தில் நாம்



அதுபற்றிப் பேச வரவில்லை. மருத்துவப் பூர்வமாக பெண்கள் வேலைக்குப் போவதால் மன அழுத்தம் மற்றும் உடல் நலம் பாதிக்கப்படும் என்று ஒரு கருத்து நிலவி வந்தது. இந் நிலையில் அமெரிக்க விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் இந்தக் கருத்து முறியடிக்கப்பட்டு உள்ளது.

இந்த விஞ்ஞானிகள் வேலைக்குப் போகும் பெண்களையும், வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கும் பெண்களையும் இரு பிரிவாகப் பிரித்துக் கொண்டு ஆய்வு செய்தனர். அப்போது அவர்களின் மன நிலை, உடல் நலம் ஆகியவற்றைப் பரிசோதிக்கும் வகையில் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. மாரடைப்பு, பக்கவாதம் போன்ற ஆபத்துக்களை உண்டு பண்ணும் உயர் இரத்த அழுத்தப் பிரச்சினை, மன அழுத்தம் இருக்கின்றதா? என்று கண்டுபிடிக்க பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

இந்தச் சோதனைகளின் முடிவில் வேலைக்குப் போகும் பெண்களைக் காட்டிலும் வேலைக்குப் போகாத பெண்களுக்கு இதய நோய் ஆபத்துக்கள் கடுமையாக இருப்பது தெரிய வந்தது. வேலை என்பது பெண்களுக்கு மன அழுத்தத்தை உண்டு பண்ணும் ஆபத்தான விஷயமாக இருக்கவில்லை என்றும் பதிலாக அது அவர்களுக்குப் பாதுகாப்புக் கவசமாகவே உள்ளது என்றும் விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். வேலைக்குச் செல்லும் பெண்கள் வேலையில் கவனம் செலுத்துவதாலும், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதாலும் மன அழுத்தம் தாக்கும் அபாயம் குறைகிறது. ஆனால் வீட்டிலேயே இருக்கும் பெண்களுக்கு இது போன்ற வாய்ப்புகள் இல்லாததால் அவர்கள் மன அழுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இதய நோயாளிகள் ஆகி விடுவதாக மேற்படி விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.


பெண்கள் வேலைக்குப் போக வேண்டுமா? வேண்டாமா? என்று சீரியசாக விவாதிப்பவர்கள் இதைப் படிப்பது நல்லது.



# பெண்களின் உடல் பருமன் ஆஸ்துமா ஆபத்தை அதிகரிக்கும்

**உ**டல்நலக் கோளாறுகளில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கும் ஆஸ்துமாவுக்கும், உடல் பருமனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்கிறார்கள் மருத்துவ வல்லுனர்கள். உலகம் முழுவதும் உடல் பருமன் தொற்று வியாதி போலப் பெருகிக் கொண்டே வருகிறது. அதற்கேற்றாற் போல ஆஸ்துமாவும் அதிகரித்து வருவதை அவர்கள் தங்கள் வாதத்துக்குச் சுட்டிக் காட்டுகின்றார்கள். 9 முதல் 26 வயது வரையிலான பெண்களில் 4-இல் ஒருவருக்கு ஆஸ்துமா பாதிப்பு காணப்படுவதற்கு உடல் பருமன்தான் காரணமாக உள்ளது. அதே சமயம் ஆண்களில் உடல் பருமனுக்கும், ஆஸ்துமாவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆஸ்துமா நோயின் முக்கிய காரணிகளாகக் கருதப்படும் குடும்பப் பாரம்பரியம், புகைப்பிடிக்கும் பழக்கம், தாய்ப்பால், பிறந்த எடை ஆகியவற்றை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு



பார்த்தாலும், உடல் எடை அளவுக்கு அவைகள் முக்கிய பங்கு வகிப்பது இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## அரிசி வடை

**தேவையானவை:**


புழுங்கல் அரிசி - 1/2 லிட்டர்.
புளித்த மோர் - 1 கப். (கெட்டியானது)
தேங்காய் - 1 மூடி.
பச்சை மிளகாய் - 8.
இஞ்சி - 1 சிறு துண்டு.
பெருங்காயம் - சிறு துண்டு.
உப்பு - தேவையான அளவு.
எண்ணெய் - 300 மி.லிட்டர்.
கறிவேப்பிலை - கொஞ்சம்.

**செய்முறை:**

அரிசியை முதலில் 2 மணி நேரம் தண்ணீரில் ஊற வைக்கவும். பிறகு களைந்து கல் நீக்கி, சுத்தம் செய்து கொள்ளவும். நீரை நன்றாக வடிகட்டி அரைக்கவும். அரைக்கும் பொழுது தண்ணீருக்குப் பதிலாக மோர் சேர்த்து அரைக்கவும். பச்சை மிளகாய், இஞ்சி, பெருங்காயம், உப்பு சேர்த்து நைசாக அரைக்கவும். தேங்காய்த் துருவல், பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை சேர்க்கவும். அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விட்டு, எண்ணெய் காய்ந்ததும், மாவை நன்றாகக் கலந்து வடையாகத் தட்டிப் போடவும். கையிலேயே தட்டிப் போடவும். இருபுறமும் நன்றாகச் சிவந்ததும் எடுக்கவும். இது சாப்பிட மொறு மொறுவென்று நன்றாக இருக்கும்.

# பெண்களுக்கு இதய நோய் ஆபத்து....!

**இ**தய நோய்களால் பெரும்பாலும் ஆண்கள் மட்டுமே பாதிக்கப்படுகிறார்கள் அல்லது




உயிரிழக்கிறார்கள் என்று பரவலாக ஒரு கருத்து உள்ளது. ஆனால் ஆண்களுக்கு எந்தளவுக்கு ஆபத்து உள்ளதோ, அதே அளவிலான ஆபத்து பெண்களுக்கும் இருக்கிறது. இந்த விஷயம் பலருக்கு ஆச்சரியமாக உள்ளது. இந்நிலையில் இதய நோய்களைத் தடுக்க முடியும் என்பது சற்று ஆறுதல் அளிக்கும் விஷயமாக உள்ளது. இதற்கு நமது அன்றாட வாழ்க்கை முறைகளில் சில மாற்றங்களைச் செய்தாலே போதுமானது.

1. ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 30 நிமிடங்களாவது ரெகுலர் உடற்பயிற்சி என்று வைத்துக் கொள்ளுங்கள்.

2. உயரத்துக்கு ஏற்ற உடல் எடை இருக்க வேண்டும். அதை மிஞ்சினால் உடனடியாகக் குறைப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் (உயரத்துக்கு தகுந்த உடல் எடை பற்றிய விவரம்).

3. புகைப்பிடிக்கும் பழக்கத்தை (இருந்தால்) உடனே நிறுத்துங்கள்.

4. இதயத்துக்கு நல்லது செய்யும் பழங்கள், காய்கறிகள், முழு தானியங்கள், குறைந்த கொழுப்புக் கொண்ட பண்ணைப் பொருட்கள், ஒமேகா-03 அசிட்



(ஒலிவ் ஓயில் மற்றும் மீன் எண்ணெய்களில் உள்ளது) ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

5. அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்த தியானம் உள்ளிட்ட பயிற்சிகளைக் கற்றுக் கொள்ளுங்கள்.

# ஒரு தாயின் மகன் 41

“ஹலோ மிஸ்டர் ஆண்ட்ரூ! எப்படி இருக்கீங்க?” என்று உற்சாகமாக இருப்பது போலப் பாசாங்கு செய்தாள் பேஜ்.

ஆனால் ஆண்டியின் முகத்தில் உற்சாகம் தெரியவில்லை. “திரும்பி ஆஸ்பத்திரிக்குப் போய் விடுவாயா அம்மா? இன்று ராத்திரியும் நான் இங்கேதான் இருக்கணுமா?”

“இல்லை. வீட்டுக்குப் போகலாம் வா” என்றவள் சில நிமிடம் ஜேனிடம் பேசிக் கொண்டிருந்த பின், மகனுடன் வீடு திரும்பினாள். குழந்தையின் ஏக்கத்தைப் பார்த்த பின், இன்று இரவு ஆஸ்பத்திரியில் தங்க வேண்டாமென்று அவள் தீர்மானித்திருந்தாள்.

ஆண்டிக்காகச் சமையல் செய்தாள். தங்கள் இருவருக்காகவும் மேஜையில் தட்டுக்களை வைத்துக் கொண்டிருந்தபோது பிராட் வந்தான்.

“அப்பா!” சாப்பிட உட்கார்ந்திருந்த ஆண்டி குபுக்கென்று எழுந்து ஓடிப்போய் அவனைக் கட்டிக் கொண்டான். தாயின் அன்புக்காகவும், தந்தையின் அரவணைப்புக்காகவும் குழந்தை எவ்வளவு ஏங்கியிருக்கிறான் என்பது கண்கூடாகத் தெரியவே பேஜுக்கு ஆத்திரம் பொங்கியது.

“வீட்டுக்கு வழி தெரிந்தது போலிருக்கிறது!” என்றாள் எரிச்சலுடன்.

பிராடுக்குக் கோபம் வந்தது. அவன் ஆண்டிக்காகவே தன் சொந்தப் பிரச்சினைகளை ஒதுக்கிவிட்டு வந்திருந்தான். வீட்டுக்குப் போகிறேன் என்று சொன்னதில் ஸ்டிபானியுடன் சண்டை வேறே.

“சரி, சரி ஆரம்பித்து விடாதே” என்று முணுமுணுத்தவாறு ஆண்டியின் அருகில் உட்கார்ந்து கொண்டான். “எனக்கும் சாப்பிட ஏதாவது இருக்கிறதா?”

“இல்லாமலென்ன?”

அவனுக்குத் தட்டில் உணவு வகைகளை வைத்தாள். ஆண்டி தன் பாட்டுக்கு ஸ்கூலைப் பற்றியும், தோழர்களைப் பற்றியும், பேஸ் பாலைப் பற்றியும் சளசளவென்று பேசிக் கொண்டிருந்தான். “நாளைக்கு நாம் ஆலியைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போகலாமா அப்பா?” என்று அவன் கேட்டபோது கணவனின் முகத்தைக் கவனித்தாள் பேஜ். அவன் ஆண்டி பேசியது எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், கடுகடுவென்று முகத்தை வைத்துக் கொண்டு பேப்பரைப் புரட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது.

“பேப்பர் எங்கே போகிறது? அப்புறம் படித்துக்கொள்ளக் கூடாதா?” என்றாள் கோபமாக.

“ஏன்? நான் பேப்பர் படிப்பதில் உனக்கு என்ன நஷ்டம்?” என்றான் அவனும் சூடாக.

அம்மாவையும் அப்பாவையும் மாறி மாறிப் பரிதாபமாகப் பார்த்தான் ஆண்டி. அதன்பின் எதுவும் பேசாமல் சாப்பிட்டு விட்டுத் தன் அறைக்குப் போய் விட்டான்.

சமையலறை வேலைகளை முடித்துக் கொண்டு அவனைப் பார்ப்பதற்காகப் பேஜ் சென்றபோது, தன் நாய்க்குட்டி லிஸ்ஸியை மார்போடு கட்டிக்கொண்டு, அழுதபடியே அதனிடம் அவன் புலம்பிக் கொண்டிருந்தான்.

பேஜ் அவனருகில் போய் உட்கார்ந்ததும், “என்னம்மா, நீயும் அப்பாவும் எப்பப் பார்த்தாலும் சண்டை போட்டுக் கொண்டு இருக்கீங்க?” என்றான்.

இன்று இரவு ஆண்டியுடன் தங்க முடிந்ததே என்பதிலும், கணவனும் இன்று இருக்கிறானே என்பதிலும் கடுகத்தனை நிம்மதி ஏற்பட்டிருந்தது பேஜுக்கு.

அந்த நிம்மதி, நாய்க்குட்டியைக் கட்டி அணைத்தபடி ஆண்டி அழுதுகொண்டிருப்பதைப் பார்த்ததுமே பறந்து விட்டது.


“நீ முன்னெல்லாம் இப்படி அப்பாவோடு சண்டை போட மாட்டியே? இப்ப ஏம்மா இப்படி இருக்கிறே?” என்று அவன் மறுபடி கேட்டபோது, என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு விநாடி திகைத்துப் போனாள். பிறகு கஷ்டப்பட்டுப் புன்னகை செய்து சமாளித்துக் கொண்டு, “அது ஒன்றுமில்லை, கண்ணா. நீ குழந்தை. அதனால் தெரியவில்லை. பெரியவர்கள் எப்பவும் இப்படித்தான். ஏதாவது வருத்தம் ஏற்பட்டாலும் சரி, பயம் ஏற்பட்டாலும் சரி, அறிவில்லாமல் ஒருத்தரோடு ஒருத்தர் சண்டை போடுவார்கள். காட்டுக் கத்தலாய்க் கூச்சலிடுவார்கள். பாவம், நீ இத்தனை வருத்தப்படுவாய் என்று தெரியாது. ஸாரி” என்றாள்.

“இருந்தாலும் நீ அப்பாகிட்டே பேசறப்ப ரொம்பத்தான் கோபமாய்ப் பேசறே” என்றான் ஆண்டி.

‘உன் அப்பா எனக்குத் துரோகம் செய்கிறார். நம் குடும்பமே சின்னா பின்னமாகி விட்டது’ என்று அந்தச் சிறுவனிடம் எப்படிச் சொல்ல முடியும்?

“ஆஸ்பத்திரியில் ஆலியுடன் கூடவே இருக்கிறேன், இல்லையா? அதிலே எனக்கு ரொம்பக் கவலையாகி விட்டது. அதனால் தான் கோபம் வருகிறது” என்றாள்.

“ஏன் கவலைப்படணும்? ஆலிதான் நல்லா தூங்கிக் கொண்டு இருக்கிறாள் என்று சொன்னாயே?” என்றான் ஆண்டி மறுபடியும். பெரியவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை அந்தக் குழந்தையால் புரிந்துகொள்ள முடியவில்லை. தான் மிகவும் நேசிக்கும் அப்பாவும், அம்மாவும் ஏன் இப்படி சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்பது அவனுடைய சின்ன மூளைக்கு எட்டவில்லை.



“என்னவோ, எப்பவும் எனக்கு உங்களைப் பற்றியெல்லாம் கவலைதான்” என்றாள் பேஜ். “உன்னைப் பற்றிக் கவலை. ஆலியைப் பற்றிக் கவலை.....”

“அப்பாவைப் பத்தி? அப்பாவைப் பத்திக் கவலைப்பட மாட்டியா?”

“நிச்சயமாய் அவரைப் பற்றியும்தான்.” என்று சொல்லிவிட்டு, ஒரு கதைப் புத்தகத்தை எடுத்து அவனுக்குப் படிக்கலானாள் அவள்.

சில நிமிடங்களில் ஆண்டிக்குத் தூக்கம் கண்ணைச் சுழற்றுவது தெரிந்தது. “போய் அப்பாவுக்கு குட் நைட் சொல்லிட்டு வா” என்று அவனை அனுப்பினாள்.

ஆண்டி போன போது பிராட் யாருடனோ டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தான். ‘குட் நைட் அப்பா’ என்று ஆண்டி சொன்னதும் ‘ஊம் ஊம்’ என்று கையை மட்டுமே அசைத்துப் பதிலளித்து அனுப்பி விட்டான். கடுமையான மன உளைச்சலில் இருந்தான் அவன். பேஜின் மீது மட்டுமல்ல, ஆண்டியின் மீது கூடக் கோபம் கோபமாக வந்தது. இன்று இரவு இங்கே வருவதற்கும் தங்குவதற்கும் ஸ்டிபானியிடம் பெரும் வாக்குவாதம் பண்ணி அனுமதி பெற்று வந்திருந்தான். ஆனால் இங்கே நிம்மதி கிடைக்கவில்லை. ஸ்டிபானியும் முன்போல இல்லை. தங்கள் காதல் விவகாரம் பேஜுக்குத் தெரிந்துவிட்டதால் தைரியமாகச் சண்டை போடத் துவங்கியிருந்தாள்.

ஆண்டி திரும்பி வந்ததும் ‘அப்பா யாரிட்டயோ போனில் பேசிக்கிட்டிருக்கார்’ என்று சொல்லிவிட்டுப் படுத்த சற்று நேரத்தில் தூங்கி விட்டான்.

ஸ்டிபானியுடன்தான் பேசிக்கொண்டிருப்பான் என்று பேஜ் ஊகித்துக் கொண்டாள். கோபத்தை அடக்கிக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள். முன்னறையில் பிராட் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. ஆனால் அவனிடம் எதுவும் பேசவில்லை. இனிமேல் பேசுவதற்கு எதுவுமேயில்லை.

பண்ணியிருந்த சமையலைப் பிராடுக்கும் ஆண்டிக்கும் போட்டு விட்டதால் எதுவும் மிச்சமிருக்கவில்லை. காப்பி மட்டும் தயாரித்துக் குடித்துக் கொண்டிருந்தாள்.

நிழலாடியது. திரும்பிப் பார்த்தாள். வந்தது பிராட்தான். சோர்வும் வருத்தமும் அவன் முகத்தில் படிந்திருந்தன.

“என்னவோ ஒன்றும் சரியில்லை...” என்று பெருமூச்சு விட்ட அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஜீன்ஸும், டி ஷர்ட்டும் அணிந்து பளிச்சென்று காட்சியளித்த அவனைக் கண்டதும், இவ்வளவு காலமும் அவனைப் பார்க்கும் போதெல்லாம் என்ன பரவசம் ஏற்பட்டதோ அதே பரவசம் ஒரு வினாடி ஏற்பட்டது. மறுவினாடி மறைந்தது. இல்லை, இல்லை. இவர் யாரோ அன்னியன்....


(தாய் தொடர்வாள்.....)

**எழுதியது: டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

**சென்ற வாரம்**

**பிலிப்பைப் பற்றி அனைவரும் நன்றாகப் பேசினார்கள். பிலிப்பைப் பற்றி நன்றாக பேசப் பேச பேஜ் தன் மகள் ஆலிஸனைப் பற்றியே நினைத்துக்கொண்டிருக்கிறாள். பின் தாரென்ஸனிடம் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறாள். தாரென்ஸனிடம் தன் குடும்ப வாழ்க்கை பற்றி எல்லாம் பேசுகிறாள்.....**

## இந்த வாரம் 52ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வைரமுத்துவிடம் 52 கேள்விகள்



**தமிழில் உங்களுக்கு மிகவும் பிடித்த வார்த்தை?**
தமிழ்.

**இப்போது 50kg. தாஜ்மகால் யார்?**
சானியா மிர்சா.

**காதல் என்பது?**
காமனின் அம்பு அல்லது ஹார்மோன்களின் வம்பு.

**பிடித்த நிறம்?**
வெள்ளை.

**பச்சையப்பன் கல்லூரி?**
மாணவனாய்ச் சேர்த்துக் கொண்டு மாப்பிள்ளையாய் அனுப்பியது.

**கண்ணதாசன் - வாலி ஒப்பிடுக?**
பாடலை ஜனரஞ்சகமாக்கியவர் கண்ணதாசன். ஜனரஞ்சகத்தைப் பாடலாக்கியவர் வாலி.

**உங்கள் இளமையின் ரகசியம் என்ன?**
மனசு நரைக்காமல் பார்த்துக் கொள்வது.

**இளையராஜா - பாரதிராஜா?**
மேற்குத் தொடர்ச்சி மலையை இமயமலைக்கு அறிமுகம் செய்தவர்கள்.

**வேட்டி பிடிக்காதா?**
காலைப் பிடிக்கும்.

**தம்பி...?**
உடையான் படைக்கு அஞ்சான்.

**ரஜினி?**
நடிகர்களில் ஓர் அறிவாளி.

**கமல்?**
அறிவாளிகளில் ஒரு நடிகர்.

**பொன்மணி?**
மனைவியாய் வந்த கடவுள்.

**பெரியார்?**
செயற்கரிய செய்தார்.

**அண்ணா?**
கவிஞர்களை உருவாக்கிய உரைநடையாளர்.

**சின்ன வயதில் கடவுள் பக்தி உண்டா?**
கோயிலுக்குப் போனதுண்டு. பக்தி மட்டும் வந்ததில்லை.

**ஜெயலலிதாவிடம் பிடித்தது?**
துணிச்சல்.

**முதல் பாடல்?**
பொன்மாலைப் பொழுது.

**நீங்கள் எழுதாததில் உங்களுக்குப் பிடித்த பாடல்?**
காதல் சிறகைக் காற்றினில் விரித்து வானவீதியில் பறக்கவா!

**தமிழர்களின் முக்கியக் குறைபாடு என்ன?**
நேரம் குறித்த பிரக்ஞை இன்மை.

**உங்கள் மனம் கவர்ந்த பெண்மணி யார்? (மனைவியைத் தவிர)**
பி. சுசீலா.

**காதலில் தோல்வியடைந்தால் என்ன செய்வது?**
கல்யாணம் செய்து காதலைத் தோற்கடிப்பது.

**தன்னம்பிக்கை வரிகள் ப்ளீஸ்?**
சுடப்பட்டிருக்க மாட்டாய் நீ தங்கமாக இல்லாவிட்டால் சூடுதாங்கு; நகையாவாய்.

**நாகேஸ்வரராவ் பூங்கா என்றதும் நினைவுக்கு வருவது?**
“இலை” என்ற கவிதைக்குக் கருப்பொருள் தந்தது.

**ஷங்கர் - மணிரத்தினத்துக்கு மட்டும் கலக்குகிறீர்களே?**
இல்லை; அவர்களே கலக்குகிறார்கள்.

**தென்றல், மலர், நிலவு, பனித்துளி, பெண், ஆண் - உடனே கவிதை எழுதத் தூண்டுவது?**
பனித்துளியும் - பெண்ணும்.

**சென்னையில் பிடித்த இடம்?**
சென்ட்ரல் ரயில் நிலையம்.

**கலைஞரிடம் வியப்பது - ரசிப்பது....?**
வியப்பது உழைப்பை.
ரசிப்பது நகைச்சுவையை.

**வைகோ?**
அரசியலில் இலக்கியம் கலப்பவர்.
இலக்கியத்தில் அரசியல் கலக்காதவர்.

**விஜயகாந்த் அரசியலில் ஜெயிப்பாரா?**
நண்பர் யார் என்று தீர்மானித்துக் கொள்வது - திரைப்பட வெற்றி.
எதிரி யார் என்று தீர்மானித்துக் கொள்வது - அரசியல் வெற்றி
அவர் தீர்மானித்து வெற்றி பெற வேண்டும்.

**கபிலன் இன்னொரு வைரமுத்து ஆவாரா?**
ஒரு வைரமுத்துவையே சில பேர் ஜீரணிக்க முடியாத போது, கபிலன் கபில னாகவே இருக்கட்டும்.

**ராஜா - ரகுமான் ஒப்பிடுங்கள்?**
அவர் ஆர்மோனிய அரசர்;
இவர் “கீ போர்ட் கிங்”

**திரைப்பாட்டு - கவிதை எழுதுவதில் எது பிடிக்கும்?**
திரைப்பாட்டில் கவிதை எழுதப் பிடிக்கும்.

**உங்கள் மனதில் பதிந்த கவிதை வரி?**
தீதும் நன்றும் பிறர்தர வாரா.

**திருவள்ளுவரைப் பற்றி?**
தமிழர்களின் ஞான அடையாளம்.

**கம்பர்?**
தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் உச்சம்.

**இளங்கோவடிகளைப் பற்றி?**
தமிழைத் துறக்காத துறவி.

**கண்ணதாசன் உயிரோடு வந்தால் என்ன கேட்பீர்கள்?**
வனவாசத்தில் விட்டுப் போன பகுதிகளை.

**கவிஞர்களில் கூட ஆண் ஆதிக்கம் தானே அதிகம் இருக்கிறது?**
பெண்ணாதிக்கம் உள்ளவர்களும் கவிஞர்களாக இருக்கிறார்களே!

**அடிக்கடி வாசிக்கும் தமிழ் இலக்கியம்?**
முத்தொள்ளாயிரம்.

**புதிய இயக்குநர்களில் நம்பிக்கை தருகிறவர்கள்?**
பாலா - சரண் - செல்வராகவன் - தரணி - அமீர்.

**தமிழ் நாட்டில் பிடித்த ஊர்?**
கொடைக்கானல்.

**பா.விஜய்க்கு விருது கிடைத்தது பற்றி....**
தமிழின் பெருமை தொடர்கிறது.

**பெண் குழந்தை இல்லை என்ற ஆதங்கம் உண்டா?**
ஜெமினியின் கடைசிப் படுக்கையருகே என்னை அழைத்துச் சென்ற டாக்டர் கமலா செல்வராஜ், கண்கலங்கி அழுதபோது ஆதங்கப்பட்டிருக்கிறேன்.

**இதிகாசங்களில் உங்களுக்குப் பிடித்த பாத்திரம் எது?**
பேயத்தேவர்.

**ரசிக்கும் சிற்பம்....?**
கண்கள் மூடிய புத்தர் சிலை.

**வித்யாசாகர் விருது பெற்றது பற்றி....**
தன் தாய்மொழியான தெலுங்குப் படத்திற்கு தேசிய விருது பெற்றவர்,
தந்தை மொழியான தமிழிலும் விருது பெறுவார்.

**இந்த வாரம் எழுதியதில் பிடித்த பாடல்....**
ஆண் : மீசை முத்தம் வேண்டுமா;
மீசை இல்லாத முத்தமா?
மீசை முத்தம் என்பது பெண்ணே நான் உனக்குத் தருவது,
மீசையில்லாத முத்தம் என்றால் நீ எனக்குத் தருவது.
(கலைஞரின் பாசக்கிளிகள்)

**நீங்கள் உட்பட இன்றைய கவிஞர்கள் ஏதாவது ஓர் அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்களாக இருக்கிறார்களே ஏன்?**
எனக்குத் தொடர்பு அரசியல் கட்சிகளோடல்ல - தலைவர்களோடுதான்.

**சரோஜாதேவி, தேவிகா, பத்மினி, குஷ்பு, சினேகா, த்ரிஷா - ஒவ்வொரு வார்த்தை பிளீஸ்....?**
சரோஜா தேவி : கட்டழகு
தேவிகா : கண்ணழகு
பத்மினி : பெண்ணழகு
குஷ்பு : முகத்தழகு
சிநேகா : சிரிப்பழகு
த்ரிஷா : முழு அழகு

**இன்றைய தலைமுறைக்குத் தகுந்தாற்போல் எப்படி உங்களை மாற்றிக் கொள்ள முடிகிறது?**
திறந்தவெளியில் அதிகம் இருக்கிறேன்.

**உங்களை உற்சாகப்படுத்தும் பொன்மொழி?**
தண்ணீரைக்கூடச் சல்லடையில் அள்ளலாம்; அது பனிக்கட்டியாகும் வரை பொறுத்திருந்தால்.

வைரமுத்துவின் வைர வரிகள் கொண்ட ‘ஒரு கிராமத்துப் பறவையும் சில கடல்களும்’ தொகுப்பிலிருந்து விடயங்கள் தொடரும் இதழ்களில் பிரசுரமாகும்.

# கறுப்பு ஜூலையும் கலையாத நினைவுகளும்

**-சிறப்புப் பார்வை**


பாராளுமன்றக் கதிரைகளுக்காகவும் அமைச்சுப் பதவிகளுக்காகவும் சோரம் போன மிதவாத தமிழ் தலைவர்கள் தமிழ் தேசியத்தின் வரலாற்றில் துரோகிப் பட்டங்கள் சூட்டப்பட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பிரித்தாளும் தந்திரமே இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தோற்றுவாய் என்று கூறும் சில அரசியல் விமர்சகர்களும் இருக்கிறார்கள். ஆனால் இலங்கை சுதந்திரம் பெற்ற உடனேயே இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமை, இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்கள் தீர்த்த முதல் வேட்டாக வெடித்தது. இதன் தொடர் நிகழ்வுகளாக கல்லோயா சிங்களக் குடியேற்றத் திட்டம், பல்லாயிரக்கணக்கான தமிழ் அரசாங்க ஊழியர்களின் வேலை வாய்ப்புக்களைப் பறித்த தனிச் சிங்களச் சட்டம், தமிழ் மாணவர்களின் கல்வி வசதிகளைப் பறித்த பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறை ஆகியன தொடர் வேட்டுகளாகத் தமிழ் மக்கள் மீது தீர்க்கப்பட்டன. சுருங்கச் சொன்னால், மொழி உரிமை, வேலை வாய்ப்பு, காணி, கல்வி ஆகிய துறைகளில் தமிழ் மக்களுக்கெதிரான பாரபட்சங்கள் முடுக்கி விடப்பட்டன.

உலகில் இடம் பெற்ற எந்தவொரு ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்திலும் மாணவர்கள் முக்கிய பங்கு வகிப்பது வழக்கம். கல்வியில் முன்னணியில் திகழ்ந்த யாழ். மாணவர்களின் கனவுகள் தரப்படுத்தல் முறையால் சிதைக்கப்பட்டபோது, அதுவே பெரும் எரிமலையாக வெடிப்பதற்கு கால்கோளாகியது. தமிழ் இளைஞர்களும், மாணவர்களும் மிதவாதத் தமிழ்க் தலைமைகளைத் தூக்கி எறிந்து விட்டு ஆயுதங்களோடு அரசியல் அரங்குக்குள் பிரவேசித்தனர். வடக்குக் கிழக்கில் சுமார் 57 தமிழீழக் குழுக்கள் இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவற்றில் 6 தமிழ் குழுக்கள் ஒன்றிணைந்து ஈழ விடுதலைக்கான கமிட்டியொன்றினை உருவாக்கின. தமிழர் விடுதலைக் கூட்டணியின் மிதவாதத் தலைமையைத் தூக்கி எறிந்து விட்டு, சுதந்திரமான, சோஷலிஸ தமிழீழ ராஜ்ஜியம் ஒன்றினை உருவாக்குவதற்கான ஆயுதப் போராட்டத்தினை இக்குழுக்கள் பிரகடனப்படுத்தின.

புலிகள் இயக்கம், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எ˙.ப், ரெலோ, என்.எல்.எப்.ரி.ஈ.(தமிழீழ விடுதலைக்கான தேசிய முன்னணி) ஆகியவை இணைந்து 1982ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதி இப்பிரகடனத்தை வெளியிட்டன. இதனையடுத்து பல தாக்குதல்களும், வங்கிக் கொள்ளைகளும் இடம் பெற்றன.

சிங்கள அரசுகளின் தமிழ் மக்களுக்கு எதிரான பாரபட்ச நடவடிக்கைகள் மட்டுமல்ல, திட்டமிட்ட தாக்குதல்களும் தமிழ் இளைஞர்களை உசுப்பி விட்டன.

ஆங்காங்கே தமிழ் மக்கள் மீது அவ்வப்போது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், 1958 இலிருந்து 1983 வரையிலான 25 வருட காலப் பகுதிக்குள் ஆறு பாரிய தாக்குதல்கள்



53 தமிழ் அரசியல் கைதிகள் கொலையுண்ட வெலிக்கடைச் சிறைச்சாலையின் முகப்புத் தோற்றம்

மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1958, 1971, 1977, 1979, 1983 ஆகிய வருடங்களில் இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. 1983ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட மிக மோசமான தாக்குதல் மட்டுமல்ல, அரசாங்கத்தினதும் அரச இயந்திரத்தினதும் அனுமதியுடனும், ஆசீர்வாதத்துடனும், தூண்டுதலுடனுமே நடத்தப்பட்டது. முதலிரு நாட்களிலும் இந்திய உயர் ஸ்தானிகராலயம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி உட்பட இந்தியர்களுக்குச் சொந்தமான 17 நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. கொழும்பு, திருகோணமலை, கம்பஹா, குருநாகல், அநுராதபுரம், நுவரெலியா, பதுளை உட்பட பல பகுதிகளில் காட்டுத் தீ போல் இந்த இனசங்காரம் பரவியிருக்கிறது. அமைச்சர் சிறில் மத்தியூவின் தலைமையின் கீழிருந்த ஜாதிக சேவக சங்கமய என்ற ஐ.தே.க. தொழிற் சங்கத்தின் குண்டர்களே இத் தாக்குதல்களில் முன்னணி வகித்திருக்கின்றனர். ஜனாதிபதி ஜெயவர்த்தனா உட்பட காமினி திஸாநாயக்கா போன்ற அமைச்சர்களும் இத் தாக்குதல்களின் சூத்திரதாரிகளென வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் இளைஞர்கள் கோபாவேசமாக கொதித்தெழுந்ததற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஆறு மாதங்களுக்குள் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவோடு - யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க தமிழர்களைச் சுட்டுத் தள்ளி, வீதிக்கு வீதி வீசியெறிந்து பெரும் அட்டகாசங்களைப் புரிந்தார். பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படும் தமிழ் இளைஞர்களை வகை தொகையின்றி சுட்டுக் கொல்வதற்கும் நீதி விசாரணையின்றி அவர்களின் சடலங்களை எரித்து விடுவதற்கும் அப்போது ஆயுதப் படையினருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த இனசங்காரத்திற்கு முன்னோடி எனக் கூறப்படும் யாழ்ப்பாணம், திருநெல்வேலி தபால் கட்டையடித் தாக்குதலை பிரபாகரன் உள்ளிட்ட பத்துப்பேர் முன்னின்று நடத்தினர். பல்வேறு வகைகளில் முதல் முதலாக நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவமென்று இதனை வர்ணிக்க முடியும். தமிழ் ஆயுதக்குழுவொன்று முதன் முதலாக நடத்திய கண்ணி வெடித் தாக்குதல் இதுவாகும். இராணுவத் தொடரணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதலும் இதுவாகும். தமிழர்களை வேட்டையாடத் துடித்துக் கொண்டிருந்த அரசாங்கத்திற்கும், அரச இயந்திரத்திற்கும் கிடைத்த முதலாவது பாரிய சந்தர்ப்பம் இதுவாகும். எல்லாவற்றிற்கும் மேலாக தனி நபர் வழிபாட்டைப் பேணிவந்த பிரபாகரன், உட்கட்சி முரண்பாட்டை தீர்த்துக் கொள்வதற்கு பயன்படுத்திய முதலாவது சந்தர்ப்பம் இதுவென்றும் கூறலாம்.



தமிழ் மகனொருவனை நிர்வாணமாகத் தாக்கும் காடையர் கும்பல்

பிரபாகரனோடு முரண்பட்டுக் கொண்டிருந்த செல்லக்கிளி என்பவர் இயக்கத்தை விட்டு வெளியேறி வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்தார். அப்போது பிரபாகரனின் இயக்கத்தை விட்டு வெளியேறுவது என்பது சுலபமான காரியமல்ல. உட்கட்சி இரகசியங்கள் வெளியே வந்து விடக்கூடாது என்பதற்காக கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. திருநெல்வேலித் தாக்குதலில் பங்கு கொள்ளுமாறு பிரபாகரன் நேரிலேயே சென்று செல்லக்கிளியை அழைத்திருந்தார். கண்ணி வெடித் தாக்குதலில் லெப்டினன்ட் குணவர்த்தனாவும், ஐந்து சிப்பாய்களும் ஸ்தலத்திலேயே உடல் சிதறி மரணமானார்கள். இவர்கள் பயணித்த ஜீப் வண்டியும் சுக்கு நூறாகியது. இவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ட்ரக் வண்டியிலிருந்த 9 சிப்பாய்களும் குதித்த போது, பதுங்கி இருந்த தமிழ் இளைஞர்களின் துப்பாக்கி வேட்டுக்களுக்கு இலக்கானார்கள். இருவர் தப்பிச் சென்று கோண்டாவில் இ.போ.ச. டிப்போவை அடைந்து மாதகல் இராணுவ முகாமுக்குத் தகவல் கொடுத்தனர்.

வைகறை விடியலை எதிர்பார்த்து யாழ்ப்பாணம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. யாழ். கோட்டை, குருநகர், பலாலி, மாதகல் இராணுவ முகாம்களில் இருந்து புறப்பட்ட சிப்பாய்கள், வீதி வழியாகச் சென்று கொண்டிருந்த அப்பாவி மக்களை நோக்கி ஆக்ரோஷமாக வேட்டுக்களைத் தீர்த்தனர். அவர்களின் கண்களுக்கு தமிழ் மக்களெல்லாம் புலிகள் போல் தென்பட்டனர் போலும். 39 பேர் வீதியோரங்களில் இரத்தம் சிந்தி மரித்தார்கள். நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவிகள் படுகாயங்களுக்கு இலக்கானார்கள்.

திருநெல்வேலித் தாக்குதல் இன்னொரு வகையிலும் முதன்மை பெற்றது. தமிழர்களின் தாயகப் பூமியிலிருந்து தெற்கிற்கு முதன் முதலாக படை வீரர்களின் சடலங்களை பொலித்தீனில் சுற்றி அனுப்புவதற்கு பிள்ளையார் சுழி போட்டதும் இந்தத் தாக்குதல்தான். இறந்த படை வீரர்களின் சடலங்கள் இனங்காண முடியாதபடி சிதைவுற்றிருந்ததால் யாழ்ப்பாணத்திலேயே அடக்கம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருந்ததோடு துக்க தினத்தையும் பிரகடனப்படுத்தியிருந்தது. 'எனது படை வீரர்கள் நாய்களைப் போல் சுட்டுத் தள்ளப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன். அவர்களுக்கு கௌரவமான இறுதி மரியாதை கொழும்பில் வழங்கப்பட வேண்டும்' என்று பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் திஸ்ஸ வீரதுங்க சூளுரைத்தார். இதனாலேயே சடலங்கள் பொலித்தீன் பைகளில் கொழும்பு வந்து சேர்ந்தன. மாலை 4 மணிக்கு இரத்மலானை விமான நிலையத்தில் வந்திறங்க வேண்டிய சடலங்கள் இரவு 9.30 மணிக்கே கொழும்பை வந்தடைந்தன. பொரளை கனத்தையில் இறுதிக் கிரியைகள் நடைபெறும் என்ற தகவல்கள் கசியத் தொடங்கியதும் அங்கு மக்கள் வெள்ளம் திரண்டது. கோபாவேசங் கொண்ட மக்கள் கூட்டத்தினரால் பொலிஸ் மா அதிபர் ருத்ரா ராஜசிங்கம், சிரேஷ்ட பொலிஸ் சுப்பிரிண்டன் கபூர் உட்பட பல உயரதிகாரிகள் தாக்கப்பட்டனர். மக்களோடு மக்களாக கனத்தைக்கு வந்திருந்த திட்டமிட்ட தீயசக்திகள் பொரளை சந்தியிலிருந்த சைவக் கடையொன்றினைத் தாக்கிச் சேதப்படுத்தியதோடு தீயும் வைத்து விட்டன. இலங்கையை எரிப்பதற்கு அனுமார்கள் வைத்த இந்தத் தீ கொழும்பின் பல பகுதிகளுக்கும் பரவியது. வெளிமாவட்டங்களிலிருந்து அரச வாகனங்களிலும் ஏனைய வாகனங்களிலும் வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட காடையர் கும்பல்கள் அன்று வைத்த தீ, 22 வருடங்கள் கழிந்தும் இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கக் கணக்கின்படி 350 பேர் கொல்லப்பட்டதாகவும், ஓர் இலட்சம் பேர் அகதி முகாம்களில் தஞ்சமடைந்ததாகவும் 25 அகதி முகாம்கள் நிறுவப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இத்தொகை இன்னமும் அதிகமானதென தமிழர் தரப்புக்கள் குற்றம்சாட்டின.

பயங்கரவாதத்தை அழிக்கின்றோம் என்று கூறி அரச பயங்கரவாத சக்திகள் கட்டவிழ்த்து விட்ட இந்த வன்முறைகள் பல எதிர்மறை விளைவுகளை தோற்றுவித்தன. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் பல்வேறு தமிழீழ இயக்கங்களில் சேர்ந்து அரசுக்கெதிராக ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டன. சில தமிழ் இளைஞர்கள் கரும் புலிகளாகவும் தம்மை மாற்றிக் கொள்ள முன்வந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக சர்வதேச அக்கறையும் அனுதாபமும் தமிழர்பால் திரும்பத் தொடங்கின. இந்தியாவும் தமிழகமும் ஆயுத உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் தாராளமாக வழங்கின.

இலங்கையின் வரலாற்றையே உலுப்பிய மற்றொரு கொடூரம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம் பெற்றது. இதனையும் கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற முதல்முதலான சிறைப் படுகொலையென வரலாறு பதிவு செய்து கொண்டது. ஜூலை மாதம் 25ஆம் திகதி 35 தமிழ் அரசியல் கைதிகளும், 27ஆம் திகதி 18 தமிழ் அரசியல் கைதிகளும் குத்தியும், வெட்டியும் கண்களைத் தோண்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டனர். ஏற்கனவே திட்டமிட்டு சிறைக்குள் அனுப்பப்பட்ட காடையர் கும்பல் சிறைச்சாலை உயர் அதிகாரிகளின் அனுசரணையோடு இப் படுகொலைகளைப் புரிந்திருக்கின்றது. வெலிக்கடைச் சிறையிலிருந்த 72 அரசியல் கைதிகளில் 19 பேர் மட்டுமே உயிர் தப்பினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கறுப்பு ஜூலையென்ற இந்த வரலாற்று நிகழ்விலிருந்து தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமென்ன? ஒரு பொதுவான வேலைத் திட்டத்தின் அடிப்படையில் முரண்பாடுகளை சிநேக பூர்வமாகக் கையாண்டு தமிழீழம் கோரிப் போராடிய குழுக்கள் ஐக்கியப்பட்டிருந்தால், அவர்களின் இலக்கினை இலகுவாக அடைவதற்கான தேசிய, சர்வதேச



கொழும்பு கிருலப்பனையில் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்காகும் தமிழருக்குச் சொந்தமான வாகனமொன்று

வாய்ப்புக்கள் மிக அதிகமாகவே இருந்திருக்கும்.

மேலாதிக்கத்திற்காகவும் மேலாண்மைக்காகவும் தமிழ் மக்கள் மீதான ஏகபோக சவாரிக்காகவும் புலிகள் இயக்கம் ஏனைய தமிழீழ இயக்கங்களைப் படிப்படியாக அழித்து விட்டது. இதன் மூலம் தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை அல்லது போராட்டத்தைப் பலவீனப்படுத்தியதோடு, தன்னையும் தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொண்டது. எல்லாவற்றிற்கும் மோலாக உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் கெடுபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் தமிழ் மக்களின் விடியலைச் சிறுமைப்படுத்தி விட்டது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ததன் மூலம் இலங்கை வாழ் தமிழ் மக்களை யாருமற்ற அநாதைகளாக்கி விட்டது புலிகள் இயக்கம். எந்தப் பேரினவாத சக்திகளுக்கு எதிராகத் துணிந்து போராடத் தமிழ் மக்கள் புறப்பட்டார்களோ, அந்தப் பேரினவாத சக்திகளிலும் பார்க்க கொடூர நுகத்தடியில் ஆயுதங்களின் மூலம் அடக்கி வைத்திருக்கும் புலிகளுக்கு எதிராக கிளர்ந்தெழ முடியாமல் தமிழ் மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்ற நிலைதான் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு. இந்தக் கொடூர நிலைமை கொழும்பு வரை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இலங்கை இனப்பிரச்சினையின் பிரதான முரண்பாடுகள் இடம்பெயர்ந்திருக்கின்றன. 25 வருடகால யுத்தம் ஏற்படுத்தியிருக்கும் நிலைமை இது. சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகப் போராடிய தமிழ் மக்கள் இன்று தமக்குள்ளேயே பிரதான எதிரியைச் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிங்கள அரசுகள் படியிறங்கி கீழே வந்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான காத்திரமான முன்முயற்சிகளை மேற்கொள்கின்றன. அவர்கள் நீட்டும் நேச்க்கரங்களில் காறி உமிழ்ந்து விட்டு துப்பாக்கிகளைத் தூக்கிப் பயங்காட்ட முனைகிறார்கள் புலிகள். மாற்றுக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காத வக்கிர புத்தி அவர்களுக்கு இருக்கும்வரை, துப்பாக்கிகளால்தான் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கும்வரை அவர்கள் சாதிக்கப்போவது எதுவுமில்லை. 1987 இல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் நிலைமை முற்றாக மாறிவிட்டது. என்றுமே தனிநாட்டுக் கோரிக்கையை இந்தியா ஆதரிக்கவில்லை. புலிகளைத் தவிர சகல தமிழ் குழுக்களுமே ஜனநாயக நீரோட்டத்திற்கு திருப்பிவிட்டன. ஐக்கிய இலங்கைக்குள் பிராந்திய சுயாட்சி என்ற உள்ளகச் சுயாட்சிக் கோட்பாடு இன்று இலங்கை அரசாங்கத்தினாலும், பெரும்பாலான தமிழ் மக்களாலும் ஜனநாயக நீரோட்டத்திற்குத் திரும்பிய தமிழ் இயக்கங்களாலும், இந்தியா உட்பட சகல சர்வதேச சக்திகளாலும் வலியுறுத்தப்படுகின்றன. தொடர்ந்தும் துப்பாக்கிகளை புலிகள் தூக்கிப் பிடிப்பார்களேயானால் தமது புதைகுழிகளை அவர்களே தோண்டுகிறார்கள் என்பதே உண்மை.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## தமிழீழக் குழுக்கள் மீண்டும் போர் முரசம்

இந்திராகாந்தியின் பணிப்பின் பேரில் பார்த்தசாரதி பிராந்திய சபைகளை மையமாக வைத்து முன்வைத்த யோசனைகளை இழுத்தடித்து வந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒரேயடியாக அலாக்காக அதனைத் தூக்கியெறிந்து விட்டார். இதற்கு பௌத்த மகா சங்கத்தினர் மற்றும் ஐ.தே.க.வுக்குள் எழுந்த எதிர்ப்புகள் மட்டும் காரணமல்ல. டிசம்பர் 19ஆம் திகதியும் 26ஆம் திகதியும் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களில் சர்வகட்சி மாநாட்டு விபரங்களை ஜனாதிபதி ஜெயவர்த்தனா சமர்ப்பித்திருந்தார். சர்வகட்சி மாநாட்டுக் கூட்டத்தொடரைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று அமைச்சரவை முடிவெடுத்திருந்தது. இது தொடர்பாக அன்றைய தினம் மாலை அறிக்கையொன்று வெளியிடப் பட்டது. அந்த அறிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டிருந்தது.




"சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலான தூதுகோஷ்டிகளின் சில அபிப்பிராயங்கள், 1984ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடல்களுக்காக முன் வைக்கப்பட்டன. அவை பற்றி டிசம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஆராயப் பட்டன. டிசம்பர் மாதம் 21ஆம் திகதிவரை அரசாங்க தூது கோஷ்டியோடு அரச அமைப்பு முறை பற்றியும் அதிகாரப் பரவலாக்கல் பற்றியும் கலந்துரையாடி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி இவை பற்றித் தொடர்ந்தும் கலந்துரை யாடுவதில் எவ்வித பயனுமில்லையென்று பகிரங்க மாகவே அறிவித்துள்ளது. எனவே இந்த யோசனைகள் குறித்து தொடர்ந்தும் கலந்துரையாடுவதிலோ அல்லது தீர்மானம் எடுப்பதிலோ எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லையென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. பயங்கரவாதத்தை

> **"சிங்களத் தலைமை தமிழ் மக்களை மிக மோசமாகக் கைவிட் டுள்ளது. அவர்களால் இனி தமிழ் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது. ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களும் எம்மை அழித்துவிட்டதாக நினைக்கிறார்கள். இராணுவ நடவடிக்கையின் மூலம் பெடியன்களை அழித்து விடலாமென்று கனவு காண்கின்றனர். ஜனாதிபதி பெரிய தவறொன்றை இழைக்கின்றார். இந்தி யாவும் இலங்கைக்கு வெளியேவாழும் தமிழர்களும் 'பெடியன்'கள் தோற்கடிக்கப்படு வதை அனுமதிக்க மாட்டார்கள். ஜெயவர்த்தனாவின் சுயநல, குறுகிய நோக்குக் கொண்ட கொள்ளைகளுக்காக சிங்கள மக்கள் இறுதியில் பெரும் விலைகொடுக்க நேரிடும்' என்று அமிர்தலிங்கம் கூறினார்.**

ஒழித்துக் கட்டுவதற்கு சகல நடவடிக் கைகளையும் எடுக்கும் அதேநேரத்தில், அரசியல் தீர்வொன்றினைக் காண்பதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு மேன்மை தங்கிய ஜனாதி பதியை அமைச்சரவை கோரியுள்ளது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைச்சரவைத் தீர்மானத்தை அறிவிப்பதற்காக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டினார். "தமிழர் விடுதலைக் கூட்டணி பத்திரிகைகளுக்கு அறிக்கையொன்றினை விடுத்ததன் மூலம் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டது. அரசியல் தீர்வொன்றினைக் காண்பது தொடர்ந்தும் அரசாங்கத்தின் இலக்காக இருக்கும். ஆனால், பயங்கரவாதத்தை மேலும் பலமாக நசுக்க வேண்டியுள்ளது" என்று பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார். ஆனால் இதுகுறித்து பின்னர் நான் (சபாரத்தினம்) லலித் அத்துலத் முதலியைச் சந்தித்தபோது கேட்டேன். "பேச்சுவார்த்தைகளைக் கைவிடுவதானது தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் உள்ள மிதவாதிகளின் கைகளை வலுவிழக்கச்

(அரசியல் தொடர்)

செய்யமாட்டாதா?" என்று அத்துலத் முதலியைக் கேட்டபோது தான் அவ்வாறே நினைப்பதாகவும் ஆனால் உயர் மட்டத்திலுள்ளவர்கள் அவ்வாறு யோசிக்கவில்லை என்றும் பதிலளித்தார்.

சர்வகட்சி மாநாட்டின் யோசனைகளை அரசாங்கம் கைவிட்டமை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தி அமிர்தலிங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை உள்ளடக்கி முன்வைக்கப்படும் மாற்று யோசனைகளையே தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்லுமென்று தெரிவித்திருந்தோம். எனவே நாம் அரசாங்கத்தின் அறிக்கை குறித்து ஆச்சரியமடைகிறோம். தற்போதைய யோசனைகள் பிரதேச சுயாட்சிக்கான எமது கோரிக்கைகளை திருப்திப்படுத்துவதாக இல்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்து அமிர்தலிங்கம் அன்றே ஒரு விடயத்தை தீர்க்கதரிசனமாகத் தெளிவாக எடுத்துரைத்தார். "சிங்களத் தலைமை தமிழ் மக்களை மிக மோசமாகக் கைவிட் டுள்ளது. அவர்களால் இனி தமிழ் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது. ஜனாதிபதியும் அவரது ஆலோசகர் களும் எம்மை அழித்துவிட்டதாக நினைக்கிறார்கள். இராணுவ நடவடிக்கையின் மூலம் பெடியன்களை அழித்து விடலாமென்று கனவு காண்கின்றனர். ஜனாதிபதி பெரிய தவறொன்றை இழைக்கின்றார். இந்தியாவும் இலங்கைக்கு வெளியேவாழும் தமிழர்களும் 'பெடியன்'கள் தோற்கடிக்கப்படுவதை அனுமதிக்க மாட்டார்கள். ஜெயவர்த்தனாவின் சுயநல, குறுகிய நோக்குக் கொண்ட கொள்ளைகளுக்காக சிங்கள மக்கள் இறுதியில் பெரும் விலைகொடுக்க நேரிடும்" என்று அமிர்தலிங்கம் கூறினார்.

அமிர்தலிங்கம் மிகவும் வேதனையடைந்திருந்தார். பார்த்தசாரதியும் சர்வகட்சி மாநாடும் எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிந்து விட்டன என்று கவலையோடு கூறினார். எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கான வாய்ப்புகள் இருக்கப் போவதில்லையென்றும் கூறினார். இந்திராகாந்தியின் படுகொலையை அடுத்து ராஜிவ்காந்தி அப்போது

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

பிரதமராக பதவியேற்றிருந்தார். ராஜிவ்காந்திக்கு நிலைமைகளை எடுத்துரைப்பதற்காக தான் இந்தியா திரும்பவுள்ளதாக அமிர்தலிங்கம் சொன்னார். அமைச்சர் சிறில் மத்தியூவை பதவியிலிருந்து விலக்குவதன் மூலம் தமிழர்களையும் இந்தியாவையும் தாஜா பண்ண ஜெயவர்த்தனா முனைந்தார். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அமைச்சர் சிறில் மத்தியூ பதவி நீக்கம் செய்யப்பட்டார். சர்வகட்சி மாநாட்டு யோசனைக்கு எதிராக அமைச்சர் சிறில் மத்தியூ பிரசாரம் செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டது. பார்த்தசாரதி மற்றும் கொழும்பிலிருந்த இந்திய உயர் ஸ்தானிகர் சட்வால் ஆகியோரின் கோரிக்கையின் பேரிலேயே தான் பதவி நீக்கம் செய்யப் பட்டதாக சிறில் மத்தியூ குற்றம் சாட்டினார். புதுடில்லியிலுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சு இக் குற்றச் சாட்டை முற்றாக நிராகரித்தது.

தாம் எதிர்பார்த்ததைப் போல் ஜெயவர்த்தனா ஏமாற்றிவிட்டாரென்று தீவிரவாத தமிழ் குழுக்கள் தெரிவித்தன. "சிங்களத் தலைமைத்துவத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதில் பயனில்லை என்று நாங்கள் கூறியது நிரூபிக்கப்பட்டுள்ளது. மிதவாத தமிழ் அரசியல் தலைமைக்கு இனி வேலையில்லை. தமிழ் மக்களின் கடந்த கால உரிமைகளைப் துப்பாக்கிகள் மூலமாக மட்டுமே பெறமுடியும்" என்று கூறிய தமிழ் இளைஞர்கள் பொலிஸார் மீதும் ஆயுதப்படையினர் மீதும் தாக்குதல்களைத் தொடுக்க ஆரம்பித்தனர்.

சர்வ கட்சி மாநாடு தோல்வியில் முடிந்தாலும் இதற்கென இந்தியா எடுத்த சில முன்முயற்சிகள் வெற்றியளித்தன என்றே கூற வேண்டும். இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், தனித் தமிழ்நாடு கோரிப் போராடிய தமிழீழ இயக்கங்களை அதற்கு மாற்றீடான யோசனைகளை முன்வைக்குமாறு இந்தியா மேற்கொண்ட அழுத்தம் ஓரளவுக்கேனும் வெற்றி பெற்றது. ஐக்கிய இலங்கைக்குள் பிரதேச சுயாட்சியை தமிழீழ இயக்கங்கள் ஏற்றுக் கொண்டிருந்தன. இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியா மத்தியஸ்த முயற்சியை மேற்கொள்வதானால் இந்தியாவும் தமிழீழ இயக்கங்களும் ஒருமனதாக கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய தேவையிருந்தது. தமிழ் தாயகம் பற்றி பல்வேறு தமிழீழ இயக்கங்கள் முன்வைத்திருந்த பிரதேச எல்லைகள் வித்தியாசமானவையாக அமைந்திருந்தன. ஈரோஸ் இயக்கமும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பும் முன்வைத்திருந்த தமிழீழத் தாயக வரைபடங்களில் மலையகத்தின் ஒருபகுதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(தொடர்ந்து வரும்....)




**கோயிலில் இருந்த சிலைகள் எல்லாவற்றையும் ஸ்ரீகுமார் பார்வையிட்டுக் கொண்டு வரும் போது ஒரு சிலை மாத்திரம் சௌபர்ணிக்காவைப் போலவே இருப்பதைப் பார்த்து அதிசயப்படுகிறார். பின் அருகில் உள்ள மரத்தின் கீழ் இருந்து ஒரு பெரியவரிடம் ஸ்ரீதேவிகுட்டியைப் பற்றி கேட்டு தெரிந்து கொள்கிறார்...**

அந்தச் சிலையின் முகம் தனக்கு மிகவும் பரிச்சயமான முகம் போல் தோன்றியது.

குமார் சிந்தனையில் மின்னல் தெறித்தது.

ஆம்! அந்த முகம், அவர் லாபரெட்டரியில் சந்தித்த பெண்ணின் முகம் போலவே அச்சாக இருந்தது.

அவள் இரண்டு பெயர்களைக் குறிப்பிட்டிருந்தாள்.

ஒன்று ஸ்ரீதேவி, மற்றொன்று சௌபர்ணிகா.

எதனால் அப்படிச் சொன்னாள்?

குளத்தில் மிதந்த பெண்ணின் பெயர் ஸ்ரீதேவி. அப்படியானால் சௌபர்ணிகா யார்?

ஸ்ரீதேவியின் உடம்பில் ஏதோ ஆவித்தொல்லை இருந்ததாகவும், அவளை அடித்துக் கொன்று குளத்தில் போட்டதாகவும்தானே குஞ்சுராமன் சொன்னார்?

'அப்படியானால் இதோ தனக்கு முன்னால் நின்று கொண்டிருக்கும் இந்தச் சிலையின் பெயர்தான் சௌபர்ணிகாவாக இருக்குமோ?' குமாருக்கு உடம்பு நடுங்கியது.

பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒருவேளை சிலை நகர்வதுபோலத் தோன்றியது பிரமையாக இருக்குமோ என்று நினைத்தார்.

இல்லை.... சிலை கண்டிப்பாக நகர்ந்திருக்கிறது.

உயிரற்ற ஒரு பொருள் - அதுவும் ஒரு சிலை, நின்ற இடத்திலிருந்து நகருமா...?

உண்மையிலேயே குமார் குழம்பினார். இது ஏதோ மனக்குழப்பம் என்று தீர்மானித்து, திரும்பி நடக்கத் தொடங்கினார்.

கோயில் காம்பவுண்டின் மேற்குப் புறமாகக் கீழ் நோக்கி இறங்கும் முதல் படிக்கட்டில் கால் வைத்தபோது, பின்புறத்தில் ஏதோ சத்தம் கேட்டது.

மறுபடியும் திரும்பிப் பார்த்தார். அங்கே ஒன்றும் விநோதமாக இல்லை.

விரைவாகப் படிக்கட்டுகளைத் தாண்டிக் கீழே வந்தார்.

அன்றிரவு படுக்கையில் படுத்திருந்தபோது குஞ்சுராமன் குறிப்பிட்ட சம்பவங்கள் அவர் நினைவில் அலைந்தன.

நம்ப வேண்டுமென்றுதான் தோன்றுகிறது."

"அதுதான் உன்னோட விருப்பம்னா, அப்படியே செஞ்சுட்டாப் போகுது!" - பிரபாகரன் உடன்பட்டான்.

கிருஷ்ண குறூப்பு அந்த ஊரிலேயே மிகவும் புகழ் பெற்ற ஜோதிடர்; மாந்திரீகர். அவரைப் பார்க்க யார், யாரோ வருவார்கள்.


குமாரும், பிரபாகரனும் குறூப்பைப் பார்க்கப் போனார்கள்.

நாலு கட்டும் (நான்கு அறைகள் மற்றும் வராண்டா உள்ள வீட்டு அமைப்பு) தெரு வாசற்படியும் உள்ள பழைமையான வீடு அது.

வராண்டாவில் உட்கார்ந்து ஓலைச்சுவடி ஒன்றை குறூப்பு புரட்டிக் கொண்டிருந்தபோதுதான், இந்த இருவரும் அங்கு சென்றனர்.

குமாரை, உற்றுப் பார்த்தார் குறூப்பு.

"தெரிஞ்ச முகமா



சூரியன் மறைந்து இருள் பரவிக்கொண்டிருந்தது. காற்று உடம்பைத் தாலாட்டியது. ஆளரவமற்ற அந்தக் குன்றில் தான் தனியாக இருப்பது குமாரை உறுத்தியது.

**எழுதுவது**
**சிவன்**

போய்விடலாமென்று முடிவெடுத்தபோது பின்னால் ஒரு குரல்; பழக்கப்பட்ட குரல்.

"என்ன.... இவ்வளவு சீக்கிரமா கிளம்பிட்டீங்க?" -

குமார் அச்சத்தோடு திரும்பிப் பார்த்தார்.

அப்போது அந்த மோகினி சிலை தன்னை நோக்கி கொஞ்சம் முன்னால் நகர்ந்திருப்பதாகக் குமாருக்குத் தோன்றியது.

வியப்பு நிறைந்தவராக குமார் அந்தச் சிலையையே

காரியஸ்தர் சந்து நாயர் கொலை செய்தாரா....? குளத்தில் சடலங்களாக மிதந்த அந்த அம்மாவும், மகளும் மறுபடி மறுபடி நினைவில் வெட்டி மறைந்தனர்.

காலையில் பிரபாகரனுடன் டிபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அவனிடம் முந்தைய நாள் இரவில் கோயில் வளாகத்துக்குள் தனக்கு நேர்ந்த அனுபவங்களைக் கூறினார் குமார்.

கடைசியில், "ஒன்று செய்யலாமா, கிருஷ்ண குறூப்பைச் சந்தித்தால் என்ன? அவர் மிகப் பெரிய மாந்திரீகர்" என்றார்.

"நீயும் இதையெல்லாம் நம்ப ஆரம்பிச்சிட்டியா?" பிரபாகரன் சிரித்தபடியே கேட்டான்.

"நடந்துவிட்ட சம்பவங்களைப் பார்க்கும்போது அதையெல்லாம்

இருக்கே" என்றார் அவர்.

"இருக்காதே..... என்னை நீங்க பார்த்திருக்க முடியாது" - குமார் பதிலளித்தார்.

"ம்... ஞாபகம் வந்துவிட்டது. நான் சொல்லட்டுமா? சந்திரசேகரன் திருமேனியின் மகன்தானே? அந்த ஜாடை அப்படியே இருக்கிறது" - குறூப்பு நெற்றிப் பொட்டை தட்டிக்கொண்டே சொன்னார்.

"ஆமாம்.... அவர்தான் எங்க அப்பா" என்றார் குமார் ஆச்சரியத்தோடு.

"என்ன விஷயமா வந்தே?" - குறூப்பு ஓலைச்சுவடியை மடக்கி, பூஜையறை வாசல்படியை ஒட்டியிருந்த பீடத்தில் வைத்தபடி கேட்டார்.

(வாசனை வீசும்....)

# முதலிரவில் முடிந்த வாழ்க்கை!


சின்னப் பிரச்சினைகளைக்கூடப் பூதக்கண்ணாடி வழியாகப் பார்த்து மிரண்டு போகிறவர்கள் உண்டு என்பதற்கு உதாரணம் சொல்கிறேன்....

சமீபத்தில் நான் சென்னைக்கு வந்திருந்தேன். நோக்கம் 'Life Programme' என்ற வாழ்வியல் பயிற்சி அளிப்பதற்காக! மூன்றுநாள் நடந்த அந்தப் பயிற்சியின் முதல்நாள் ஒரு பெண்மணி என்னிடம் வந்து, "என் மகன் நான் சொல்லும் எதையும் கேட்கமாட்டேன் என்கிறான். இப்படியே போனால், நான் சொல்லும் பெண்ணைக்கூட இவன் கல்யாணம் செய்துகொள்ள மாட்டான் போலிருக்கிறது...." என்று வருத்தப்பட்டுப் பேச ஆரம்பித்தார்!

"சரி, நாளைக்கு உங்கள் மகனை அழைத்து வாருங்கள். அவனிடம் நான் பேசுகிறேன்...." என்றேன். அதற்கு அந்தப் பெண்மணி, "இல்லை சுவாமி! இப்போதே இவனுக்குப் புத்தி சொல்லுங்கள்!" என்று இடுப்பில் தூக்கி வைத்திருந்த தனது ஐந்து வயதுக் குழந்தையை இறக்கி, என் முன்னே நிறுத்தினார்!

என்னால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை!

சாப்பாடு ஊட்டினால், அந்தக் குழந்தை சாப்பிடமாட்டேன் என்கிறானாம்! ஏ...பி....சி... எழுதச் சொன்னால்.... வெறும் பொம்மையாகப் போடுகிறானாம்! 'சின்னச் சின்ன விஷயங்களுக்கே தாயாகிய தன் வார்த்தையைக் கேட்காதவன், வளர்ந்து பெரிய மனிதனானால், எப்படி நம் பேச்சைக் கேட்பான்...?' என்கிற ரீதியில் அந்தப் பெண் ரொம்ப ரொம்ப எதிர்நோக்குடன் சிந்தித்ததன் விளைவுதான் இந்தப் புலம்பல்!



இன்னும் சிலர் இருக்கிறார்கள். பிரச்சினையைப் பார்த்து அஞ்சுவதோடு நிறுத்திக் கொள்கிற ரகமில்லை. இவர்கள், உண்மையிலேயே விவகாரத்தைப் பூதாகாரமாக ஆக்கிவிடுவார்கள். மரத்திலிருந்து மரத்துக்குத் தாவும்போது, குரங்குக்கு ஏதாவது ஒரு சின்னக் காயம் வந்தால்கூடப் போதும்.... குரங்கு அதைச் சும்மா விடாது! அதைச் சொறிந்து சொறிந்து பெரிதாக்கி, கடைசியில் பயங்கர ரணம் உண்டாகி அதனாலேயே செத்துப் போகிற குரங்குகளும் உண்டு. இந்த நிகழ்ச்சியைப் பாருங்கள்.

அன்றுதான் அவர்களுக்குத் திருமணம். முதல் நாள்.... முதல் இரவு! கணவன், மனைவி இருவர் மட்டுமே தனிமையில் இருக்கிறார்கள். திருமணத்துக்கு முன்பு செய்த தவறுகளை எல்லாம் பாவமன்னிப்பு மாதிரி, புது மனைவியிடம் சொல்லிவிட நினைத்தான் கணவன். "கல்லூரி நாட்களில் நண்பர்களோடு சேர்ந்து நான் மது அருந்தியிருக்கிறேன். ஆனால், இன்றிலிருந்து...." - அவன் முழுதாகச் சொல்லி முடிப்பதற்குளேயே, புது மனைவி பதில் ஏதும் சொல்லாமல் கதவைத் திறந்துகொண்டு வெளியே போய் விடுகிறாள்!

"போயும் போயும் ஒரு குடிகாரனுக்கு என்னைக் கட்டி வைத்து விட்டீர்களே....?" என்று அவள் உறவுக்காரர்களிடம் புலம்புகிறாள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மாப்பிள்ளை, அவமானம் தாங்காமல் வீட்டைவிட்டு மட்டுமல்ல.... ஊரைவிட்டே ஓடிப் போகிறான்!

இதைவிடச் சிக்கலானவர்கள் - வலியப்போய்ப் பிரச்சினைகளை மடியிலே இழுத்துவிட்டுக் கொள்கிறவர்கள்!

அவர் ஓரளவு வசதி படைத்தவர். ஆனால், வியாபாரத்தில் ஏதோ நஷ்டம். தற்போது கொஞ்சம் நொடித்து விட்டார். ஒருநாள் புனேயிலிருந்து சில கிலோ மீட்டர்கள் தள்ளியிருக்கும் ஒரு கிராமத்துக்குப் போய்விட்டு, மீண்டும் திரும்புவதற்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அப்போது இந்த நபர், "சுவாமி, என்னுடைய காரிலேயே புனேவுக்குப் போகலாமே...." என்றார். நானும் 'சரி' என்று அவரது காரில் ஏறிவிட்டேன். நண்பகல் வேளை என்பதால் ஒரே வெயில் புழுக்கம். 'சற்றுக் காற்றாவது வரட்டுமே....' என்று காரின் ஜன்னல் கதவுகளை இறக்கிவிட முனைந்தேன். ஏதோ நான் மின்சாரக் கம்பியைத் தொடப்போனது மாதிரி, இவர் எகிறிக் குதித்து "சுவாமி, வேண்டாம்...." என்று என்னைத் தடுத்துவிட்டார்! இவரின் செயலுக்குக் காரணம் புரிந்துகொள்ள முடியாததால், நான் அவரை, "ஏன்?" என்று கேட்டேன். அதற்கு அவர் -

"இந்தக் கிராமம் முழுவதும் என் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். கார் ஜன்னல் கதவுகளை இறக்கிவிட்டு விட்டால், என் காரில் ஏ.ஸி. இல்லை என்பது அவர்களுக்குத் தெரிந்துவிடும். அதனால் தயவுசெய்து கிராமத்தைத் தாண்டும் வரை பொறுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு, கார் கிராமத்தைக் கடக்கும்வரை அவரும் காற்றோட்டம் இல்லாமல் புழுக்கத்தில் அல்லாடிக் கொண்டு வந்தார்.

மேலே சொன்ன எந்த ரகத்திலும் சேராமல் பல சமயம் நமக்கு உண்மையான பிரச்சினைகளும் வரும்! அதுபோன்ற சமயங்களில் இரண்டு சாத்தியக்கூறுகள்தான் இருக்கின்றன. ஒன்று - முரட்டுக்காளையின் கொம்புகளை நேருக்கு நேராகப் பிடித்து வீழ்த்துகிற மாதிரி பிரச்சினைகளை எதிர்கொண்டு வீழ்த்திவிடலாம்! அல்லது பிரச்சினை உங்களை வீழ்த்திவிடலாம்!

சரி, பிரச்சினையை வீழ்த்துவது எப்படி?

இதற்குப் பதில் சொல்வதற்குமுன் ஒரு சின்ன ஒப்பீடு.... பிரச்சினையை எதிர்கொள்வது 'டேட்டிங்' வைத்துக்கொள்கிற மாதிரி! 'ஐயய்யோ.... சுவாமி 'கெட்ட வார்த்தை' எல்லாம் பேசுகிறாரே....' என்று பதறாதீர்கள்.

'டேட்டிங்' என்பது என்ன? ஓர் இளம்பெண் அல்லது ஆணின் ரசனை, விருப்பு, வெறுப்பு என்று சகலதையும் தெரிந்துகொள்ள ஓர் இளைஞன் அல்லது பெண் செய்யும் முயற்சிதானே 'டேட்டிங்'!

பிரச்சினையை ஓர் இளம்பெண்ணாக நினைத்துக்கொண்டு, அதோடு 'டேட்டிங்' செய்யுங்கள்! பிரச்சினையின் முழுப் பரிமாணம், அதைச் சமாளிக்கக் கூடிய வழிமுறைகள் உங்களுக்கு விளங்கும்.

பிரச்சினையை நீங்கள் ஒரு தண்டனையாகவே நினைக்காதீர்கள். கஷ்டப்படுவீர்கள். சவாலாக நினைத்துக் கொள்ளுங்கள் - உற்சாகம் அடைவீர்கள்!

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. **129**க்கான சரியான விடைகளை அனுப்பி **250** ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

**ந. சுபாஷினி, பேர்லன்ஸ், பூண்டுலோயா.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. சி. உமாபதிசிவம், 333/3 F, சென் அந்தனிஸ் மாவத்தை, ஹெந்தலை வத்தளை.
2. இ. குணாளன், 24, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.
3. இ. தவக்குமரன், 4, நகராட்சி மன்ற விடுதி, காந்தி நகர், திருகோணமலை.
4. பா. சுஜாதா, 13, பாரதி வீதி, கூமாங்குளம், வவுனியா.
5. திருமதி ரி. பரமேஸ்வரன், J/3 அன்டர்சன் தொடர் மாடி, கொழும்பு 5.
6. ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை.
7. ரா. கல்பனா, 175, லோவர் வீதி, பதுளை.
8. பு. மில்கா, ஆரையம்பதி, மட்டக்களப்பு.
9. சு.போஜனா, 392, பிரதான வீதி, நீர்கொழும்பு.
10. அந்தோனி, சந்தை ஒழுங்கை, பிபிலை.

## குறுக்கெழுத்துப் போட்டி 131

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| ■ | ■ | 9 | ■ | 11 | 12 |
| 13 | 14 | 15 | ■ | 17 | ■ |
| 19 | ■ | ■ | 22 | ■ | 24 |
| 25 | ■ | ■ | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | ■ |

### இடமிருந்து வலம்

1. முனிவர் ஒருவர்
11. குழந்தையின் உணவு (மாறியுள்ளது).
13. இதன் அழகு முகத்தில் தெரியும் (மாறியுள்ளது).
28. முனிவர்கள் இதனைச் செய்வார்கள்.
31. சிறு காப்பியம் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

3. ஓர் உறவு முறை (குழம்பியுள்ளது).
5. கவிஞர்கள் பெண்களின் விழியை இப்படித்தான் அழைப்பார்கள் (குழம்பியுள்ளது).
6. உலகம் (தலைகீழாக உள்ளது).
13. கலைகளில் ஒன்று; நாவல்களிலும் உண்டு (தலைகீழாக உள்ளது).
22. மனிதனின் முழு நிறையினைத் தாங்குவது இதுதான்.
24. கேள்விக்குச் சம்மதமான பதில்.

## குறுக்கெழுத்துப் போட்டி 129 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | 2 ல | ங் | 4 கை | ■ | ■ |
| 7 றா | ■ | ■ | 10 தி | 11 க | 12 தி |
| 13 வ | 14 ய | 9 சு | ■ | ■ | 18 ட் |
| 5 ண | ■ | 21 றொ | ■ | 23 த | 24 சை |
| 25 ன் | 26 ட | 16 க | ■ | ■ | 30 றா |
| ■ | ■ | 33 ம் | 34 ஜா | 35 தா | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 02.08.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-131
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# காதலின் நுனியில் நண்பன்

அது ஒரு இனிமையான அந்திப் பொழுது. இளந்தென்றல் தவழ்ந்து கொண்டிருந்தது. பறவைகள் கீதமிசைத்த வண்ணம் தமது இடங்களுக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. கடமையை முடித்த சூரியன் சிவந்த முகத்துடன் கீழ் இறங்கிக் கொண்டிருந்தான். இவற்றுக்கு இடையில் அலைமாறி அலையாகக் கரையை முத்தமிட்டுக் கொண்டிருந்தன அலைகள். இத்தனையையும் பார்த்தவாறு ஓர் இடத்திலே தனது காதலனை எதிர்பார்த்திருந்தாள் பிரியா.

துடுப்பில்லாத தோணி போல் அவளுடைய உள்ளம் அசைந்து கொண்டிருந்தது. சில்லென்ற குளிர் காற்று அவளுடைய முந்தானையை வம்புக்கு இழுக்க, இழுத்துப் பிடித்துவிட்டு நேரத்தைப் பார்க்கிறாள். அவளுடைய கடிகாரம் 5.25ஐத் தாண்டியவாறு ஓடிக் கொண்டிருந்தது. கைகளைப் பிசைந்தவாறு 'போயும் போய் இவரைக் காதலித்தோமே' என தன்னைத்தானே நொந்து கொள்கிறாள்.

காதலர்களின் இத்தகைய எதிர்பார்ப்பு, காத்திருப்பு, ஏமாற்றம், பரிதவிப்பு என்பன இன்பத்தை அளிக்கும் ஊடல் என்பதை அவள் மனம் ஒப்புக்கொள்ள மறுக்க, தனது கடந்த கால நினைவுகளை மீட்டிப் பார்க்கிறாள். அவளது எண்ணம் பின் நோக்கிச் செல்கிறது.

ஆம். அவள் அப்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தின் இறுதியாண்டு மாணவி. அவளுடன் படித்தவன்தான் ரஜனி. பிரியா ஒரு நடுத்தரக் குடும் பத்தைச் சேர்ந்தவள்.

அமைதி, அடக்கம், அன்பு, பண்பு அனைத்திலும் அவளுக்கு நிகர் அவளேதான். அழகிலும் கூட அவளொரு ராணி என்று கூறலாம். அவள் முகத்தை ஒரு முறை பார்த்தால்....இன்னொருமுறை பார்க்க மனம் துடிக்கும்.

முத்துப்பல் சிரிப்பு, ஓரக்கண் பார்வை, காண் போரைக் கவர்ந்திழுக்கும் கண்கள். இத்தனை இருந்தும் எவருடைய காதல் வலையிலும் அவள் விழவில்லை. ஆண்களை மயக்கி தன் வலைக்குள் சிக்க வைக்கவும் தெரியவில்லை. எதனாலோ தெரியாது. அவளை அணுகுவதற்கு அனைவரும் பயந்தனர். இது அவளுக்குச் சாதகமாக அமைந்தது.

ஆனால் அவள் ரஜனியிடம் இதயத்தைப் பறிகொடுத்தது ஒரு பெரிய கதை. ரஜனி ஒரு துடிப்பான இளைஞன். அது மட்டுமன்றி, ஒரு எழுத்தாளனும் நல்ல பேச்சாளனும் கூட. அவனது எழுத்துக்களும் பேச்சுக்களும் பெண்ணினத்தின் சீரழிவுக்கு எதிராகவும் பெண்ணின உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தன. இன்னொரு பாரதியே பிறந்து விட்டான் என்று அப் பல்கலைக்கழக மாணவிகள் பூரித்தனர்.

அன்றும் அவ்வாறே தமிழ் தினத்தை முன்னிட்டு, பிரமாண்டமான கலை விழா ஒன்று நடைபெற்றது. அக் கலைவிழாவிலே ரஜனியின் பேச்சு இடம்பெற்றது. அறிவிப்பாளர் அவனை மேடைக்கு அழைத்தார். இன்னும் சொல்ல வேண்டுமா? கரகோஷங்கள் விண்ணைப் பிளந்தன. அமைதியாக மேடை ஏறி சபையை அமைதிப்படுத்திவிட்டு ஆவேசமாய் பேசத் தொடங்கினான்... ரஜனி

"அன்பின் சகோதர, சகோதரிகளே.....! இன்றைய பாரதி நினைவு தினத்தில் பெண்கள் பற்றிய அவரது சிந்தனைகளை ஆராய்வது சிறந்ததென நினைக்கின்றேன். ஏனெனில் பெண்கள் சமூகத்தின் கண்கள். அந்தக் கண்களையே காயப்படுத்தும் செயல்கள் சமூகத்தில் மலிந்து விட்டன. மென்மையான பெண்ணினம் வன்மையான அடக்குமுறைகளால் ஆளப்படுவதை இதயம் உள்ள எவராலும் அனுமதிக்க முடியாத விடயமாகும்.

பெண்ணுக்கொரு நீதி, ஆணுக்கொரு நீதி என சட்டங்களைச் செய்து பெண்ணினத்தை சடப்பொருளாகக் கருதிக் கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு எனக் கேட்கும் பழைமை வாதிகளுக்குப் பதிலளிக்கத் தொடங்கிவிட்டான் பாரதி.

இதனால்தான் இன்றைய சகல துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாகக் காணப்படுகிறது. பெண்கள் என்றால் வெறும் பதுமைகளல்ல. ஆண்களின் பொம்மைகளுமல்ல. அவர்களுக்கும் உணர்வுகள் இருக்கின்றன. சீதனத்தின் சீர்கேட்டால் சீரழிவதும், மாமியாரின் கொடுமைகளால் மடிவதும், ஆணினத்தின் அதிகாரத்தால் அவதிப்படுவதும் பெண்ணினத்தின் தலைவிதியா?....

இந்தத் தலைவிதியை இளைய தலைமுறையினரான நாம் தான் மாற்றியமைக்க வேண்டும். 'ஆணும் பெண்ணும் என்றும் சரிசமம்; இருவருக்கும் சம உரிமையுண்டு' எனக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இவ்வுலகம் அறிவால் தழைத்தோங்கும் என்ற வாக்கை நிலை நாட்ட முடியும். சமைக்கின்ற கைகளையும் சரித்திரம் படைக்க வைக்க வேண்டும்.


அவர்களும் சாதனை படைக்க வேண்டும். அதற்கான வழிகளைத் திறந்து விடுவோம். எனவே, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை அடியோடு அழித்தொழிப்போம் இதற்காக இளைஞர் சமுதாயத்தினரை அணிதிரண்டு வாருங்கள் எனக்கேட்டு எனது சிற்றுரையை முடிக்கிறேன். நன்றி." எனக் கூறி மேடையை விட்டகன்றான்.

ரஜனியின் பேச்சு முடிந்ததுதான் தாமதம். கரகோஷங்கள் அவ்வரங்கை அதிரவைக்கின்றன. அதிர்வலைகள் படிப்படியாக அமைதியடைய, பிரியாவின் கைகள் மட்டும் ஓயாமல் தட்டிக் கொண்டிருந்தன. அதனைக் கண்ணுற்றோர் 'கொல்' எனச் சிரித்தனர்.

அப்போதுதான் பிரியா தனது சுய நினைவுக்கு வந்தாள். தன்னைப் பார்த்துத்தான் எல்லோரும் சிரிக்கிறார்கள் என்பதை உணர்ந்து வெட்கித் தலை குனிந்தாள். இது அவளுக்கு அவமானமாக இருந்தது. ரஜனியின் உரையில் இந்தளவிற்கு உறைந்து போய்விட்டோமே என ஆதங்கப்பட்டாள். அவளது சிந்தனைகள் கலந்து வர, கலை விழாவும் இனிதே நிறைவுற்றது. அவள் அவமான மிகுதியால் அப்படியே இருந்து விட்டாள். அப்போது அவளருகே வந்தான் ரஜனி.

"பிரியா என்னால தானே உங்களுக்கு இவ்வளவு அவமானமாகப் போய்விட்டது." இதை எதிர்ப் பார்க்காத அவளுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு "ரஜனி எனக்கு எந்த அவமானமும் இல்லை. நான் உங்களுடைய திறமையையும், துணிவையும் பாராட்டுகிறேன். உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்" என தனது கரத்தை நீட்ட, அதைக் குலுக்கியவாறே "நன்றி" என்றான். ரஜனியின் இச் செயல் பிரியாவுக்கு என்னவோ போல் இருந்தது. அவள் ரஜனியிடம் கதைப்பதை ஒரு இன்பமாக நினைத்தாள். இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர்.

ஆரம்பத்தில் புன்னகையுடன் மட்டுமிருந்த சந்திப்பு பின்னர் விமர்சனங்கள் பரிமாறப்பட்டு விவாதமாக மாறி,



அ.கா.மு.நிஸ்வீன், மூதூர் - 01

ஒருவரை ஒருவர் புரிந்து காதலாக மாறியது. 'ரஜனி இனி எனக்குரியவன்,' என்ற மகிழ்ச்சிக் கொம்பில் பிரியாவும், 'பிரியா என்ற நிலவுக்கு நானேதான் சொந்தக்காரன்' என்ற கற்பனை வானில் ரஜனியும் சங்கமமாக இருவரும் காதல் வானில் பறக்கும் சிட்டுக்களானார்கள். இருந்தும் இவர்களுடைய காதல் சராசரிக் காதலிலிருந்தும் வித்தியாசப்பட்டது. அழகிலே அன்பைத் தேடும் அற்பர்களுக்கு மத்தியிலும் அன்பிலே அழகைத் தேடும் ஜீவன்களாக வலம் வந்தனர்.

இதனாலேதான் கல்லூரி வாழ்க்கை முடிந்தும் கூட அவர்களின் காதல் பயணம் தொடர கடற்கரை அவர்களுக்கு ஒத்தாசை புரிந்தது.

"மகாராணியாரே எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த யோசனை" என்ற குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தவள் மகாராஜனைக் காணாத ஏக்கத்தில் கடலில் குதித்து விடலாமென்றுதான் யோசிக்கிறேன்." என்று பதிலளித்தாள். இதை எதிர்பார்க்காத ரஜனி திடீரென சீரியசானான். "பிரியா நீ என்னம்மா பேசுற. நான் உலகில் இருப்பதே உனக்காகத்தான். நீ இல்லைனா உலகமே இல்லை இவ்வாறு குழந்தைத்தனமாகக் கூறிய ரஜனியை குறும்புடன் பார்த்தாள் பிரியா. ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் அன்பு இருவருக்கும் உவகையளித்தது. இதனால் நிமிடங்கள் வினாடிகளாயின.

'காதலர்களுக்கு நிலவழகு' என்ற வைரமுத்துவின் கூற்றை நிரூபித்தனர். இவ்வாறு இருவரும் காதல் வானில் உல்லாசமாக வலம் வந்தனர். உண்மை அன்பில் உலகை மறந்தனர்.

இவற்றுக்கிடையில் காலம் உருண்டோடியது. கடமைகள் வென்றன. காதல் சந்திப்புகள் குறைந்தன. ரஜனியின் இந்த மாற்றம் கண்ட பிரியா தடுமாறினாள். அவளின் உள்ளம் பதறியது. அவனின் மாற்றத்திற்கான காரணத்தை அறிய அவள் துடியாய்த் துடித்தாள். ஆனால் அவனது காதலில் குறை இருக்கவில்லை. இருந்தும் அவன் முன்பிருந்தது போல் இப்போது இருப்பதில்லை. எதையோ இழந்தவன் போன்று பிரமை பிடித்தவனாகக் காணப்பட்டான். இதற்கான காரணங்களைக் கேட்டாள் பிரியா.

"எனக்கு ஒன்றும் இல்ல பிரியா. நான் உன்னைப் பிரிந்து விடுவேன் என்று பயமாக இருக்கிறது. அதுதான் காரணம்" என்று உண்மையை மறைத்தான் ரஜனி. "இல்லவே இல்ல ரஜனி, இந்த ஜென்மத்தில் பிரிவே இல்ல. அப்படி ஒரு பிரிவு இருந்தால் அது மரணம்தான்" என்றாள் உண்மையை அறியாத பிரியா. ரஜனி தனக்குள் சிரித்தான். ஆனால் அவன் இதயத்தினுள் எரியும் நெருப்பு அவனுக்கு மட்டுமே தெரியும். இந்த நெருப்பை எப்படி அணைப்பதென்று அவனுக்கே தெரியவில்லை. அவனின் சோகம் தொடர்ந்தது. நாட்கள் உருண்டன.

இவ்வாறு இருக்கையில் பிரியாவின் வீட்டில் அவளுக்குத் திருமணப் பேச்சுக்கள் எழுந்தன. இதனால், பதறிய அவள் ரஜனியிடம் அதைப் பற்றிப் பேசினாள். ஆனால் அவன் "பிரியா இப்போது நான் இருக்கும் நிலையில் திருமணத்தை நினைத்துப் பார்க்க முடியாது. அதற்குக் கொஞ்சம் அவகாசம் தேவை" என்றான் இதை எதிர்பார்க்காத பிரியா விக்கித்துப் போனாள்.

"ரஜனி அப்ப எதுக்கு என்னை காதலிச்சிங்க?" உங்களை தெய்வமா புரட்சி மனிதனா, நான் நினைத்தது தப்பு. ஆனா நீங்களும் ஒரு சராசரி இளைஞன் என்பதை நிரூபிச்சுக் காட்டிட்டீங்க. அதற்காக ரொம்ப ரொம்ப நன்றி ரஜனி."

அவள் இவ்வாறு கூறியதும், அவன் தன்னிலையைக் கூறினான். "பிரியா நீ என்னைத் தப்பா புரிஞ்சிக்கிட்ட. நான் இப்ப உன்னோட திருமணத்திற்கு மறுப்புத் தெரிவிக்கவில்லை; மறுக்கவுமில்லை. ஆனா நான் இப்ப ஒரு புரப்லெம்ல மாட்டிக்கிட்டு இருக்கேன். அதிலிருந்து விடுபட்டதும் ஒரு நல்ல முடிவுடன் உன்னை வந்து சந்திக்கிறேன் என்று கூறிவிட்டு அவளின் பதிலுக்குக் காத்திராமல் மிகவும் வேகமாக அங்கிருந்து நடந்து சென்றான் ரஜனி. ஒன்றும் புரியாமல் குழம்பிப்போய் அவளுடைய நெஞ்சம் வேதனையால் துடித்தது. அவன் மறையும் வரை அவனையே பார்த்துக் கொண்டிருந் தாள் அவள். அவன் மறைந்ததும் எழுந்து வீட்டுக்குச் சென்றாள்.

தலையணையில் முகம் புதைத்து தன்னால் இயன்றவரை அழுது தீர்த்தாள். சோகங்களைச் சுமந்த வண்ணம் ரஜினியின் நினைவுகளுடன் இன்று வருவான் நாளை வருவான் என நாட்களை எண்ணிக்கொண்டிருந்தாள். இவ்வாறு சில காலம் உருண்டோடியது. ஆனால் அவன் வரவில்லை. அவனுக்குப் பதிலாக அவனிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது. அவனது வரவு நாளை எதிர்பார்த்து காத்திருந்த பிரியா அந்தக் கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தாள்.

*அன்பின் பிரியாவிற்கு,*

ரஜனி எழுதிக்கொள்வது, இதுவரை காலமும் நான் உன்னிடம் ஒரு உண்மையை மறைத்துவிட்டேன். அதற்காக உன்னிடத்தில் மன்னிப்புக் கேட்கிறேன். எனவே முதலில் என்னை மன்னித்துவிடு. அதாவது என்னுடன் ஒன்றாகப் படித்த முஹம்மட்டைப் பற்றி நீ நன்கு அறிவாய். அதை நான் சொல்லி நீ அறியத் தேவையில்லை. நாங்கள் இருவரும் மதத்தால் வேறுபட்டாலும், மனதால் ஒன்றுபட்டு வாழ்ந்ததையும் நீ நன்கு அறிவாய். அதுவும் உனக்குத் தெரியும்.

ஆனால் திடீரென முஹம்மட்டுக்கு சுகவீனம் என அறிந்து அவனைப் பார்க்கச் சென்றேன். அப்போதுதான் அவனுடைய இரு கிட்னியும் பழுதாகி இருப்பதை உணர்ந்தேன். 'உடனடியாக மாற்ற வேண்டும். இல்லாவிடில் மரணமே முடிவு' என்றார் டாக்டர். டாக்டரின் கதை கேட்டு நிலை தடுமாறினேன்.

இருந்தும் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு பல வழிகளிலும் முயற்சித்தேன். ஒருவாறு நண்பர்களுடன் சேர்ந்து பணத்துக்கு ஏற்பாடு செய்து விட்டேன். ஆனால் கிட்னியைக் கொடுப்பதற்கு யாரும் முன்வரவில்லை. இந்நிலையில் என்னையே நினைத்து வாழும் காதலியா?? அல்லது உயிருக்காய் போராடிக் கொண்டிருக்கும் உயிர் நண்பனா? என்ற வினாவுக்கு விடையாக நானெடுத்த முடிவு நண்பனைக் காப்பாற்ற வேண்டும், என்பதே.

அதாவது என்னுடைய ஒரு கிட்னியைக் கொடுப்பதாக நான் முடிவு செய்துவிட்டேன். எனவே, என்னை மன்னித்து, மறந்து, ஒரு ஆரோக்கியமான முழு மனிதனை திருமணம் செய்துகொள்ள எனது மனப்பூர்வமான ஆசீர்வாதத்தைத் தெரிவித்து ஆசீர்வதிக்கிறேன். என்னைப் புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையில் விடைபெறுகிறேன்.

*என்றும் உன் பழைய நண்பன்*
*ரஜனி.*

ரஜனியின் கடிதத்தை வாசித்து முடித்த பிரியா ஒரு கணம் அதிர்ச்சியில் ஆடிப்போனாள். 'ரஜனி நீ என்ன தவறா புரிஞ்சிட்ட? இல்ல. மனிதப் புனிதனாகிட்ட. என்னிடம் இதைச் சொல்லியிருந்தால் நான்கூட உன்ன முஹம்மட்டுக்கு உதவி பண்ணத் தூண்டி இருப்பேன். ஏன்னா காதல விட உயிர்தான் பெரிது. எது எப்படி இருந்தாலும் இன மத பெருமை பேசி மனிதனைக் கூறுபோடும், சமூகத்தை வென்று அவர்களை தலைகுனிய வச்சிட்ட. உன்ன ஒரு சாதாரண மனிதனாகத்தான் நினைத்தேன். எப்போது நீ ஒரு கிட்னியை தானம் செய்தாயோ..... அப்போது நீ உடலால் பரிபூரணமடைந்து உள்ளத்தால் தெய்வமாகி விட்டாய். மனிதன் உயிருடன் இருக்கும்போது தானம் செய்வதற்கு என்றுதான் இறைவன் இரு கிட்னிகளை படைத்துள்ளான். ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ ஒரு கிட்னி தாராளமாகப் போதும். உலகின் பெரிய மனிதர்கள், தலைவர்கள் எல்லாரும் ஒரு கிட்னியுடன்தான் சிறப்பாக வாழ்ந்தார்கள். உன்னைத் திருமணம் முடித்து நான் குழந்தை பெறுவதன் மூலம், நாம் வகுப்பறையில் விஞ்ஞானத்தில் படித்தது போல, கிட்னிக்கும் ஆண்மைத் தன்மைக்கும் சம்பந்தமில்லை என மற்றோருக்கு நிரூபிப்போம். இனி நீதான் என் தெய்வம். நீதான் என்னுயிர். வாழ்ந்தாலும் செத்தாலும் உன்னோடுதான் ரஜனி. சத்தியம்.... சத்தியம்.... சத்தியம்... இவ்வாறு தனக்குள்ளே உச்சரித்துக் கொள்கிறாள் பிரியா.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# சிறப்பான தோற்றம் மதிப்பு தரும்!

நல்ல தோற்றமுடன் காட்சியளியுங்கள். சில மனிதர்களுக்கு இதைப்பற்றிய எண்ணமே மனதில் உதிக்காது - நாமும் இந்தச் சுற்றுப்புறத்தில் ஒரு ஜீவராசி என்றும், மற்றவர்களுடைய எண்ணமும் இதுதான் என்றும் எண்ணும் மனநிலை இருக்கும்போது, இதற்காகத் தங்களுடைய நாட்களைச் செலவழிக்கத் தேவையில்லை என்று கருதுவார்கள். "நம் தோற்றத்தை வைத்து மற்றவர்கள் நம்மை மதிப்பிடுவார்களே" என்று சில பேர் தங்களுக்குள் உணருவதில்லை.

நாம் அணியும் உடைகள் வேண்டுமானால் மிகவும் விலையுள்ளதாக இருக்கலாம். ஆனால் மற்ற உடல் பராமரிப்புப் பொருட்களை வாங்குவது மிகவும் எளிதாகவே இருக்கும். அதனுடைய தொழில் நுட்பங்கள் வேண்டுமானால் கடினமாகத் தோன்றும். ஆனால் அவற்றை நாமும் வடிவமைக்கலாமே!

சில மனித இனங்களில் வாழும் மக்கள் காட்டுமிராண்டிகளாகவோ அல்லது தரம் தாழ்ந்து போனவர்களாகவோ இருக்கும்போது, இதுவும் ஒரு நாகரீகத்தின் வெளிப்பாடாக இருக்கலாம். மற்றவர் கண்களுக்கு ஒரு அருவருக்கத்தக்க தோற்றத்தையும் அளிக்கலாம்.

உண்மையிலேயே பார்த்தோமானால் இது ஒரு சுயமரியாதைக் குறைவைக் காட்டும் ஒரு சின்னமாகக் கூட இருக்கலாம்.

உடற்பயிற்சி செய்வது அல்லது வேலை செய்வது - இந்த இரண்டும் மனதுக்குள் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணலாம். ஆனால் இந்த இரண்டுமே சுத்தமாக இருப்பதற்கு மிகவும் துணை புரிவதை மறுக்க முடியாது. உதாரணமாக ஐரோப்பிய மற்றும் ஆங்கிலேய பணியாளர்கள் தாங்கள் வேலை செய்யும் போதுகூட தங்களது தோற்றத்தை நல்லமுறையில் வைத்துக்கொள்ளும் திறன் உடையவர்களாக இருக்கின்றனர். சிறப்பு மிக்க சில விளையாட்டாளர்கள், வியர்வை சிந்துமளவில் தங்கள் உடல் முழுவதும் ஈரமாகி விட்டிருந்தாலும் சிறப்பாகத் தோற்றமளிப்பதை நன்கு காண முடியும்.

**- 'மகிழ்ச்சி' எனும் நூலிலிருந்து.**

தள்ளாடியபடி உள்ளே நுழைந்தவனைக் கண்டதும் சுதா எழுந்து வரவேற்றாள். அவன் கூச்சமெதுவுமின்றி அவள் தோள்களில் கரங்களைப் போட்டு அணைத்தபடி தன்னை நிலைப்படுத்திக் கொண்டான்.

அவனிடமிருந்து மதுவினதும் வியர்வையினது மாய்க் கலந்த வாடை வீசியது. அவனை மெல்ல அழைத்துச் சென்று கட்டிலில் அமர்த்தினாள்.

போய் ஜன்னல்களைச் சாத்திவிட்டுத் திரும்புகையில்," அவன் பார்வை தன்மீதே இருப்பதைக் கண்டு புன்னகை புரிந்தாள்.

பிரியம் கொண்டவள் போன்ற அவள் சுபாவ நடைமுறைகளும், தூய்மையும் அவனை ஈர்த்தன. மனம் குளிர்ந்தது.

இவள் வெறும் பரத்தையல்லள். ஆடவன் மனம் தெரிந்து அவனைக் கட்டிப் போட்டுவிடும் பெண்மையின் அனைத்து அஸ்திரங்களையும் தெரிந்தவள். எதிராளியைப் படித்துவிடும் கூரிய மனம் படைத்தவள்.

"இன்னும் நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போகவில்லையா?"

மந்தாரன் சங்கடத்துடன் அவள் விழிகளுக்குள்

அவள் குனிந் தபடியே தலையை அசைத்தாள்.

அவன் அவள் தோள்களைப் பற்றித் தூக்கினான். "நான் சரியானவன் இல்லை... எனக்குத் தெரிகிறது..."

அவன் குரல் தழதழப்பை உணர்ந்து ஏறிட்டாள். கண்கள் பளபளத்திருந்தன. "நடத்தையில் மட்டுமல்ல, பேச்சிலும் அசிங்கமானவனாகவே வெளிப்பட்டு விடுகிறேன்.. விஷத்தை உமிழ்வதில் குரூர திருப்தியடைந்து விடுகிறேன்" சிதறித் தத்தளித்த சொற்களோடு அவன் அழ ஆரம்பித்தான்.

"நான் உங்களை விரட்டுவது போலப் பேசியிருக்கக் கூடாது" என்று அவனை நோக்கி எழுந்தாள் சுதா.

அவன் உடைந்து கேவினான். தன்னைச் சுதந்திரமாக்கிக் கொள்ள, தடைகளைச் சிதற எண்ணுபவன் போலக் கண்ணீரைச் சிதறினான்.

"என்ன இது.... குழந்தையைப் போல?" அவள் அவனை உலுக்கினாள்.

அவன் சுதந்திரமடைந்தவன் போலக் குலுங்கி அழ ஆரம்பித்தான். அவள் அவனை மார்போடு அணைத்துக் கொண்டாள்.

## கணவனுக்காக உருகுபவள் மனைவி!
## அவளை கண்ணீரில் மூழ்க வைப்பவன் கணவன்!!

அவள் இரவு நேர மெல்லிய ஆடை அணிந்திருந்தாள். உடல் மீது பாந்தமாக படிந்து கிடந்த அந்தப் பாரமற்ற ஆடை, அவள் வளைவுகள் அனைத்தையும் வெளிப்படுத்தின நடக்கையில் தெரிந்த அசைவுகள், அவள் வேண்டுமென்றே வெளிப்படுத்தியவையாய் உணர்ந்தான்.



மந்தாரன் முகத்தைத் திருப்பினான். அவனுக்குச் சிறு எரிச்சல் ஏற்பட்டது. என்ன சிரிப்புச் சிரிக்கிறாள்? இங்கு வரும் எல்லா ஆண்களிடமும் இப்படித்தான் சிரிப்பாளா?

எழுந்து போய்விட உருவான எண்ணத்தை

## தருவது முழடில்யன்

நடைமுறைப்படுத்த முடியாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.

"குடிக்க ஏதாவது கொண்டு வரட்டுமா?"

அவளைப் பார்க்காமலே வேண்டாமெனத் தலையசைத்தான்.

"கொஞ்சம் இருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி உள்ளே சென்றாள்.

சற்று நேரம் கழித்து அவள் திரும்பி வந்த போது, உடலிலிருந்து குளித்த சருமம் எழுப்பும் மெல் லிய மணம் எழுந்தது. வாசனைத் தைலம் எதுவும் அவள் பூசிக் கொள்ளாதது அவனுக்குத் திருப்தியளித்தது.

மிக இளமையாகவும் புத்துணர்ச்சியாகவும் தெரிந்தாள்.

குழந்தைகளுக்குரிய உதடுகளும், மலர்ந்த கண்களில் கபடின்மையுமாகச் சிரித்தாள். மிகப் ஊடுருவினான். அவனுக்குப் போதை இறங்கியிருந்தது.

"உங்கள் மனைவியிடம் போயிருப்பீர்கள் என்று நினைத்தேன்..."

அவனுக்கு யார் மீதென்று தெரியாத கோபம் பொங்கியது.

மௌனமாய்ச் சில விநாடிகள் இருந்தான்.

அவளை அவனருகே வந்து தரையில் அமர்ந்தாள். கைகளை அவன் முழங்கால்கள் மேலாகக் கட்டிக் கொண்டாள்.

அவள் சிநேக பாவமும், கண்களில் தெரிந்த தூய்மையும் அவனை இளக்கியது. நாசியில் அவள் நிறைந்தாள்.

அவன் குரல் குழைந்து வந்தது. "அவள் என்னால் நேருக்கு நேர் பார்க்க முடியும் என்று தோன்றவில்லை"

"பாவம்" என்றாள் சுதா.

மந்தாரன் திடுக்கிட்டவன் போல அவளைப் பார்த்தான். "யாரைச் சொல்கிறாய்?"

"உங்கள் மனைவியைச் சொல்கிறேன். அவரைத் தனியே விட்டு இவ்வளவு நாட்கள் நீங்கள் பிரிந்திருப்பது சரியா?"

தடுமாற்றத்துடன் அவள் கண்களுக்குள் பார்த்தான். உண்மையும் பரிதாபமும் கொண்டு களங்கமற்றிருந்தன அவை.

இவள் என்ன சொல்கிறாள். என்னை விரட்டுகிறாளா?

"உங்கள் தயக்கத்தால் மேலும் மேலும் அவரை விட்டு விலகிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எப்படியும் போக வேண்டியவர் தானே? அவர் உங்களைப் புரிந்து கொள்வார். விரைவில் போய் அவரைச் சமாதானப்படுத்துவதுதான் நல்லதென்று படுகிறது."

மந்தாரனுக்கு மீண்டும் எரிச்சல் மூண்டது. "உனக்கு என்னைச் சலித்துவிட்டதா?" சொல்லிய பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டான்.

திடுக்கிட்டுத் திரும்பிய அவளுக்குக் கண்கள் பொங்கியது. தலையைக் குனிந்து கொண்டாள். அவள் மடியில் விழுந்த துளிகள் ஆடையில் ஊறி மறைந்தன.

எப்படி இந்த வார்த்தைகளில் விஷம் வந்துவிடுகிறது... மந்தாரன் பச்சாதாபத்தில் குறுகினான். இவளை எப்படித் தேற்றுவது என்று குழம்பினான்.

"மன்னித்துக் கொள் சுதா. என் இயலாமையில் வெளிப்பட்டுவிடுகிற வார்த்தைகளுக்கு எந்த மதிப்பையும் தராதே."

"என்னடி இது? அவன் எங்கெங்கெல்லாமோ அலைந்துவிட்டு வருவான். நீ வெட்கமில்லாமல் வீட்டில் சேர்த்துக் கொள்வாயா? உன்னைப் போல பதிவிரதைப் பேருக்கு அலைகிறவர்களால்தான் அவர்கள் கூச்ச நாச்சமின்றிக் கொழுப்பெடுத்துத் திரிகிறார்கள்...." மாலதி கோபத்தில் தன் தோழியிடம் வெடித்தாள்.

தான்யா எதுவும் பேசாது தலைகுனிந்திருந்தாள். சற்றுக் கழித்து "என்ன செய்யச் சொல்கிறாய்?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டாள்.

"என்னடி என்னைக் கேட்கிறாய், பச்சைப் பிள்ளை போல! உன்னை, உன் கவலைகளை ஒரு பொருட்டாகவே எண்ணாமல் பரத்தையர் வீடுகளில் குலாவியிருந்து விட்டு வந்திருக்கிறான். இத்தனை நாள் இல்லாத வருத்தமெல்லாம் அனுபவித்துவிட்டாய். இப்போது அவன் வந்தவுடன், ஏதோ நீதான் தெய்வத்தன்மை பொருந்திய பத்தினி போல முகம் கோணாமல் அவனை வரவேற்று உபசரித்து மாதர் குல மாணிக்கம் என்று காட்டிக் கொள்ளப் பார்க்கிறாய்! உனக்குச் சுய புத்தி, ரோசம், மானம் எதுவும் கிடையாதா?"

தான்யா அவளைச் சற்றுப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுத் தாழ்ந்த குரலில் கூறினாள். "அவர் செய்தது தவறுதான். அது அவருக்கும் தெரிந்திருக்கிறது. தன் தவறுகளுக்காகப் பயந்து கூசுபவர்களை நாமும் குத்திக்காட்டிக் கொண்டிருக்க வேண்டுமா? தான் செய்த தவறுக்காக அஞ்சும் ஒருவரிடம், மீண்டும் அந்தக் குற்றத்தை எடுத்துக் காட்டிக்கொண்டிருப்பது பண்பாகுமா? மேலும் பழி சொல்லி அவரைக் கூனிக் குறுக வைக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை, விடு" என்றாள்.

மாலதி, அவளைப் பரிதாபமாகப் பார்த்துவிட்டு எழுந்து போனாள்.

*நெடிய திரண்ட தோள்வளை நெகிழ்த்த*
*கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்*
*வருவது ஓர் காலை, இன்முகம் திரியாது,*
*கடவுள் கற்பின் அவன் எதிர் பேணி,*
*மடவை மன்றநீ! எனக் கடவுபு*
*துனியில் வாழி தோழி! சான்றோர்*
*புகழும் முன்னர் நாணுப*
*பழியாங்கு ஒல்பவோ காணும் காலே.*

*(குறுந்தொகை :252)*

**வன்னிப் பெருநிலப் பரப்பிற்குள் யாரோ ஊடுருவி விட்டதாகத் தேடுதல் வேட்டையும், வீதிகளில் மறித்துச் சோதனைகளும் செய்துவருகின்றனரே?**

-இ.முருகநேசன், வவுனியா.

நல்லவேளை, இப்போது அடையாள அட்டை கேட்பது நம் தமிழர்; புதிதாய் வருபவர்களைப் பதிவுசெய்யக் கோருவதும் நம் தமிழர் என்று நாம் பெருமைப் பட்டுக்கொள்ள வாய்ப்பிருக்கிறதே!

**இன்றைய இசையமைப்பாளர்களில் நீங்கள் இரசிப்பது யாரை?**

-ஏ.எல்.முஹம்மட் றஸ்மி, அட்டாளைச்சேனை - 02.

அதிகப் படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதே சமயம் படத்திற்கு ஒன்றிரண்டு பாடல்களையாவது முணுமுணுக்கும்படி தந்துகொண்டுமிருக்கிறார்கள் - வித்யாசாகரும், யுவன்சங்கர்ராஜாவும்!

**ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்ற முதுமொழியின் அர்த்தம் என்ன?**

-ஏகேபி, தெல்லிப்பழை.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு சர்வதேசத் தரத்தில் அரசியலறிவு ஊட்டிக்கொண்டிருக்கும் நமது பிரபல ஒலி - ஒளி ஊடகவியலாளர்கள்!

**மேற்கிந்தியா இப்படி ஆகிவிட்டதே?**

-ஏ.எஸ்.ஹெரோல் நில்சன், பொகவந்தலாவ.

தைபு சுமந்த சிம்பாப்வேயின் துயரம் போல, பாவம் சந்தர்போல் தாங்கிவந்த சுமை!

**தங்களது பயண நடவடிக்கைகளைத் தெரிந்துவைத்துக்கொண்டு, படையினர்தான் தாக்குதல்களைச் செய்துவருகிறார்கள் என்று குற்றக்சாட்டி வரும் புலிகள், மீண்டும் அவர்களிடமே பாதுகாப்பைக் கேட்பது, வேறு யாருக்கோ பயப்படுவதால்தானே?**

-ஆ.சமாநந்தன், கொழும்பு - 06.

இத்தால், கேள்விகள் அனுப்பத் தபாலட்டைகளை வாங்கி வைத்துள்ள சகலமானவர்களும் அறியக்கடவது: புத்திசாலித்தனமாய்ச் சிந்திப்பதாக நினைத்துக்கொண்டு, இவ்வாறான 'தமிழர் விரோத' கேள்விகளை அனுப்பி என்னை இக்கட்டில் மாட்டிவிடாது கருணை புரிவீர்களாக!

**சத்யராஜின் 6.2 எப்படி?**

-ஆர்.வாசகன், வவுனியா.

ஆச்சரியம் என்னவென்றால், 6.2ஐப் பார்ப்பதற்காக ஆயத்தமாகிப் போவதற்கு முன்னால் அவரது 'இங்கிலீஸ்காரன்' வந்து ஓடிக்கொண்டிருக்கிறது! தமிழ்த் திரையுலகின் Minimum Guarantee அவர்தான்.

**சிந்தியா! காதலிப்பதற்கு அருமையான ஒரு ஐடியா சொல்லுங்களேன்?**

-எம்.ஆதித்தன், திருகோணமலை.

அருமையானதும், காதலிப்பதற்குத் தேவையானதும் இதுதான் : "யாரிடமும் ஐடியா கேட்காதீர்கள்!"

**பிரியசகி பார்த்துவிட்டீர்களா?**

-கே.சுப்பிரமணியம், சிலாபம்.

அதன் இயக்குனர் அதியமானின் பார்த்திபத்தனமான குசும்புகள் எனக்குப் பிடிக்கும். இனித்தான் பார்க்க வேண்டும்.

**யோசித்துப் பார்த்தால், நம் சிக்கலுக்கு, நம் பழைமைப் பெருமித உணர்வும், இறுகிக் கெட்டியாகிப் போன சில ரோச உணர்வுகளும் காரணம் என்று தோன்றுகிறது. சரிதானா?**

-ஞா.பரந்தாமன், யாழ்ப்பாணம்.

இப்படிப் பழைமைப் பெருமித நினைவில் வாழ்வைப் பலியாக்குகிறவர்களை "முதாதையரின் புதைகுழிகளை விற்றுச் சாப்பிடுபவர்கள்" என்றார் உருதுக் கவி இக்பால். நாம் இன்றைய இளையோர் உயிர்களையும் சேர்த்து, விற்றுச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம்.

**நயன்தாராவுக்குப் போட்டியாக யாரும் இல்லையா?**

-ஆர். உமா, கினலன் எல்ல.


தங்கள் உதடுகளின் மீதுள்ள அக்கறையால் அவர்கள் பின்வாங்கியிருக்கக் கூடும்!

**பிடித்தது கிடைப்பதில்லை, கிடைத்தது பிடிக்கவில்லை; கிடைத்ததைப் பிடித்ததாக்கிக் கொள்ளவும் முடியவில்லை, பிடித்ததைக் கிடைக்கச் செய்யவும் முடியவில்லை.**

**அப்படியென்றால்...என்னதான் செய்வது?**

-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியாபுரம்.

இழுத்துப் போர்த்துக் கொண்டு படுப்பது ஒரு வழி. அல்லாதவிடத்து, இதை முயற்சி செய்யுங்கள் : தினமும் காலையில் எழுந்து, இலங்கை, இந்தியா, மலேசியா மற்றும்



மாதவன் – சதா
பிரியசகி

சிங்கப்பூரெங்கும் பிரபலமான கோபால் பற்பொடியால் பல்துலக்கி விட்டு, திருக்குறள் புத்தகத்தை எடுத்து அதில் 36 மற்றும் 37ஆம் அதிகாரங்களைத் தொடர்ந்து படித்து வாருங்கள். உங்கள் சிக்கலின் பழம் பெருமை பிடிபட்டு, மன ஆறுதல் உருவாக வாய்ப்புண்டு.

**உங்கள் சந்தோஷம் எப்போது?**

-சண்முகம் நிரஞ்ஜலா, மஹியாவ.

நான் வாசகனாக இருக்கும் தருணம்.

**போதைப் பொருள் பாவனையை ஏன் ஒழிக்க முடியவில்லை?**

-மலர்மேனன், மஸ்கெலியா.

குடும்பம், சம்பள உயர்வு, அதிகாரம், பணத்தேட்டம், சமூக அந்தஸ்து, நம்மைவிட அடுத்தவன் உயர்ந்துவிடாது கவனித்தல்...என மனிதனுக்கு எத்தனையோ போதைப் பொருட்கள்! இவை எதுவுமில்லாமல், போதைக்குப் புகையும் மதுவும் போதுமென்றிருப்பவர்கள் ஒருவகையில் பாக்கியசாலிகள் - சித்தர்களைப் போல!

**காதலுக்குச் சொல்லப்பட்ட விளக்கங்களில் உங்களைக் கவர்ந்தது....?**

-எஸ்.மதிவதனன், மட்டுநகர்.

பல உண்டு. அதில் ஒன்று: "என் வாலிபம் கரைத்துச் செய்த ஓவியம் - காதல்!" என்றொரு ஓவியன் சொன்னது.

**தத்துவ விளக்கங்களும், நீதி போதனைகளுமாய் சமூகத்தை விளங்கப் படுத்திக் கொண்டிருக்கிறவர்கள், இன்றைய கொலைச் சூழலை எப்படிப் பார்க்கிறார்கள்? அவர்களது இயல்புக்கு மாறாக, எவ்வாறு மௌனங் காக்கிறார்கள்?**

-ஏ.ஆர்.விசாகன், கொழும்பு - 13.

இன்றும் அவர்களிடம் ஒரு தத்துவ விளக்கம் உள்ளது. அது இதுதான்: "மாபெரும் நீதியொன்றுக்காக இழைக்கப்படும் சிறு அநீதி உண்மையில் நீதியின் ஓர் அம்சம்தான்!" என்பதாகும்.

விடுதலை, சுதந்திரம் என்பவற்றின் பெயரால் எப்படி ஒரு பாசிஸ இருளைச் சமூகத்தின் மீது போர்த்து மூடினார்களென்பதை நாளைக்கு வரும் நம் சந்ததிதான் சொல்லும்!

**சண்டை இல்லாதபோதும், இப்போதும் தினத்துக்கு ஒன்றாகிலும் தமிழ்த் தரப்பிற்குள் கொலை விழுந்து கொண்டிருக்கிறதே....நீங்கள் ஏன் கண்டிப்பதில்லை? என்று ஒரு தமிழ்ப் பிரமுகரிடம் கேட்டபோது, அவர் சொன்னது இது : "கொலைகளை இரண்டு வகையாகப் பார்க்க வேண்டும். ஒன்று விடுதலைக்கு எதிரான கொலைகள்; மற்றது விடுதலைக்கான கொலைகள். விடுதலைக்கு எதிரான கொலைகள் இருந்துகொண்டிருக்கும் வரை, விடுதலைக்கான கொலைகளைத் தமிழர்கள் கண்டிக்க முடியாது. இனத்தைப் பாதுகாப்பதற்காகச் செய்யப்படும் கொலைகளும், இனவிரோதிகளால் செய்யப்படும் கொலைகளும் ஒன்றல்ல." நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

-ஏ.குருபரன், கொழும்பு - 05.

## சிந்தியா பதில்கள்

வரலாற்றில், தங்கள் மக்களின் நல்லதுக்காக என்று சொல்லி இவ்வாறே ஆயிரக்கணக்கிலும் லட்சக்கணக்கிலும் கொன்று குவித்தவர்களைப் பாசிஸ்ட்டுகள் என்றும் சியோனிஸ வெறியர்கள் என்றும் நாம் எண்ணியிருந்ததை யோசித்தால் ஒரே வெட்கமாக இருக்கிறது!

(துரதிர்ஷ்டவசமாக இதுவும் ஞாபகம் வருகிறது. செப்டெம்பர் - தாக்குதல்களின் பின் ஜோர்ஜ் புஷ் தொலைக்காட்சியில் உரையாற்றியபோது பயன்படுத்தியதும் "சுதந்திரத்தின் எதிரிகள்" என்ற வார்த்தையைத்தான்!)

**சிந்தியா, எப்படியிருக்கிறது வாழ்க்கை?**

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

அச்சுதன் அடுக்காவின் கவிதை போல :

"மெய் தின்னும் நோய்
காலம் மென்ற உறவுகள்
கைபிரிந்த சிநேகிதர்கள்
ஊர் வாய் மெல்ல
கொஞ்சம் பலவீனம்
இவற்றினோடேன் வாழ்க்கை
சிறகிழந்து தத்தும்
குருவியென..."




**1881-82களில்** இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கும் இடையில் சிட்னி நகரில் வைத்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது முதல் இன்னிங்ஸில் அனைத்து வீரர்களும் ஆட்டமிழக்கும் வரையில் அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர்களான ஜீ.ஈ.பல்மரும், ஈ.இவென்ஸும் மாத்திரமே பந்து வீசியுள்ளனர்.

இங்கிலாந்து அணியின் முதலாவது இன்னிங்ஸ் முடியும் வரையில் அவுஸ்திரேலிய அணியின் தலைவர் டபிள்யூ.எல்.மர்டோக் பந்து வீசுபவர்களில் எது விதமான மாற்றங்களையும் மேற்கொள்ளவில்லை. மேற்படி பந்து வீச்சாளர்கள் இருவரும் மூன்று மணி நேரம் தொடர்ந்து பந்து வீச்சில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் போது, இங்கிலாந்து அணியின் வீரர்கள் அனைவரும் ஆட்டமிழந்து 133 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டனர். இவர்கள் 190 நிமிடங்கள் களத்தில் நின்று பந்துகளுக்கு முகங் கொடுத்துள்ளனர். பீ.ஈ.பல்மர் 68 ஓட்டங்களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளையும் கைப்பற்றிக் கொண்டார் (53-36-68-07).

இவென்ஸ் 64 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டார் (57-32-64-03).

இதனிடையே ஐம்பதுகளின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய சுழற் பந்து வீச்சாளரான சனீ ராமடீன் என்பவர் அதிக ஓவர்கள் பந்து வீசிய வீரர் என்ற பெருமையைப் பெறுகின்றார்.

1957இல் இங்கிலாந்து அணிக்கெதிராக பர்மிங் ஹாமில் வைத்து இடம் பெற்ற டெஸ்ட் போட்டியின் போது ஒரு இன்னிங்ஸில் இவர் 98 ஓவர்கள் (588 பந்துகள்) பந்து வீசியுள்ளார். இதில் ஓட்டம் எதுவும் கொடுக்காத ஓவர்கள் 35 ஆகும்.

இப் போட்டியின் போது இவர் இரு இன்னிங்ஸ்களிலுமாக 129 ஓவர்கள் (774 பந்துகள்) வீசியுள்ளார். இதில் 51 ஓவர்களில் ஓட்டமெதுவும் கொடுக்கவில்லை. 129-51-228-9 என்ற வகையில் இவரது பந்து வீச்சு குறித்துக் காட்டப்பட்டிருந்தது.

ஓட்டமெதனையும் வழங்காத ஓவர்கள் பந்து வீசுவதில் சிறப்புத் திறமை கொண்டிருந்த ராமடீன், 1950ஆம் வருடத்தின் போது இங்கிலாந்து அணிக்கெதிராக லோட்ஸ் மைதானத்தில் வைத்து இடம்பெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றின் போது, முதலாவது இன்னிங்ஸில் தொடர்ந்து 10 ஓவர்கள் ஓட்டமெதையும் வழங்காமல் பந்து வீசியுள்ளார். இரண்டாவது இன்னிங்ஸின் போது இவ்வாறு 11 ஓவர்கள் பந்து வீசியுள்ளார்.

1929ஆம் வருடம் மே மாதம் 01ஆம் திகதி ட்ரினிடாட்டில் பிறந்துள்ள ராமடீன், 1950 முதல் 1960 வரை 43 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டு 158 விக்கெட்டுகளை (28.98) கைப்பற்றியுள்ளார். இதில் 10 விக்கெட்டுக்கள் அல்லது அதற்கும் அதிகமான விக்கெட்டுகளை 10 முறைகள் கைப்பற்றிக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பாகிஸ்தான் அணியின் மித வேகப்பந்து வீச்சாளரான சப்ராஸ் நவாஸ் 1978-79 களில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் போது கிரிக்கெட் வரலாற்றிலேயே மிகவும் அபூர்வமானதொரு பந்து வீச்சில் ஈடுபட்டுள்ளார்.

இதன் போது 26 பந்துகளை வீசிய நவாஸ், ஒரு ஓட்டத்தை மாத்திரம் வழங்கி 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார்.

இவர், இந்த இன்னிங்ஸின் போது தனது டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் மிகச் சிறந்த பந்து வீச்சாக 86 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இப் போட்டியின் போது அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 168 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பாகிஸ்தான் அணி இப் போட்டியில் 71 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டியின் போது பாகிஸ்தான் அணிக்கு முஸ்டாக் அஹமட் தலைமை தாங்கியுள்ளார். கிரகம் யெலொப் அவுஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

1948ஆம் வருடம் டிசெம்பர் மாதம் 01ஆம் திகதி லாகூரில் பிறந்துள்ள சப்ராஸ் நவாஸ், 1968-69களில் இருந்து 1983-84 வரையில் 55 டெஸ்ட் போட்டிகளில் ஆரம்ப மித வேகப் பந்து வீச்சாளராகப் பங்கு பற்றி 177 விக்கெட்டுகளைக் கைப்பற்றிக் கொண்டுள்ளார். (சராசரி 32.75) இதே நேரம் 1,045 (சராசரி 17.71) ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளார்).


**- மைந்தன் -**

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## மெக்ராத், வோர்ன் வெற்றி நாயகர்கள்

இங்கிலாந்து அணியுடன் ஆஷஸ் கிண்ணத் தொடர் போட்டிகளில் பங்குபற்ற இங்கிலாந்து வந்திருக்கும் அவுஸ்திரேலியா அணி, பல சவால்களைச் சந்தித்தே முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது. அந்தவகையில் ஆஷஸ் தொடரின்



முதலாவது டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 239 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. போட்டியில் அவுஸ்திரேலியா அணி வெற்றிவாகை சூடுவதற்குப் பெரும் பலமாக இருந்தவர்கள் அவ்வணியின் பந்து வீச்சாளர்களே! அந்த வகையில் மெக்ராத், ஷோன் வோர்ன் ஆகிய இருவருமே பெரிதும் பங்காற்றினார்கள்.

இப்போட்டியில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 190 ஓட்டங்களை எடுத்தது அடுத்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியைத் திணற வைக்கும் வகையில் பந்து வீசிய மெக்ராத் 5 விக்கெட்டுகளை வீழ்த்த 155 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணி மடக்கப்பட்டது.

இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 384 ஓட்டங்களைப் பெற்று 420 என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

புதிய உத்வேகத்துடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 156 ஓட்டங்களை எடுத்தது. நான்காம் நாள் ஆட்டம் மழை காரணமாக 5 மணித்தியாலங்கள் தாமதமாகத் தொடங்க 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவிக் கொண்டது.

இது பற்றி புகழ் பெற்ற வர்ணனையாளர் பேய்கொட் கருத்து தெரிவிக்கையில்,

வோர்னும், மெக்ராத்தும் எப்படி சோடி சேர்ந்து கொண்டார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் இருவரும் ஒன்றுக்கொன்று எதிரான பந்து வீச்சு நுட்பங்களைக் கொண்டவர்கள். அவர்கள் இருவரும் சேர்ந்து எவ்வாறு அணியை வழிநடத்துகிறார்கள் என்பதுதான் அதிசயம். வோர்னின் கைகளில் இருந்து பந்தானது புறப்பட்டுச் செல்கையில் அது எத்திக்கில் செல்கின்றன என்று தீர்மானிப்பது கடினம். பந்து நிலத்தை தொட்ட பின்னே அது எத்திசைக்குத் செல்லும் என்று அநுமானிக்க முடிகிறது என்று தெரிவித்ததோடு,

35 வயதாகும் வோர்ன், அணியில் சரியாகப் பிரகாசிக்க மாட்டார் என்று இங்கிலாந்து அணி எதிர்பார்த்தது. ஆனால் இன்று வோர்னும் அணியின் வெற்றிக்குக் காரணமாக அமைந்து விட்டாரே என்று இங்கிலாந்து அணி மூக்கின் மேல் விரலை வைத்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## முரளிதரன் மீண்டும் பிரகாசித்தார்

**த**டைகளை எல்லாம் படிக்கல்லாக மாற்ற முடியும் என்பதை முத்தையா முரளிதரன் மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டியுள்ளார். தற்போது மேற்கிந்திய தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியின் போது 46 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதன்



மூலம் தான் கிரிக்கெட் ஜாம்பவான் என்பதைக் காட்டி எமது இலங்கை நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

முன்னதாக அவுஸ்திரேலிய நடுவரினால் பந்தை வீசி எறிகின்றார் என்ற முற்றச்சாட்டு. பின்னர் ஆய்வுகூடப் பரிசோதனை போல மேற்சட்டை இல்லாமல் உடல் எங்கும் இலத்திரனியல் கருவிகளைப் பூட்டி சர்வதேச நடுவர்கள் முன் பரிசோதனை. எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடுவது போல அவுஸ்திரேலிய பிரதமரே "முரளி பந்தை வீசி எறிகின்றார்" என்று அபாண்டமாகக் குற்றஞ்சாட்டினார்.

இத்தோடு முரளியின் சகாப்தம் முடிந்தது என்று நினைத்தவர்களுக்கு, இல்லை நான் ஒரு பீனிக்ஸ் பறவை என்பதை சாதனை மூலமே பதிலளித்துக் காட்டியுள்ளார். இதற்குக் காரணம் என்ன? புது மனைவி மதியா? (இதைக் கேட்கும் போது புது மாப்பிள்ளை முகம் நாணுகின்றார்). இல்லை இன மத பேதம் பாராமல் முழு இலங்கையுமே திரண்டு நின்று கொடுத்த உற்சாகமா? ஏதோ ஒன்று.

ஆனால், முரளி தாண்டவேண்டிய தடை இன்னமும் உண்டு. உலகின் அதி கூடிய டெஸ்ட் விக்கெட்டுக்களை கைப்பற்றிய பெருமையை, யாரை பின்னுக்குத் தள்ளிப் பெற்றாரோ, அதே ஷேன் வோர்ன் இன்று முரளியை இரண்டாம் இடத்திற்குத் தள்ளி முதலிடத்தில் நிற்கின்றார்.

31 வயதுடைய முரளி 93 போட்டிகளில் மொத்தமாக 549 விக்கெட்டுக்களை இதுவரை பெற்றுள்ளார். ஷேன் வோர்ன் 124 போட்டிகளில் 589 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார்.

முரளிக்கு இன்னும் வயது இருக்கிறது. சாதனை செய்ய காலம் இருக்கிறது. மீண்டும் சிகரமடைய இலட்சக்கணக்கான இரசிகர்களுடன் சேர்ந்து நாமும் மனதார வாழ்த்துகின்றோம்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A, J, I, Y, Q | - 1 எண் | சூரியன் |
| B, K, R | - 2 எண் | சந்திரன் |
| C, G, L, S | - 3 எண் | குரு |
| D, M, T | - 4 எண் | ராகு |
| E, H, N, X | - 5 எண் | புதன் |
| U, V, W | - 6 எண் | சுக்கிரன் |
| O, Z | - 7 எண் | கேது |
| F, P | - 8 எண் | சனி |

உதாரணம்: D. V I S A G A N
4 6 1 3 1 3 1 5 = 24

### பிறப்பெண் எண்: 1 - கூட்டெண் எண்: 1

1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்து, தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகிற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வந்தால், இவர்கள் பூரண சூரிய ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். ஓரளவு உயரமானவர்களாகவும், கண் சிறிது சிவந்தும், அழகாகவும் இருப்பர். இவர்கள் எப்போதும் சிந்தனை செய்து கொண்டிருப்பதோடு தன் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குப் புதிய புதிய திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருப்பர். முன்னேற்றத்தில் ஆர்வம் கொண்ட இவர்களில் சிலர் நெருப்பு சம்பந்தப்பட்ட தொழிலாலும், சாப்பாட்டுப் பொருளாலும், இரும்பு, மின்சாரம் சம்பந்தமான தொழிலாலும் உயர்வடைவர்.

இந்த ஆதிக்கத்தில் பிறந்த பலர் அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு நாட்டை நிருவகிக்கும் நிர்வாகிகளாகவும், நல்ல மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்களாகவும், அரசாங்க ஊழியர்களாகவும் வாழ்கின்றனர். இவர்களது மனம் எப்பொழுதும், ஒரு நிலை கொள்ளாது இருக்கும். உடல் அதிக உஷ்ணமாக இருக்கும். இதனால் குளிர்ச்சிக்காக என்ன சாப்பிடலாம் என்று யோசனை செய்வர். தன் திருப்பதிக்காகச் செலவு செய்யத் தயங்க மாட்டார்.

நல்ல வாழ்க்கைத் துணைவரை அடையும் இவர்கள் குழந்தைகளிடம் அதிகப் பாசம் செலுத்துபவராக இருப்பர். இளமையிலே பல இலட்சியங்களைக் கொண்ட இவர்கள் தனது இலட்சியத்திற்காகப் போராடி வெற்றி பெறுவர். நேர்மையைத் தவிரப் போலிகளை வெறுப்பவராவர். இவர்களிடம் நாம் உள்ளே இருந்து கொண்டு தேடி வந்தவர்களிடம் இல்லை என்று சொல்லச் சொன்னால் நிச்சயம் சொல்ல மாட்டார்கள். இயற்கைக் காட்சிகளையும், மலைப் பிரதேசங்களையும், வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர். இவர்களுக்குப் பல நல்ல நண்பர்கள் அமைகின்றனர். உதவி செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை கொண்ட இவர்கள், தன் மனதிற்குப் பிடித்தவர்களுக்குத் தானாகவே உதவி செய்வர். இந்த எண்ணிக்கைக்காரர்களில் சிலர் காதல் வசப்படுவார்களானாலும் தனது கௌரவம் அந்தஸ்து பாதித்துவிடாது திருமண வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதுண்டு.

பொதுவாக இவர்களுக்கு நேர்மையான வழியில் பணம் சேரும். தீய வழியில் அதிகமான பணம் சேர்ப்பதற்கு வழி தெரிந்தால்கூட, அதை மனதால் செய்யப் பயப்படுவர். உண்மையைத் தவிர, பொய் சொல்ல மனம் கூசும் இவர்களே நாணயத்தின் நாயகர்கள். நோட்டுச் சீட்டு இல்லாது இவர்களை இலட்சக்கணக்கில் நம்பலாம். வாகனப் பிரியரான இவர்கள் அடிக்கடி வாகனங்களை மாற்றிக் கொள்ளவும் பழைய வாகனங்கள் மீது அதிக நாட்டங் கொள்பவராகவும் இருப்பர். இவர்களை மற்றவர்கள் நன்கு மதிப்பார்கள்.

பலருக்குத் தலைவராகவும், பலரை வாழவைக்கும் மனிதராகவும், தேசப்பற்று மிகுந்தவராகவும், தனது குடும்பத்தைப் பாதுகாப்பவராகவும் விளங்குவர். இவர்களுடைய பிறந்த திகதி, எண்களுக்குத் தகுந்தாற் போல் பெயர் அமைந்து விட்டால் மேற் குறிப்பிட்ட நற்பலன்களோடு எல்லா வளங்களும் பெற்று வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால், அப்பெயரெண்களுக்குத் தகுந்த மாதிரி நல்லதும், கெட்டதும் கலந்த வாழ்க்கை இருக்கும். இதனால் இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள பொருத்தமான எண்களில் பெயரை அமைத்துக் கொண்டு கெட்ட செயல்களை நீக்கி நன்மையைப் பெற்று வாழ பெயரை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டும்.

**தொழில்:**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு, நெருப்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்தவையே. மின்சாரம் சம்பந்தமான தொழிலும், இரும்பு சம்பந்தமான தொழிலும் ஏற்றவையே. அத்துடன் ஆபரண சம்பந்தமான தொழிலும் நல்ல பலனைக் கொடுக்கும்.

**பெயர் அமைக்கும் முறை:**

சூரியனுடைய பூரண ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு சுக்கிர ஆதிக்கத்திலும், சூரிய ஆதிக்கத்திலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். இவர்கள் செய்கின்ற வியாபார விலாசத்திற்கும், மேற்குறிப்பிட்ட ஆதிக்கத்திலே பெயரை அமைத்துக் கொள்ளுவது சிறந்தது. உதாரணமாக 19, 37, 46, 64 போன்ற சூரிய ஆதிக்க எண்களிலும், 15, 24, 33, 42, 69 போன்ற சுக்கிர ஆதிக்கத்திலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம். இந்த எண்களில் பெயரை அமைத்துக் கொண்டார்களேயானால் தொடர்ந்து முன்னேற்றம் உண்டு.

**நோய்:**

சூரிய ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு உஷ்ண சம்பந்தமான அனைத்து நோய்களும் வர வாய்ப்பு உள்ளது. மூலவியாதி, இரத்த அழுத்தம், உஷ்ண கட்டி, கண்நோய் ஆகிய நோய்கள் வரும். அதைத் தவிர்க்க குளிர்ச்சியான சாப்பாட்டுக் பொருள்களை ஆரம்பத்திலிருந்தே சேர்த்துக்கொள்ளுவது சிறந்தது. கீரை வகைகள் சாப்பிடுவதால் நன்மையடையலாம்.

**பின்பற்ற வேண்டியவை:**

யோகமான எண்:- 1, 6.
யோகமான திகதிகள்:- 1, 10, 19, 28; 6, 15, 24; 4, 13, 22, 31.
யோகமான நிறம்:- மஞ்சள், வெளிர் நீலம்.
யோகமான மோதிரக்கல்:- கனகபுஷ்பராகம், மாணிக்கம், தங்க புஷ்பராகம்.
ஆகாத நிறம்:- கருப்பு, சிவப்பு, காப்பிக்கொட்டைக் கலர்.
ஆகாத திகதிகள்:- 8, 17, 26.

*நன்றி :- டாக்டர். ஆர். ஐ. துரைமுருகர்*

# ஜான் டால்ட்டன் (1766 - 1844)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**ஜான்** டால்ட்டன் ஓர் ஆங்கிலேய அறிவியலார். அவர் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொது அறிவியல் அணு பற்றிய கருதுகோளைப் புகுத்தினார். இதனால் அவரது காலம் முதல் இயைபியலாகிய இரசாயனவியலில் பெரும் முன்னேற்றம் விளைய வழி ஏற்பட்டது.

எல்லாப் பொருள்களும் அணுக்கள் எனப்படும் எண்ணற்ற நுண்ணிய அழியாத் துகள்களாலானவை என்று முதன் முதலில் கூறியவர் அவரல்லர். பண்டைய கிரேக்கத் தத்துவ அறிஞரான டெமாக்கிரிட்டஸ் (கி.மு. 460-370) அக் கருத்தை எடுத்துரைத்தார். ஒருவேளை அதற்கு முன்னே அக்கருத்து நிலவியிருத்தல் கூடும். அக் கருதுகோளை (மற்றொரு கிரேக்க தத்துவ அறிஞரான) எப்பிக்கியூரஸ் ஏற்றுக் கொண்டார். ரோமானிய எழுத்தாளரான லுக்ரேஷியஸ் (இறப்பு கி.மு.55) தமது "தெ ரேரும் நாத்துரா" (பொருள்களின் இயல்பு) எனும் புகழ்மிகு கவிதையில் அக்கருத்தை எழில்பட எடுத்துரைத்தார்.

இடைக்காலத்தில் (அரிஸ்டாட்டில் ஏற்றுக் கொள்ளாத) டெமாக்கிரிட்டஸ் கொள்கை புறக்கணிக்கப்பட்டது. அது தற்கால அறிவியலைப் பாதிக்கவில்லை. ஆயினும் (ஐசக் நியூட்டன் உள்பட) 17ஆம் நூற்றாண்டின் பல முக்கிய அறிவியலார், அதுபோன்ற கருத்துக்களை ஆதரித்தனர். ஆனால் முற்கால அணுக் கொள்கைகள் எதுவும் அளவினமாக எடுத்துரைக்கப் பெறவில்லை; மேலும் அணுக்கள் பற்றிய தத்துவ ஊகங்களுக்கும் இயைபியலின் உண்மைகளுக்குமுள்ள தொடர்பை யாரும் கண்டறியவில்லை.

அப்போதுதான் டால்ட்டன் தோன்றினார். அவர் தெளிவான ஓர் அளவினக் கொள்கையை வகுத்தார். இயைபியல் பரிசோதனைகளை விளக்குவதற்கு அதைப் பயன்படுத்த முடியும். அதை ஆய்வகத்தில் பரிசோதிக்கவும் முடியும்.

டால்ட்டன் பயன்படுத்திய கலைச் சொற்கள் நாம் இப்போது பயன்படுத்தும் சொற்களைப் போல் இல்லையெனினும், அவர் "(1) அணுக்கள் (2) மூலக்கூறுகள் (3) தனிமங்கள்" எனும் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துரைத்தார். உலகிலுள்ள அணுக்களின் மொத்த எண்ணிக்கை மிகுதியெனினும் அணுக்களின் வெவ்வேறு வகைகளின் எண்ணிக்கை குறைவு என்று அவர் தெளிவுபடுத்தினார். (அவருடைய முதல் நூல் 20 தனிமங்களின் அல்லது அணு வகைகளின் பட்டியலைத் தந்தது. இன்று ஏறக்குறைய 100 தனிமங்களை நாம் அறிந்திருக்கிறோம்.)

வெவ்வேறு வகையான அணுக்களின் எடை வேறுபட்டுள்ள போதிலும், ஒரே வகையைச் சேர்ந்த இரு அணுக்கள் பொருண்மை உட்பட எல்லா இயல்புகளிலும் ஒன்றுபோலானவை என்று டால்ட்டன் வலியுறுத்தினார். டால்ட்டன் தமது நூலில் பல்வேறு வகை அணுக்களின் எடைகளைப் பட்டியலிட்டுக் காட்டினார். இதுவே முதலில் தயாரிக்கப்பட்ட அத்தகைய பட்டியலாகும். இது அளவின அணுக் கொள்கையின் முக்கிய இயல்பு.

ஒரே இரசாயனக் கூட்டுப் பொருளின் இரு மூலக்கூறுகள் அதே அணுக்கலவையினாலானவை என்று டால்ட்டன் தெளிவாகக் கூறினார். எடுத்துக்காட்டாக, நைட்ரஸ் ஆக்சைடின் ஒவ்வொரு மூலக்கூறும் இரு நைட்ரஜன் அணுக்களாலும், ஓர் ஆக்சிஜன் அணுவாலும் ஆனது). இதிலிருந்து, ஓர் இரசாயனக் கூட்டுப் பொருள், எவ்வாறு தயாரிக்கப்பட்ட போதிலும், எங்கு கிடைத்த போதிலும், ஒரே எடை விகிதத்திலுள்ள அதே தனிமங்களாலானது என்பது புலனாகின்றது. இதுவே ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் ஜோசப் லூயிஸ் ப்ரூஸ்ட் பரிசோதனை மூலம் கண்டுபிடித்திருந்த "வரையறுக்கப்பட்ட விகிதங்களின் விதி"யாகும்.

டால்ட்டன் தமது கொள்கையை உறுதியுடன் எடுத்துரைத்தார். 20 ஆண்டுகளுக்குள்ளாக அறிவியலார் பெரும்பாலோர் அதனை ஏற்றுக்கொண்டனர். மேலும், இயைபியலார் அவருடைய நூல் கூறிய கீழ்க்கண்ட முறையைப் பின்பற்றினர்: அணுக்களின் எடைகளைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளுங்கள்; இரசாயனக் கூட்டுப் பொருள்களை எடைக்கேற்ப பகுத்துக் கொள்ளுங்கள்; ஒவ்வொரு வகை மூலக் கூறும் அமைந்த அணுக்களின் கலவையைத் தெரிந்து கொள்ளுங்கள். இம்முறை பெரும் வெற்றியைத் தந்தது.

அணுக் கருதுகோளின் முக்கியத்துவத்தை இங்கு எடுத்துரைக்கத் தேவையில்லை எனலாம். அதுவே இயைபியலைப் பற்றிய அறிவின் மையக் கருத்து. மேலும் அது தற்கால இயற்பியலுக்கு ஓர் இன்றியமையாத முன்னுரையாக இருக்கின்றது. டால்ட்டன் காலத்திற்கு முன்னே அணுக்கொள்கை பலமுறை எடுத்துரைக்கப்பட்டுள்ளதால், அவர் இப்பட்டியலில் உயரிடம் பெறவில்லை.

டால்ட்டன் 1766இல் வட இங்கிலாந்திலுள்ள ஈகிள்ஸ்.ஃ.பீல்டு எனும் கிராமத்தில் பிறந்தார். 11 வயதாகும் போது அவர்தம் பள்ளிப் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. அவர் தாமே அறிவியலைப் பயின்றார். அவர் வயதுக்கு மீறிய அறிவாற்றலைப் பெற்றிருந்தார். தம் 12ஆம் வயதில் ஆசிரியரானார். பிறகு அவர் தம் வாழ்க்கை முழுவதும் ஆசிரியராக அல்லது தனிப்பட்ட முறையில் கல்வி கற்பிப்பவராகப் பணியாற்ற வேண்டியிருந்தது. 15ஆம் வயதில் கெண்டல் நகருக்குச் சென்றார். 26ஆம் வயதில் மான்செஸ்டருக்குச் சென்றார். 1844இல் இறக்கும்வரை அங்கேயே வாழ்ந்தார். அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை.

1787இல் டால்ட்டன் வானிலை ஆய்வியலில் ஈடுபட்டார். அப்போது அவருக்கு 21 வயது. 6 ஆண்டுகள் கழித்து அவ்வியலைப் பற்றி ஒரு நூல் வெளியிட்டார். காற்றையும் காற்று மண்டலத்தையும் பற்றி அவர்



ஜான் டால்ட்டன்

ஆய்ந்ததால், அவருக்குப் பொதுவாக வாயுக்களின் இயல்புகள் பற்றிய ஈடுபாடு ஏற்பட்டது. பல பரிசோதனைகளின் பயனாக அவர் வாயுக்கள் பற்றிய இரு முக்கிய விதிகளைக் கண்டுபிடித்தார். அவற்றுள் முதல் விதியை 1801இல் எடுத்துரைத்தார். அதன்படி, ஒரு வாயுவின் கன அளவு அதன் வெப்பநிலைக்கேற்ற விகிதத்திலிருக்கும். (இது பொதுவாக சார்லஸ் விதி எனப்படும். ஏனெனில் சார்லஸ் எனும் ஃபிரெஞ்சு அறிவியலார் டால்டனுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இவ்விதியைக் கண்டுபிடித்தார். ஆயினும் அவர் தாம் கண்டுபிடித்ததை வெளியிடவில்லை). இரண்டாம் விதியை டால்ட்டன் 1801 இல் எடுத்துரைத்தார். அது டார்வினின் குறை அழுத்த விதி எனப்படும்.

1804இல் டால்ட்டன் தமது அணுக்கொள்கையை வகுத்து அணு எடைகளின் பட்டியலைத் தயாரித்திருந்தார். ஆயினும் 'எ நியூ சிஸ்டம் ஆஃப் கெமிக்கல் ஃபிலாசஃபி' எனும் அவருடைய முக்கிய நூல் 1808 வரை வெளிவரவில்லை. அந்நூலே அவருக்குப் புகழைத் தந்தது. பிற்காலத்தில் அவர் பல சிறப்புப் பாராட்டுதல்களைப் பெற்றார்.

டால்ட்டனுக்குச் சில நிறங்களைக் காணமுடியாத பார்வைக் கோளாறு இருந்தது. ஆகவே அவர் அதைப் பற்றி அறிய ஆவல் கொண்டார். அதை ஆழ்ந்து ஆராய்ந்து, அக்கோளாறு பற்றி ஓர் அறிவியல் கட்டுரை வெளியிட்டார். அதுவே அப்பொருள் பற்றிய தெளிவான முதல் வெளியீடாகும்.

**அடுத்த வாரம் அல்பேர்ட் ஐன்ஸ்டைன் வியக்க வைப்பார்**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

-காதில பூ கந்தசாமி-

**போன** வாரம் வடிவேலுவோடை நடத்தின இன்டர்வியூவை படிச்சுப்போட்டு நானும் இன்னொரு வடிவேலுவா மாறியே கேள்விகளையும் கேட்டமாதிரி இருந்திச்சுது எண்டு வாசகர்கள் தெரிவிச்சிருக்கிறியள் எண்டது எனக்கு சந்தோசமாகவும், உற்சாகமாகவும் இருந்திச்சுது. வடிவேலுவை மட்டுமா பேட்டி காணுவியள்? எங்களையும் ஒரு ஓரக்கண்ணாலை காணுங்கோவன் எண்டு எங்கட பொலிரிக்ஸ் வெடிவேலு ஒருவர் ஈ.மெயிலிலை ஒரு வேண்டுகோளை அனுப்பி வச்சிருக்கார். ஏற்கனவே பல வெடிவேலுகளைப் பேட்டி கண்டிருந்தாலும், திரும்பவும் வாய்ப்புக் கேக்கினம். சரி, கண்டிட்டால் போச்சுதெண்டு ஒருக்கால் கண்டனான். பேட்டியை முடிச்சுப் போட்டு சொல்லுங்கோ? யார் அந்த வெடிவேலு எண்டு. சரியே....

**கா.பூ.:** உங்களுடைய பெயர் என்ன எண்டதைச் சொல்லுங்கோ?

**வெடி.:** அதை வாசகர்கள் கடைசியாத்தானே கண்டுபிடிப்பினம். அதுவரைக்கும் வெடிவேலுவாவே இருக்கிறன்.... ஹி....ஹி.... ஹி.... ஏன் தெரியுமோ? ஒரு வகையில வெடிவேலு எண்டதே எனக்குப் பொருத்தமான பேர்தான்.

**கா.பூ.:** சரி, நீங்கள் ஒரு பொலிரிக்ஸ் வெடிகுண்டு எண்டதாலை நேரடியாவே விசயத்துக்கு வருவம். நாட்டின்ர தற்போதைய நிலைமை எந்தத் திசையை நோக்கிப் போகுது?

**வெடி.:** நாட்டின்ர நிலைமை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக போய்க் கொண்டிருக்கு. அதிலையும் இப்ப எங்களுடைய வேலை ஓவர்டைமாகப் போகுது. ஒவ்வொரு எம்பஸியாக ஏறி இறங்கி, மாற்று வழியைத்தான் தேடிக்கொண்டிருக்கிறம் எண்டதை தெளிவு படுத்த வேணும். அதோடை பெடியள் மாற்றுவழியிலை வண்டி கட்டிச்சினமெண்டால், நாங்கள் தஞ்சம் கோரிற வண்டியைக் கட்டவேணும். அதுதான் டு. இன் வன்னாக ரெண்டையும் செய்துகொண்டிருக்கிறம். உண்மையைச் சொல்ல வேணுமெண்டால், தயவு செய்து பெயரைப் பாவிச்சுப் போடாதையுங்கோ.... உந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணவேணும், பெறவேணும் எண்ட நோக்கம் அவைக்கும் இல்லை; கொடுக்கவேணுமெண்ட நோக்கம் இவைக்கும் இல்லை. பாவம் சனங்கள் எண்டதைத் தவிர எதைச் சொல்லுறது. ஆ... இன்னொண்டையும் சொல்லப்போறன். எங்கண்ட நாடு இப்ப எங்களின்ர கொண்ரோலில இல்லை எண்டதுதான் உண்மை. ஏன் தெரியுமோ? தொட்டதுக்கெல்லாம் வெளிநாட்டுக்காரர்தானே மூக்கை நுழைக்கினம். அவ்வளவு ஏன்? யார் எதில கையொப்பமிட வேணுமெண்டதையே சில வெளிநாடுகள்தானே முடிவு செய்யினம்.

**கா.பூ.:** போதும்... போதும்...

**வெடி.:** இஞ்சே.... கா.பூ.... பொலிரிக்ஸைப் பத்திப் பேசினால், பேசிக்கொண்டிருந்தால் போரடிக்கும். வடிவேலுவிட்ட கேட்டமாதிரி, அஜால் குஜாலா கேளுங்கோ... பிளீஸ்...

**கா.பூ.:** அடடா... இதை முதலிலேயே சொல்லக் கூடாதா.... சரி, மூக்குப் பொடியை இன்னும் போடிறியளோ?

**வெடி.:** ம்... இது கேள்வி.... என்ன சொல்லுங்கோ.. நடு பெருவிரலையும், கட்ட விரலையும் பொடிபோடப் பழக்கினதாலை நான் மறந்தாலும் கை அந்த ஸ்ரைலிலேயே போயிடுது. போட்டுப் பழகினதை நிப்பாட்ட முடியலை.

**கா.பூ.:** அது சரி.... மூக்குப் பொடிதான் உங்களை அண்டர் கொண்ரோலிலை வச்சிருக்கெண்டால் அதை யாராலை மாத்த முடியும். அதிருக்கட்டும். சாத்திரமும் பாப்பியள் எண்டு கேள்விப்பட்டனே?

**வெடி.:** ஓ... அதுவோ... பாப்பன்.... பாப்பன்.... அதென்னது முயல் பிடிக்கிற நாயை மூஞ்சையில தெரியும் எண்டிறமாதிரித்தான். அதுவும் எல்லாருக்கும் பார்க்கிறதில்லை. பொம்பிளைப் பிள்ளையளுக்கெண்டால் கொஞ்சம் விருப்பமாப் பாப்பன். ஏன் அதைப் பத்தி ஏதும் ஏடாகூடமாகக் கேள்விப்பட்டியளோ?

**கா.பூ.:** ஓமோம்.... பானையில இருந்தால்தானே அகப்பையில வருமெண்ட மாதிரி, உங்களிண்ட சில்மிஷங்கள் அவ்வப்போது வாறதுதானே. பொம்பிளைப் பிள்ளையளுக்கு சாத்திரம் பாக்கிறது சரிதான். அதுகூட அவையின்ர கையைப் பிடிக்கிற ஒரு சாட்டுத்தான் எண்டும், அதுபோக அடிக்கடி பெட்டையளின்ர முதுகில தட்டிப் பேசுவியளெண்டும் சில பேர் சொல்லினமே.... அது உண்மையா....?

**வெடி.:** நோ.... நோ... யாரோ என்னுடைய எண்ணங்களைப் புரிஞ்சு கொள்ளாமல் இல்லாததையும் பொல்லாததையும் போட்டுக் குடுத்திருக்கினம். நம்பிப் போடாதையுங்கோ..... என்ர ஹெல்த் பொஸிஸன் தெரிஞ்சவைக்குத் தெரியும், உந்தக் காச்சல், தலையிடி மாதிரி லேஸான மேனியா எண்டொரு வருத்தம் இருக்கு. அதின்ர எபெக்ட்டிலதான் கையைப்பிடிக்கிறதும், முதுகில தட்டுறதும். பிளீஸ்... நீங்களாவது என்ர கரன்ட் சிச்சுவேசனைப் புரிஞ்சு கொள்ளுங்கோ.

**கா.பூ.:** அதுக்காக..... சாவகச்சேரியில படைத் தரப்பின்ர வாகனத்தில லேஸாத் தட்டுப்பட்டு முழங்காலிலை உராய்வு பட்ட பொம்பிளைப் பிள்ளையை வலுக்கட்டாயமா சாவகச்சேரி கொஸ்பிட்டலுக்குக்கூட கொண்டு போகாம, பக்கத்தில ஒரு டிஸ்பென்சரியிலைகூட ஒருக்காக் காட்டாம.... உங்கட வாகனத்திலையே யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்து அதைப் பெரிசாக்கி, அந்தப் பெட்டையைத் தொட்டுக் கொண்டே பத்திரிகைகளுக்குப் போஸ் கொடுத்தது எப்புடிச் சரியாகும்?

**வெடி.:** அது... அது... அதுவந்து ஒரு ஆர்வக் கோளாறிலை அப்பிடிச் செய்து போட்டன். அப்பவும் நான் வேணாம் எண்டுதான் சொன்னனான். பெடியள்தான் போஸ் கொடுக்கச் சொல்லிச்சினம். எய்தவனிருக்க அம்பை நோகாதீங்கோ.... புரியுதோ....

**கா.பூ.:** உங்கட கட்டுரைகளை இப்பவெல்லாம் பத்திரிகைகளில அடிக்கடி காணக்கூடியதா இருக்கு. ஏதும் விசேஷமோ....

**வெடி.:** விசேஷமில்லை. பழக்கதோசம்.... என்னதான் எம்.பி.பதவியிலை இருந்தாலும், அடிப்படையில நான் ஒரு பத்திரிகைக்காரன் தான். அது மட்டுமில்லை, அந்தக் காலத்தில என்னை ஓரங்கட்டினவை இப்ப வக்காலத்து வெடிகுண்டில வழியில்லாம பிரசுரிக்கினம். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேணும். அதுதான் எழுதித் தள்ளுறன். போட்டால் கட்டுரை, போடாட்டில் குப்பை. அவ்வளவுதான்.

**கா.பூ.:** அதுவும் சரிதான். அந்தக் காலத்திலை தந்தை செல்வாவை காற்சட்டைக் காந்தியெண்டு எழுதின நீங்கள், இப்ப உங்கட தேசியத் தலைவர் சபாரியிலை திரியிறதைப் பத்தி ஏன் எழுதாமல் இருக்கிறியள்....

**வெடி.:** பாத்தீங்களே.... இவ்வளவு நேரமும் பக்குவமாக் கேட்டுப்போட்டு, இப்ப அடிமடியிலேயே கையை வைக்கிறியள். அவர் சபாரி போட்டாலும், சட்டையே போடாட்டிலும் உயிர்மேலையும் பாவத்துக்குக் கிடைச்ச பதவிமேலையும் விருப்பமிருக்கிறவன் எவனும் விமர்சிக்கப் போறதில்லை. சபாரியைப் பற்றிக் கதைக்கவுமே.... கை, கால் எல்லாம் உதறுது... இத்தோடை இன்டர்வியூவை கட் பண்ணுங்கோ. பிறகு பாப்பம். நான் வைக்கிறன். பா... ஆ... ஆ... ய்.....

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


# இந்த வாரம் உங்கள் பலன்

(28.07.2005 தொடங்கி 03.08.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கர்க்கடகம் - சூரியன், புதன், சனி, சிங்கம் - வெள்ளி, கன்னி - வியாழன், கேது, மீனம் - இராகு, மேடம் - செவ்வாய்.
சந்திரன் மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் இடர், மனக்கிலேசம், யோசனை மிகுதி, பெரியோர் உதவி, குடும்பப் பாரம், பிள்ளைகளால் கவலை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06.



**இடபம் :** (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் அலைச்சல், செலவு மிகுதி, தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், குடும்பச் செலவு, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.



**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் கஷ்டம், செலவு மிகுதி, கடன்படல், உயர்ந்த எண்ணம், பயனுள்ள செயல், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் கெடுதி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 06.



**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பணச் செலவு, அன்னியர் நட்பு, வெளியிட வாசம், குடும்ப மேன்மை, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.



**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் பலிதம், பணவரவு, வெளியிடப் பயணம், செலவு மிகுதி, குடும்பக் கஷ்டம், மறைமுக எதிர்ப்பு, வீண்குறை கேட்டல், உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05.



**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் நன்மை, பணவரவு, உயர்ந்தோர் நட்பு, மனமகிழ்ச்சி, குடும்பப் பொறுப்பு, உறவினர் உபத்திரவம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.



**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் மந்தம், பண விரயம், செலவு மிகுதி, கடன்படல், மனக் கலக்கம், கௌரவக் குறைவு, குடும்பப்பாரம், உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03.



**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் மேன்மை, மனமகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை, அன்னியர் சகாயம், தூர இடப் பயணம், குடும்பக் கவலை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம் :-** 04.




**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் பயம், மறைமுக எதிர்ப்பு, செலவு மிகுதி, பல்சாரார் பகை, குடும்பக் கஷ்டம், கடன் தொல்லை, முதியோர் இழப்பு, உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03.



**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பலிதம், பணவரவு தடை, உயர்ந்த எண்ணம், மனக் குறையதிகம், குடும்பத் தொல்லை, மனைவி வழி கஷ்டம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகள் கெடுதி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02.



**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் அலைச்சல், மனக் குறையதிகம், கடன் தொல்லை, பெரியோர் சகாயம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.



**மீனம் :** (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன மேன்மை, தூர இடப் பயணம், உயர்ந்தோர் நட்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.

Regd. as a News Paper at the G.P.O.(QD/81/NEWS/2004)


# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்.... செய்திகளாய்... நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது


| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Localization : | 13° East |
| Frequency : | 11013 MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |


## குதிரைச் சவாரி



குதிரைகளை அநேகமாக எம்மவர்கள் வேகத்துக்கே ஒப்பிடுவது மரபு. இம்மரபு எல்லாவற்றையும் பொய்யாக்கும் வகையில் இருக்கிறது இந்தத் தகவல். கடல் குதிரைகள் எனப்படும் இவை (படத்தில் உள்ளவை) நகரும் வேகம் 0.016 கிலோ மீற்றர் மணிக்கு. ஆயினும் இவ் உயிரினங்கள் அதிகமாக அங்குமிங்கும் நகராமல் கடல் பாறைகள் மற்றும் ஆழ்கடல் தாவரங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஒரு இடத்திலேயே நின்றுவிடுமாம். நகரப் போனால்தானே வேகம் குறைவு என்று எண்ணி இவைகள் நகர்வதேயில்லையாம்.

## பந்து



இறப்பர் பந்துகளைச் சிறுவர்கள் தமது விளையாட்டுகளுக்குப் பயன்படுத்துவது வழமை. ஆனால், இங்குள்ள இறப்பர் பந்தை இவர்களால் விளையாட முடியுமா தெரியவில்லை. ஏனெனில் இது 4.59 மீற்றர் (15 அடி) சுற்றளவுடையது. அது தவிர, 1415 கிலோ கிராம் நிறையுடையது.

இச்சாதனையை ஜோன் பெயின் எனும் அமெரிக்க நாட்டவரே செய்துள்ளார். இப்பந்து ஜோன் பெயினின் குழந்தை விளையாடுவதற்கா?

## விஷ விளையாட்டு

பாம்பென்றால் படையும் நடுங்குமாம். ஆனால் இங்குள்ளோர்க்கு பாம்புக்கும் பயமில்லை, படைக்கும் பயமில்லை என்கிறார் சீன நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர். இவர், எந்தவிதப் பாம்புகளுக்கும் பயமில்லை என்பதை நிரூபிப்பதற்காகவே சீனாவில் காணப்படும் 100க்கும் அதிகமான விஷப் பாம்புகளைத் தனது உடல் முழுவதும் போர்த்திக்கொண்டு, பார்வையாளர்களைக் கவர்ந்து வருகிறார். இது பற்றி அவரிடம் கேட்டபோது, சிறுவயது முதலே நான் பாம்புகளுடன் பழகி வருகிறேன். நான் பாம்புகளை என்னுடைய நண்பர்களாகவே கருதுகிறேன் என்கிறார். இவர் இதனை இரவு களியாட்ட விடுதி ஒன்றில் செய்துவருகிறார். சாதனையுடன் உழைப்பையும் நடத்திவருகிறார். இதனைப் பார்ப்பதற்காக பல மைல் தூரங்களில் இருந்து கூட உல்லாசப் பயணிகள் வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



## ஆரம்பமும் முடிவும்



அழகான வண்ணத்துப்பூச்சிகளை நாம் நிதம் நிதம் காண்கிறோம். இங்குள்ள இரண்டு உருவங்கள் வண்ணத்துப் பூச்சிகள்தான் நம்புவீர்களா? ஆம் இவை வண்ணத்துப்பூச்சி உருவாவதற்கு முன்னுள்ள மயிர்கொட்டி பருவம். கீழேயுள்ள படமானது மயிர்க்கொட்டி ஒன்றிலிருந்து வண்ணத்துப்பூச்சி வெளிவரும் படமே. அதுபோல மேலேயுள்ளது வண்ணத்துப்பூச்சி வெளிவருகையில் அதன் கூட்டுக்கண்களே. இவ்வளவு அழகான வண்ணத்துப்பூச்சி உருவாவதற்கு முன் எப்படி இருக்கிறது பார்த்தீர்களா. அழகான வண்ணத்துப்பூச்சி வெளிவரும்போது அழகாக இருக்கிறதல்லவா!




## SUPER LUXURY APPARTMENT'S

வெள்ளவத்தையில் சாந்தி நிலையம் வழங்கும் தொடர்மாடி மனைகள் ஏனைய தொடர்மாடி மனைகளுடன் ஒப்பிடும்போது விலையில் மிக மிகக் குறைவு.

| | | | |
|---|---|---|---|
| 1. சாயி சத்யா | 14 ஆவது தொடர்மாடி No. 119, Manning Place, | 750 -850 ச.அடி. 2-3 Bed Rooms | டிசம்பர் 2005 இல் முடிவு பெறும். |
| 2. சாயி ஜோதி | 15 ஆவது தொடர்மாடி No. 27, Fredrica Road, | 950 -1250 ச.அடி. 2-3 Bed Rooms | ஏப்ரல் 2006 இல் முடிவு பெறும். |

(இது இந்து, முஸ்லிம், கிறிஸ்துவ பாடசாலைகள், தேவாலயங்கள், பள்ளிவாசல் சுற்றிவர இருப்பதுடன் மிக விசாலமான தெருவையும் கொண்டுள்ளது.)

| | | | |
|---|---|---|---|
| 3. சாயி வில்லாஸ் | 16 ஆவது தொடர்மாடி No. 7, 40th Lane, off Rajasingha Road | 850 -1175 ச.அடி. 3 Bed Rooms | ஏப்ரல் 2006 இல் முடிவு பெறும். |

இக் கட்டிடமானது அமைதியான சூழலில் பல பாதைகளாலும் சூழப்பட்டுள்ளது.

- இறக்குமதி செய்யப்பட்ட Tiles.
- 9 பேர் செல்லக்கூடிய Mitsubishi Japan Lift.
- Main Bathroom - Geysor, Mixer Tap Hotwater Line
- Lift முன்பாக விசாலமான Lobby வசதி
- 3 Phase மின் இணைப்பு.
- Cable T.V & Intercom வசதி.
- Standby Generator.
- போதியளவு காற்றோட்ட வெளிச்சம் Privacy
- No 1 மரத்தினாலான ஜன்னல், கதவுகள் / துருப்பிடிக்காத அலுமினிய ஜன்னல்கள்.
- Ground Floor - Car Park
- Master Bed Room - A/C இணைப்பிற்கான (Proision) வசதி.

**Shanthi Nilayam Property Developers (Pvt) Ltd.**
7/5, Hamers Avenue, Wellawatta, Colombo 06.
Tel: 2360031, 2501380 E-mail: Singam@sltnet.lk Web: www.saiflats.com